




# தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com








CHENNAI | Volume- 3 | Issue:230 | 06-03-2026 | வெள்ளிக்கிழமை | Free E- Paper | ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி


## இன்றைய பஞ்சாங்கம்

06.03.2026 மாசி 22
வெள்ளிக்கிழமை

---

சூரிய உதயம் 6.27

---

திதி:
இன்று மாலை
06:57 PM வரை திரிதியை
பின்பு சதுர்த்தி.

---

நட்சத்திரம்:
இன்று காலை
10:26 AM வரை அஸ்தம்
பின்பு சித்திரை.

---

யோகம் :
சுபமுகூர்த்த நாள்
சங்கடஹர சதுர்த்தி
வாஸ்து நாள்.

---

அமிர்தாதி யோகம் :
இன்று காலை 6.26 வரை
சித்த யோகம் பின்பு
அமிர்த யோகம்.

---

சந்திராஷ்டமம் :
இன்று காலை
8.23 வரை திருவோணம்
பின்பு அவிட்டம்.

---

நல்ல நேரம்
காலை 9.30 – 10.30.
மாலை 1.30 – 2.30.

---

இராகு காலம்
10.30 – 12.00

---

எமகண்டம்
03.00 – 04.30

---

குளிகை
காலை 07.30 – 09.00

---

பரிகாரம்
வெல்லம்

---

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

# மாநிலங்களவை தேர்தல்: நிதிஷ்குமார் வேட்புமனு தாக்கல்

**பாட்னா, மார்ச்.6:**

பீகாரில் ஐக்கிய ஜனதா தள கட்சியின் தலைவரான நிதிஷ்குமார் முதல்-மந்திரியாக பதவி வகித்து வரும் நிலையில் மாநிலங்களவை உறுப்பினராக முடிவு செய்துள்ளார். இதனையடுத்து, முதல்-மந்திரி பதவியில் இருந்து அவர் விலக உள்ளார் என தகவல் வெளியாகி உள்ளது.



இந்நிலையில் பீகாரில், சட்டசபை செயலாளர் கியாதி சிங் அலுவலகத்தில் மத்திய உள்துறை மந்திரி அமித்ஷா முன்னிலையில், நிதிஷ்குமார் மற்றும் பா.ஜ.க. தேசிய தலைவர் நிதின் நபின் தங்களுடைய வேட்புமனுக்களை இன்று தாக்கல் செய்தனர்.

நடப்பு ஆண்டின் தொடக்கத்தில், பா.ஜ.க. தேசிய தலைவராக நியமிக்கப்பட்ட நபின், சட்டசபையின் மேலவை உறுப்பினராக (எம்.எல்.சி.) பதவி வகித்தவர்.

முதன்முறையாக நாடாளுமன்றத்திற்கு செல்கிறார். இந்த வேட்புமனு தாக்கலின்போது, துணை முதல்-மந்திரிகள் சாம்ராட் சவுத்ரி மற்றும் விஜய் குமார் சின்ஹா ஆகியோரும் உடன் இருந்தனர்.

பா.ஜ.க.விற்கு முதல்-மந்திரி பதவியை வழங்குவதற்காக நிதிஷ்குமார் தன்னுடைய பதவியை ராஜினாமா செய்ய உள்ளார் என்றும் நிதிஷ்குமாரின் மகன் நிஷாந்த் குமார் துணை முதல்-மந்திரியாவார் என்றும் கூறப்படுகிறது.

10 முறை முதல்-மந்திரியாக பதவி வகித்த அனுபவம் கொண்ட நிதிஷ்குமார், எம்.பி. ஆவதற்கு 41 எம்.எல்.ஏ.க்களின் ஆதரவு தேவை. பீகார் சட்டசபையில் ஆளும் ஐக்கிய ஜனதா தளம் மற்றும் பா.ஜ.க. உள்ளிட்ட தேசிய ஜனநாயக கூட்டணியின் ஒட்டு மொத்த எம்.எல்.ஏ.க்களின் பலம் 202 என்ற அளவில் உள்ளது. இதனால், குறைந்தது 4 முதல் அதிக அளவாக 5 எம்.பி.க்கள் வரை இந்த கூட்டணியில் வெற்றி பெறும் வாய்ப்பு காணப்படுகிறது.

# பல்வேறு மாநில ஆளுநர்கள் மாற்றம்: ஜனாதிபதி அறிவிப்பு

**புதுடெல்லி, மார்ச்.6:**



தமிழ்நாடு ஆளுநர் உள்பட பல்வேறு மாநில ஆளுநர்கள் மாற்றம் செய்யப்பட்டு உள்ளனர்.

இதுதொடர்பாக, ஜனாதிபதி மாளிகை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியுள்ளதாவது:

மேற்கு வங்கம் - ஆர்.என்.ரவி
தெலுங்கானா - ஷிவ்பிரதாப் சுக்லா
மகாராஷ்டிரா - ஜிஷ்ணு தேவ் வர்மா
நாகாலாந்து - நந்து கிஷோர் யாதவ்
பீகார் - சையத் அடா ஹஸ்னன்
இமாசல பிரதேசம் - கவிந்தர் குப்தா
டெல்லி - தரன்ஜித் சந்து
லடாக் - வினய் குமார் சக்சேனா ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கேரள ஆளுநரான ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகருக்கு தமிழக ஆளுநர் பொறுப்பு கூடுதலாக வழங்கப்பட்டுள்ளது.

மேற்கு வங்க ஆளுநராக இருந்த ஆனந்த போஸ் பதவி விலகினார். இந்த நியமனங்களுக்கு ஜனாதிபதி திரவுபதி முர்மு ஒப்புதல் அளித்துள்ளார் என தெரிவித்துள்ளது.

## தமிழ்நாடு ஆளுநராக (பொறுப்பு) ஆர்.வி. ஆர்லேகர் நியமிக்கப்பட்டுள்ளார்.



கேரள ஆளுநராக உள்ள இவருக்கு, தமிழக ஆளுநராக கூடுதல் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

தமிழக ஆளுநராக இருந்த ஆர்.என். ரவி, மேற்கு வங்க ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார்.

தமிழ்நாடு, கேரளம், மேற்கு வங்க மாநிலங்களுக்கு விரைவில் சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், ஆளுநர்கள் மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக குடியரசுத் தலைவர் மாளிகை வெளியிட்டுள்ள அறிவிப்பின்படி 9 மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களில் ஆளுநர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

# தமிழ்நாட்டின் 6 மாநிலங்களவை உறுப்பினர்கள் அறிவிப்பு

**சென்னை, மார்ச் 6:**

தமிழ்நாட்டிலிருந்து மாநிலங்களவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட 6 உறுப்பினர்களின் பதவிக்காலம் வரும் ஏப்ரல் 2 ஆம் தேதியுடன் நிறைவடைகிறது.



இதில், திமுக சார்பில் திருச்சி சிவா, என்.ஆர். இளங்கோ, அந்தியூர் செல்வராஜ், கனிமொழி சோமு, அதிமுகவின் தம்பிதுரை மற்றும் தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் ஜி.கே. வாசன் ஆகியோரின் பதவிக்காலம் முடிவடைகிறது.

இந்த நிலையில், தமிழ்நாடு உட்பட நாட்டில் 10 மாநிலங்களில் காலியாக உள்ள 37 மாநிலங்களவை இடங்களுக்கு மார்ச் 16 ஆம் தேதி தேர்தல் நடைபெறும் என தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.



மாநிலங்களவை உறுப்பினர் பதவிக்கான வேட்புமனுத் தாக்கல் இன்றுடன் நிறைவடையவுள்ளது.

தமிழ்நாட்டில் காலியாகவுள்ள 6 இடங்களில் எம்.எல்.ஏ.க்கள் எண்ணிக்கையின் அடிப்படையில் 4 இடங்கள் திமுகவுக்கும் 2 இடங்கள் அதிமுகவுக்கும் கிடைக்கும்.

திமுக கூட்டணியில் தேமுதிகவுக்கு ஒரு மாநிலங்களவை இடமும், காங்கிரஸுக்கு ஒரு மாநிலங்களவை இடமும் ஒதுக்கப்பட்டது. அதிமுக தரப்பில் பாமகவுக்கு ஒரு இடம் ஒதுக்கப்பட்டது.

இந்த நிலையில், அந்தந்தக் கட்சிகள் தங்களின் வேட்பாளர்களின் பெயர்களை அறிவித்துள்ளனர்.

திமுகவின் திருச்சி சிவா, பேராசிரியர் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், அதிமுக தம்பிதுரை, காங்கிரஸ் கிறிஸ்டோபர் திலக், பாமக அன்புமணி, தேமுதிக எல்.கே. சுதீஷ் ஆகியோர் போட்டியிடுகின்றனர்.

தம்பிதுரை 5 முறை மக்களவை உறுப்பினராகவும், அதில், இருமுறை மக்களவை துணைத் தலைவராகவும், மத்திய அமைச்சராகவும் பதவி வகித்துள்ளார். 2019 மக்களவைத் தேர்தலில் காங்கிரஸின் ஜோதி மணியிடம் தோல்வியடைந்த நிலையில், 2020-ல் மாநிலங்களவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டார்.

திருச்சி சிவா தொடர்ந்து 6-வது முறையாக மாநிலங்களவைக்கு தேர்வாகவுள்ளார்.பாமகவின் அன்புமணி 3-வது முறையாக தேர்வாகவுள்ளார். இவர் மத்திய அமைச்சராக இருந்துள்ளார்.

பேராசிரியர் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், கிறிஸ்டோபர் திலக், எல்.கே. சுதீஷ் ஆகியோர் முதல்முறையாக மாநிலங்களவைக்கு செல்லவுள்ளனர்.

# பிரதமர் மோடி, பின்லாந்து அதிபர் அலெக்சாண்டர் ஸ்டப் சந்திப்பு



**புதுடெல்லி, மார்ச் 6:**

பிரதமர் நரேந்திர மோடியின் அழைப்பை ஏற்ற பின்லாந்து அதிபர் அலெக்சாண்டர் ஸ்டப் 4 நாள் பயணமாக நேற்று இந்தியா வந்தார்.

டெல்லி பாலம் விமான நிலையத்திற்கு தனி விமானத்தில் வந்த பின்லாந்து அதிபரை, வெளியுறவுத்துறை இணை மந்திரி கீர்த்தி வர்தன் சிங் வரவேற்றார்.

இந்நிலையில், பின்லாந்து அதிபர் அலெக்சாண்டர் ஸ்டப், பிரதமர் மோடியுடன் இன்று பேச்சுவார்த்தை நடத்தினார். டெல்லியில் உள்ள ஐதராபாத் இல்லத்தில், இந்த சந்திப்பு நடைபெற்றது.

இந்த சந்திப்பின் போது இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவதுவது வர்த்தகம் உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் குறித்து ஆலோசிக்கப்பட்டது.

அலெக்ஸாண்டர் ஸ்டப் பின்லாந்து அதிபராக இந்தியாவுக்கு வருவது இதுவே முதல் முறையாகும். இன்று மாலை ஜனாதிபதி திரவுபதி முர்முவை ராஷ்டிரபதி பவன்-இல் சந்திக்க உள்ளார்.இதையடுத்து துணைகுடியரசு தலைவர் சி. பி. ராதாகிருஷ்ணனையும் மரியாதை நிமித்தமாக சந்திக்கிறார்.

# இறுதிப்போட்டியில் இந்தியா! இங்கிலாந்தை வீழ்த்தி அபாரம்!

## டி20 உலக கோப்பை 2026 தொடரின் இறுதி ஆட்டத்துக்கு இந்திய அணி தகுதி

**புதுடெல்லி, மார்ச் 6:**

ஐசிசி டி20 உலகக் கோப்பைத் தொடரில் மும்பை வான்கடே திடலில் இன்று (மார்ச் 5) நடைபெற்ற இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் இந்தியா மற்றும் இங்கிலாந்து அணிகள் விளையாடின. அதில், முதலில் பேட்டிங் செய்து இந்திய அணி நிர்ணயித்த 254 எனும் இமாலய இலக்கை இங்கிலாந்து அணியால் எட்ட முடியவில்லை.



இங்கிலாந்து பேட்ஸ்மென்கள் அதிரடி காட்டிய போதிலும், கடைசி 2 ஓவர்களில் வெற்றிக்கு 39 ரன்கள் தேவைப்பட்டது. எனினும், 19-ஆவது ஓவரில் 9 ரன்கள் மட்டுமே எடுக்கப்பட்டதால் கடைசி ஓவரில் இங்கிலாந்து வெற்றிக்கு 30 ரன்கள் தேவைப்பட்டது. இறுதியில், அந்த அணி 20 ஓவர்களில் 246 ரன்கள் குவித்தது.

இதையடுத்து, இந்திய அணி 7 ரன்கள் வித்தியாசத்தில் த்ரில் வெற்றி பெற்றது. இங்கிலாந்து அணியில் அதிகபட்சமாக ஜேகோப் பெத்தேல் 48 பந்துகளில் 105 ரன்கள் குவித்து கடைசி ஓவரில் ஆட்டமிழந்தார்.

முன்னதாக, இந்திய அணியில் அதிகபட்சமாக சஞ்சு சாம்சன் 42 பந்துகளில் 89 ரன்கள் எடுத்தார். ஷிவம் துபே 25 பந்துகளில் 43 ரன்கள் எடுத்தார். ஹார்திக் பாண்டியா 12 பந்துகளில் 27 ரன்களும் திலக் வர்மா 7 பந்துகளில் 21 ரன்களும் எடுத்தனர்.

இதனையடுத்து, வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் டி20 உலக கோப்பை இறுதி ஆட்டத்தில் நியூஸிலாந்துடன் இந்தியா பலப்பரீட்சை நடத்துகிறது.







# திருக்குறள் குறள்-550

கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல்
பைங்கூழ் களைகட் டதனொடு நேர்



கொடியவர் சிலரைக் கொலைத்தண்டனையால் அரசன் ஒறுத்தல் பயிரைக் காப்பாற்றக் களையைச் களைவதற்க்கு நிகரான செயலாகும்.

## சிந்திக்க ஒரு நொடி



தன்னைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முடியாத எந்த மனிதனும்..

உயர்ந்ததாக சரித்திரம் இல்லை

**ஆர்.சுந்தரராஜன்**
சிதம்பரம்-608001.

## கோலியனூர் ஸ்ரீவரதராஜ பெருமாள் கோவிலில் 23 வது நாள் மண்டல பூஜை!



**விழுப்புரம், மார்ச் 06:** விழுப்புரம் தாலுகா , கோலியனூர் பகுதியில் கி.பி.,6ம் நூற்றாண்டில் பல்லவ மன்னர்கள் காலத்தில் கட்டப்பட்ட பூமி நாயகி நீளா நாயகி சமேத ஸ்ரீவரதராஜ பெருமாள் கோயிலில் கும்பாபிஷேகம் நடந்து முடிந்தது. இதையடுத்து தொடர்ந்து மண்டல பூஜைகள் தினமும் நடந்து வருகிறது. இந்நிலையில் தற்போது 23ஆம் நாளாக மண்டல பூஜை அபிஷேகம் நடந்தது. இதில் பூமி நாயகி நீளா நாயகி சமேத ஸ்ரீ வரதராஜ பெருமாள் சர்வ அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள் பாலித்தார். இந்த மண்டல பூஜையில் கலந்து கொண்ட பக்தர்கள் அனைவருக்கும் பிரசாதங்கள் விநியோகம் செய்யப்பட்டது. இந்த 23 வது நாள் மண்டலாபிஷேகத்தை உபயதாரராக இருந்து நடத்தியவர்கள் கோலியனூர் நெடுந் தெருவைச் சேர்ந்த R. கலிவரதன், K . பிரபாகரன், K. வெங்கடேசன் குடும்பத்தினர் ஆவர். இந்த மண்டல அபிஷேக பூஜையை மன்னார்குடி அர்ச்சகர் ஸ்ரீராஜகோபால் விமரிசையாக செய்திருந்தார்.

## போர் மன்னர் லிங்கேஸ்வரர் (போத்த ராஜா) கும்பபடையல் மற்றும் சாமி திருவீதி உலா



**திருவண்ணாமலை, மார்ச்06:** திருவண்ணாமலை மாவட்டம் துரிஞ்சாபுரம் ஒன்றியத்தைச் சேர்ந்த மங்கலம் கிராமத்தில் 194 ஆம் ஆண்டு திருவிழா...போர் மன்ன லிங்கேஸ்வரருக்கு (போத்தராஜா ) வாழை இலையில் (டன் கணக்கில்) கும்ப படையல் வைத்து மகா தீபாராதனையும் நடைபெற்றது. பின்னர் போர் மன்ன லிங்கேஸ்வரர் (போத்த ராஜா) சாமி மேளதாளங்களுடன் திருவீதி உலா நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் சாமி வடம் பிடித்து திருவீதி உலாவும் நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் போத்தராஜாவை வேண்டி அருள் பெற்றனர்.

## சிறப்பு மெமு ரயில் சேவை



திருநள்ளாறு கோயில் விழாவை முன்னிட்டு தென்னக ரயில்வே சார்பில் விழுப்புரம் நாகப்பட்டினம் இடையே முன்பதிவில்லாத சிறப்பு மெமு ரயில் சேவை இயக்கப்பட உள்ளது. இந்த ரயில் திருநள்ளாறு வழியாக இயங்கும் என ரயில்வே அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# புனருத்தாரண, ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் விழா



**ஆந்திர பிரதேசம், மார்ச் 06:** மேற்கு கோதாவரி மாவட்டம், பெனுகொண்டா நகரில் அமைந்திருக்கும் ஸ்ரீ நகரேஸ்வரர்,ஸ்ரீ மகிஷா சுரமர்த்தினி, ஆர்ய வைஸ்யருக்கு குல தெய்வமான ஸ்ரீ வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மனுக்கு புனருத்தாரண, ஜீரோத்தாரண அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் விழா ஆலயத்தினை 700 ஆண்டுகளுக்குப் பிறகு புனரமைத்து மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

கலச பூஜை, ஹோமங்கள், மங்கள வாத்தியங்கள் இசைக்க, மின்விளக்குகளால், வண்ண மலர்களால் தோரணங்களால் அலங்கரித்து அனைத்து தெய்வங்களுக்கும் அபிஷேகங்கள், அலங்காரங்கள், வண்ண மலர் மாலைகளால் அலங்காரங்கள், வேத மந்திரங்கள் ஒலிக்க, கலசத்திற்கும் பூஜை செய்து புனித புனித கலச நீர் ஊற்றி மகாதீபாரதனையும் நடைபெற்றது.

லட்சக்கணக்கான பக்தர்கள் மகா கும்பாபிஷேக விழாவில் கலந்துகொண்டு ஸ்ரீவாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மனை ஜெய் வாசவி ஜெய் ஜெய் வாசவி என்று முழக்கமிட்டு வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் புனித கலச நீர் தெளிக்கப்பட்டது.

மகா கும்பாபிஷேக திருப்பணிகளை முன் நின்று நடத்திய வாசவி திருப்பணி கமிட்டி தலைவர். அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது. கும்பாபிஷேகம் வெகு சிறப்பாக நடைபெற்றது.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

# ஸ்ரீ வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலய கும்பாபிஷேகவிழா



**திருச்சி மார்ச்06:** ஸ்ரீ வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலய கும்பாபிஷேக விழாவை முன்னிட்டு 4. 3.2026 காலை 6:30 மணிக்கு காவிரி கரையிலிருந்து ஆர்ய வைஸ்ய பெருமக்கள் கலச தீர்த்தம் கொண்டு வருதல், முதல் நாள் பூஜைகள் நடைபெற்றது. காலை 7:00 மணிக்கு மங்கள இசை, விநாயகர் வழிபாடு, புண்யாஹவாசனம், பஞ்சகவ்ய பூஜை.. காலை 8 மணிக்கு ஸ்ரீமகா கணபதி ஹோமம், ஸ்ரீ லட்சுமி ஹோமம், நவகிரஹ ஹோமம்... காலை 9 மணிக்கு கோ பூஜை, பரி பூஜை, வேதிகா அர்ச்சனை... காலை 10 மணி முதல் 11 :30 மணி வரை வாஸ்து சாந்தி பூஜை, ஹோமம் பிரவேச பலி... மாலை 4:00 மணிக்கு எஜமானர் சங்கல்பம், மாலை 5:00 மணிக்கு மங்கள இசை, அங்குரார்பணம், ரக்ஷாபந்தனம், கும்ப அலங்காரம்,மாலை நிகழ்ச்சிகள்:மாலை 5:30 மணிக்கு (சப்த ஸ்வரங்கள் குழுவினர்),பக்தி பாடல்கள், மாலை 5:50 க்கு (M.சமீக்க்ஷா) பரதநாட்டியம் நிகழ்ச்சி,மாலை 6:10 மணிக்கு (கான ஸ்ரீ) பக்தி பாடல்கள், மாலை (S.பிராத்தனா) 6:30 மணிக்கு பரதநாட்டியம் நிகழ்ச்சி, இரவு 7:00 மணிக்கு கலா கர்ஷணம்.. இரவு 8:00 மணிக்கு ஏகபோக நாயகியாக விளங்கும் அன்னைக்கு முதல் கால யாக சால பூஜை திரவ்ய சமர்ப்பணம் இரவு 9 மணிக்கு பூர்ணாஹீதி, மகா தீபாரதனையும் நடைபெற்றது.

ஆர்ய வைஸ்ய ஆண்கள், பெண்கள் அனைவரும் பூஜைகளிலும், நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டு ஸ்ரீவாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மனை வேண்டி அருள் பெற்றனர். பூஜைகள் வெகு சிறப்பாக நடைபெற்றது. அனைவருக்கும் காலை, இரவு சிற்றுண்டி வழங்கப்பட்டது. திருச்சி ஸ்ரீகன்யகா பரமேஸ்வரி அம்மன் கோவில் நிர்வாகம், திருச்சி ஸ்ரீ ஆர்ய வைஸ்ய நூட்ட இப்பன்றம் நகர்வாரும் கமிட்டி.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை.**

# மறைந்த திரு.ஈ.வெ.கி. சம்பத் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை





**சென்னை, மார்ச் 06:** தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி முன்னாள் துணைத் தலைவர், சொல்லின் செல்வர் மறைந்த திரு.ஈ.வெ.கி. சம்பத் அவர்களின் 101-வது ஆண்டு பிறந்த தினத்தை முன்னிட்டு நேற்று 05-03-2026, சென்னை சத்தியமூர்த்தி பவனில், அவரது திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் வடசென்னை கிழக்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் மதாரம்மா கனி பாரூக் அவர்கள் தனது மாவட்டத்திற்கு உட்பட்ட நிர்வாகிகளுடன் கலந்து கொண்டு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

## வேலூர் சட்டமன்ற உறுப்பினர் பா. கார்த்திகேயன் இஸ்லாமிய குடும்பங்களுக்கு ரமலான் சீர்வரிசை வழங்கினார்



**வேலூர், மார்ச் 06:** வேலூரில் இன்று புனித ரமலான் மாதத்தை முன்னிட்டு வேலூர் சட்டமன்ற உறுப்பினரும் திமுக மாநில கழக செயலாளர் முன்னாள் மேயருமான திரு ப. கார்த்திகேயன் அவர்கள் தலைமையில் இன்று இஸ்லாமிய பெருமக்களுக்கு ரமலான் சிறப்பு பரிசுகள் வழங்கப்பட்டன. வேலூர் ராஜா திரையரங்க எதிரில் நடைபெற்ற இந்த விழாவில் சுமார் 7073 இஸ்லாமிய குடும்பங்களுக்கு பிரியாணி தேவையான மளிகை பொருட்கள் அடங்கிய தொகுப்பு வழங்கப்பட்டது .மேலும் குடும்பத்திற்கு தலா 200 ரூபாய் ரொக்க பணமும் வழங்கப்பட்டது. வேலூர் பகுதியைச் சேர்ந்த இஸ்லாமிய மக்கள் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தனர் நீண்ட வரிசையில் நின்று பொருட்களை பெற்றுச் சென்றார்கள். எம்எல்ஏவுக்கு நன்றியை தெரிவித்துக் கொண்டார்கள். இந்த நிகழ்வில் கட்சி நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

## இந்தியப் பெருங்கடல் பகுதிகளிலும் மற்றொரு சுழற்சி



தெற்கு வங்கக்கடலின் மத்திய பகுதிகள் மற்றும் பூமத்திய ரேகைக்கு அருகிலுள்ள இந்தியப் பெருங்கடல் பகுதிகளிலும் மற்றொரு சுழற்சி உருவாகியுள்ளது.

## மதுரை சோழவந்தான் படித்துறை சனீஸ்வரர் ஆலயம் பக்தர்களை அதிகம் ஈர்த்து



சனிப்பெயர்ச்சி 2026யை முன்னிட்டு திருநள்ளாறுக்கு மாற்றாக மதுரை சோழவந்தான் படித்துறை சனீஸ்வரர் ஆலயம் பக்தர்களை அதிகம் ஈர்த்து வருகிறது.

## பிரதமர் நரேந்திர மோடி பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மேக்ரானுடன் தொலைபேசியில் ஆலோசனை நடத்தினார்



மேற்கு ஆசியாவில் போர்ச் சூழல் தீவிரமடைந்து வரும் நிலையில், பிரதமர் நரேந்திர மோடி நேற்று பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மேக்ரானுடன் தொலைபேசியில் ஆலோசனை நடத்தினார். இந்த உரையாடலின் போது, பிராந்தியத்தில் நிலவும் தற்போதைய நிலை குறித்து இரு தலைவர்களும் தங்கள் ஆழ்ந்த கவலையைப் பகிர்ந்து கொண்டனர்.

# மானிய விலையில் பெண்களுக்கு ஆட்டோ வழங்கும் நலத்திட்டம்




**காஞ்சிபுரம், மார்ச் 06:** காஞ்சிபுரம் மாவட்டம் திருப்போரூர் சட்டமன்ற தொகுதி கேளம்பாக்கத்தில் முதலமைச்சரின் வெல்லும் தமிழ் பெண்கள் திட்டத்தின் கீழ் மானிய விலையில் பெண்களுக்கு ஆட்டோ வழங்கும் நலத்திட்டம் நடைபெற்றது, இவ்விழாவில் சிறு குறு நடுத்தர தொழில் வளர்ச்சி, நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியதுறை அமைச்சர் தாமு அன்பரசன் கலந்துகொண்டு பெண்களுக்கு ஆட்டோக்களை வழங்கினார், தமிழக முதல்வர் மு க ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு கேளம்பாக்கத்தில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான வெற்றிக்கோப்பையை கேளம்பாக்கம் ஊராட்சி மன்ற தலைவர் ராணி எல்லப்பன் வழங்கினார்

## அய்யா வைகுண்டரின் 192-வது அவதார தின விழா



அய்யா வைகுண்டரின் 192-வது அவதார தின விழாவானது திருநெல்வேலியில் பக்தி பரவசத்துடன் கொண்டாட்டங்கள் நடைபெற்றன.



# தேர்தல் கொண்டாட்டம் 2026





## இவர்கள் கூறுவதென்ன?

### "தவெகவினரை உளவியல் ரீதியாக விஜய் பக்குவப்படுத்த வேண்டும்" - ஹெச்.ராஜா அறிவுரை



**சென்னை, மார்ச் 6:**

பாஜக மூத்த தலைவர் ஹெச். ராஜா வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'தவெக தலைவர் திரு. விஜய் அவர்கள் கலந்துகொண்ட கரூர் பொதுக்கூட்டத்தில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்த சோக நிகழ்வு ஏற்கனவே நடந்து முடிந்து சில மாதங்கள் கூட ஆகாத நிலையில்...

இன்றைய தினம் தஞ்சாவூர் மாவட்டம் செங்கிப்பட்டியில் நடைபெற்ற தவெக மாநாட்டில் கலந்துகொள்ள வருகை தந்த விஜய்யை காணும் ஆர்வத்தில் அவரது வாகனத்தை அவரது ரசிகர்களும், தொண்டர்களும் இருசக்கர வாகனங்களில் அதிவேகமாக பின்தொடர்ந்து சென்றதில் மிகப்பெரிய சாலை விபத்து ஏற்பட்டு இருசக்கர வாகனங்களில் சென்ற இளைஞர்கள் சிலர் ஆபத்தான நிலையில் தஞ்சையிலுள்ள மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருப்பதாக வந்துள்ள தகவல்கள் கவலையளிப்பதாக உள்ளது. தவெக நடத்தும் நிகழ்ச்சிகளில் தனி மனித கட்டுப்பாடோ, துல்லியமான திட்டமிடலோ, பாதுகாப்பு நடவடிக்கைகளோ, எதுவுமே பின்பற்றப்படாமல் ஒழுங்கு முறையற்ற ஒரு ஆவேச கூட்டம் நடைபெறுவது போலவே இருக்கிறது. தவெக தலைவர் விஜய் தன்னுடைய ரசிகர்களுக்கும், தவெக தொண்டர்களுக்கும் தக்க அறிவுரை கூறி இனிவரும் காலங்களில் பக்குவத்தோடு தனது கட்சியினர் நடந்தகொள்ளும் அளவிற்கும், தவெக நிகழ்ச்சிகளில் தனது கட்சியினர் கலந்துகொள்ளும் போது அவரது கட்சியினர் பொது அமைதிக்கு ஊறு விளைவிக்காதவாறும், தவெக நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளும் இளைஞர்களின் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் பாதுகாப்பாக நிகழ்ச்சி முடிந்து திரும்பி தங்களுடைய வீடுகளுக்கு வரும் வரை ஒருவித அச்சத்துடனேயே இருப்பதை இனிவரும் காலங்களில் தவிர்க்கும் வகையிலும் அவருடைய கட்சியினருக்கு அறிவுரை கூறி உளவியல் ரீதியாக அவர்களை பக்குவப்படுத்த வேண்டும் என அவருக்கு அறிவுறுத்துகிறேன்' எனத் தெரிவித்தார்.

### 'பயிர்க் கடன் தள்ளுபடி முதல் படிப்புச் செலவு வரை' - விஜய் பட்டியலிட்ட வாக்குறுதிகள்



**சென்னை, மார்ச் 6:**

தஞ்சாவூர் மாவட்டம் செங்கிப்பட்டி அருகே நடைபெற்ற தவெக நிர்வாகிகள் மற்றும் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு அக்கட்சியின் தலைவர் விஜய் கலந்துகொண்டு பேசினார். அப்போது அவர் வெளியிட்ட வாக்குறுதிகள்:

› "உரம் பதுக்கி வைக்கப்படுவதாக செய்திகள் வெளியாகின. தவெக ஆட்சிக்கு வந்ததும் உரத் தட்டுப்பாடு இல்லாமல் பார்த்துக் கொள்ளப்படும். › 5 ஏக்கர் வரை நிலமுள்ள விவசாயிகளின் பயிர்க் கடன் முழுமையாக ரத்து செய்யப்படும். அதற்கு மேல் நிலமுள்ளவர்களுக்கு 50% வரை கடனை ரத்து செய்ய சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து உறுதியாக நடவடிக்கை எடுப்போம். திமுகவைப் போல அனைவருக்கும் என சொல்லிவிட்டு அதில் தகுதி பார்த்து பாகுபாடு காட்ட மாட்டோம். அனைத்தையும் வெளிப்படையாக அறிவிப்போம். › 2 ஏக்கர் வரை நிலமுள்ள விவசாயிகள் மற்றும் நிலமற்றவர்கள் குடும்பத்தில் யாரும் மாநில, ஒன்றிய அரசு ஊழியராக இல்லாமலிருக்கும் பட்சத்தில், அவர்களது பிள்ளைகளின் பொறியியல், மருத்துவம் உள்ளிட்ட தொழிற்கல்வி முதல் அனைத்து வகையான படிப்பின் முழு செலவுகளையும் அரசே ஏற்கும். › ஒன்றிய அரசு நெருக்கடியே கொடுத்தாலும் விவசாயிகளுக்கு எதிரான எந்த ஒரு திட்டத்தையும் நாங்கள் ஏற்க மாட்டோம்; முழுமையாக நிராகரிப்போம். விவசாயிகள் பக்கமே நமது ஆட்சி நிற்கும்.

› நெல் கொள்முதல் நிலையங்களில் ஒரு பைசா கமிஷன் கூட வாங்காமல் பார்த்து கொள்ளப்படும். கமிஷன் வாக்குபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

› 500 ரேஷன் கார்டுகளுக்கு ஒரு ரேஷன் கடை அமைக்கப்படும். அரிசி தவிர்த்து மற்ற ரேஷன் பொருட்கள் பாக்கெட்டில் விநியோகிக்கப்படும். › கல்வி, மருத்துவம், ரேஷன், குடிநீர், பஸ் வசதி போன்ற அடிப்படை விஷயங்களுக்குதான் முதலில் முக்கியத்துவம் கொடுக்கப்படும். › நமது குழந்தைகள், பெண்கள், இளைஞர்களின் வாழ்க்கைக்கு முன்னுரிமை கொடுக்கப்படும். அரசு வேலை வாய்ப்புகள் மட்டுமல்லாமல் தனியார் வேலை வாய்ப்புகளுக்கான உத்தரவாதத்தையும் வழங்க வேண்டும். அப்படி செய்துவிட்டால் அவர்களுக்கான ரூட்டை நமது இளைஞர்களே தேர்ந்தெடுத்துக் கொள்வார்கள்.

இத்தனை கோடி அத்தனை கோடி என விளம்பரம் மட்டும் செய்யாமல் உண்மையான ஒப்பந்தம் போட்டு வெள்ளை அறிக்கை வெளியிட்டு அதை செயல்படுத்தினாலே அனைத்தும் தன்னால் நடக்கும்" என்றார் விஜய். தஞ்சை மண்ணின் பெருமையை உணர்த்தும் விதமாக விஜய் பச்சை நிற துண்டு அணிந்திருந்தது கவனிக்கத்தக்கது.

பின்னர், 'எங்கள் ஓட்டு எங்கள் உரிமை, எங்களை யாரும் விலைக்கு வாங்க முடியாது. எங்கள் ஓட்டு விசில் சின்னத்துக்கு தான்; யாரையும் நம்பி ஏமாற மாட்டோம். எங்கள் வார்த்தையில் இருந்து மாற மாட்டோம், இது நிஜம்' என்ற உறுதிமொழியை தொண்டர்களை ஏற்க வைத்தார்.

## "கூட்டணிக் கட்சிகளுக்கான தொகுதி எண்ணிக்கை முடிவாகிவிட்டது" - பழனிசாமி அறிவிப்பு



அதிமுக மாவட்ட செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் சென்னை ராயப்பேட்டையில் உள்ள கட்சி தலைமை அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது. பொதுச்செயலாளர் பழனிசாமி தலைமையில் நடைபெற்ற ஆலோசனை கூட்டத்தில், மக்களை காப்போம்: தமிழகத்தை மீட்போம் பிரச்சாரம் மற்றும் அதிமுக சார்பில் அறிவிக்கப்பட்ட 16 தேர்தல் வாக்குறுதிகள் மக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ள தாக்கம், தற்போது ஆற்றி வரும் தேர்தல் பணிகள் மற்றும் 'விடியா ஆட்சி: உங்கள் வீட்டு பில்-லே சாட்சி' பிரச்சாரம் எத்தனை வீடுகளை சென்றடைந்தது என்பது குறித்து மாவட்ட செயலாளர்களிடம் கேட்டறிந்தார். பின்னர் கூட்டத்தில் அவர் பேசியதாவது:

அதிமுக கூட்டணி கட்சிகளுக்கு ஒதுக்க வேண்டிய தொகுதிகள் எண்ணிக்கை முடிவாகி இறுதி வடிவம் பெற்றுள்ளது. விரைவில் அறிவிக்கப்படும். அதிமுக சார்பில் 3 கட்டங்களாக 16 தேர்தல் வாக்குறுதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன. அதை வீடு வீடாக கொண்டு போய் சேர்க்க வேண்டும். அதற்கான துண்டு பிரசுர மாதிரியும் உங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும் 'விடியா ஆட்சி: உங்கள் வீட்டு பில்-லே சாட்சி' பிரசாரத்தையும் தீவிரப்படுத்துங்கள். தேர்தல் அறிவிக்கப்பட்டவுடன், திமுகவுக்கு ஆதரவாக செயல்படும் அதிகாரிகள் தொடர்பாகவும், தேர்தல் விதிமீறல்கள் தொடர்பாகவும் அந்தந்த மாவட்ட அதிமுக வழக்கறிஞர் அணியுடன் இணைந்து தேர்தல் ஆணையத்தில் புகார் அளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆளுங்கட்சி பண பலம், அதிகார பலத்தை பிரயோகிக்கும். அதை அதிமுகவினர் அனுமதிக்கூடாது. இவ்வாறு அவர் பேசினார்.

கூட்டத்தின் முடிவில் முன்னாள் அமைச்சர் டி.ஜெயக்குமார் செய்தியாளர்களிடம் கூறும்போது, "விஜய் ஒரு கை தேர்ந்த நடிகர். அவர் ஒருமுறையாவது பத்திரிகையாளரை சந்திக்க வேண்டும். எழுதி கொடுத்த ஸ்கிரிப்டை சிறப்பாக பேசும் ஒரு நடிகராகவே அவரை பார்க்க வேண்டும். விஜய் எங்கள் பக்கம் திரும்பினால் வாங்கி கட்டிக்கொள்வார். அரசு பணத்தை எவ்வளவு வாரி இரைத்தாலும் திமுக வெற்றிபெற முடியாது" என்றார்.

இக்கூட்டத்தில் கட்சியின் அவைத் தலைவர் தமிழ்மகன் உசேன், துணைப் பொதுச்செயலாளர்கள் கே.பி.முனுசாமி, நத்தம் விஸ்வநாதன், பொருளாளர் திண்டுக்கல் சீனிவாசன், தலைமை நிலைய செயலாளர் எஸ்.பி.வேலுமணி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

ராஜ்யசபா வேட்பாளர் தம்பிதுரை: மாநிலங்களவை எம்.பி. பதவிக்கான வேட்புமனு தாக்கல் இன்று நிறைவடைகிறது. அதிமுக சார்பில் 2 வேட்பாளர்களை நிறுத்த முடியும். இப்போது எம்.பி. பதவி காலத்தை நிறைவு செய்யும் தம்பிதுரை, தனக்கு வாய்ப்பு கேட்டிருந்தார். ஆனால், கட்சியின் 2026 தேர்தல் நலன் கருதி, ஓபிஎஸ் அதிமுகவில் ஏற்படுத்திய வெற்றிடத்தை நிரப்ப, அவரது முக்குலத்தோர் சமூகத்தில் இருந்து ஒருவரை நியமிக்க வேண்டும் என்று பழனிசாமி முடிவு செய்திருந்தார். ஆனால், தம்பிதுரை, பாஜக மூலமாக அழுத்தம் தருவதாக கூறப்பட்டது. இந்நிலையில், அதிமுகவின் ராஜ்யசபா வேட்பாளராக தம்பிதுரையை கட்சியின் பொதுச்செயலாளர் பழனிசாமி நேற்றிரவு அறிவித்தார். இன்னொரு இடம் பாமகவுக்கு ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அதிமுக அறிவித்துள்ளது. அந்த இடத்தில் பாமக தலைவர் அன்புமணி போட்டியிடுவார் என்று தகவல் வெளியாகி உள்ளது.

## புதிய கட்சி தொடங்கிய பெங்களூரு புகழேந்தி



புரட்சி அண்ணா திமுக என்ற பெயரில் புதிய கட்சியை பெங்களூரு புகழேந்தி தொடங்கியுள்ளார். அதிமுகவை அனைத்து தொகுதிகளிலும் நாங்கள் டெபாசிட் இழக்கச் செய்வோம் என்று அவர் கூறியுள்ளார்.

அதிமுகவில் சசிகலாவின் தீவிர ஆதரவாளராக பெங்களூரு புகழேந்தி இருந்தார். அவர் சிறைக்கு சென்ற பிறகு டிடிவி அணிக்கு சென்றார். அமமுக-வில் கர்நாடக மாநிலச் செயலாளராகவும் இருந்தார். பின்னர் டிடிவி தினகரனுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால் அதிலிருந்து விலகி ஓபிஎஸ் அணியில் இணைந்தார். சமீபத்தில் ஓபிஎஸ் திமுகவில் இணைந்ததை விமர்சித்த புகழேந்தி "புரட்சி அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்" என்ற புதிய அரசியல் கட்சியைத் தொடங்கியுள்ளார்.

இதுகுறித்து அவர் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில், "அதிமுக போட்டியிட வேண்டிய இடங்களைக் கேட்டு டெல்லியில் பாஜக தலைவர்களிடம் பழனிசாமி கெஞ்சுகிறார். தன்மானத்தை அடகு வைத்துவிட்டு தேர்தலை சந்திக்கும் பழனிசாமியின் அதிமுக அனைத்து தொகுதிகளிலும் டெபாசிட் இழக்க புஅதிமுக காரணமாக இருக்கும். தேவைப்பட்டால் வரும் சட்டமன்ற தேர்தலில் போட்டியிடுவோம். காலம் குறுகியிருப்பதால் பொதுக்குழுவினை கூட்டி யாருடன் கூட்டணி என்பது குறித்து விரைவில் முடிவு செய்யப்படும்" என்றார்.

## "கல்வி உரிமையை பறித்தது காங்கிரஸ்; வேடிக்கை பார்த்தது திமுக" - சீமான்



நாம் தமிழர் கட்சி எந்த கூட்டணிக்கும் செல்லாமல் தனித்து போட்டியிடுவது பலருக்கு கண்ணை உறுத்துகிறது. கூட்டணி வைக்காமல் எப்படி ஜெயிப்பது? என்கின்றனர். பொறுத்திருந்து பாருங்கள் எப்படி ஜெயிப்பது என்பதை நாங்கள் காட்டுகிறோம்.

திமுக கூட்டணி பாஜகவை வரவிடக்கூடாது என்று சொல்கிறது. அதிமுகவோ திமுக ஆட்சிக்கே வரக்கூடாது, அதை ஒழிக்க வேண்டும் என்கிறது. இந்த கட்சிகளுக்கு கொடியில் வண்ணம் மாறும். ஆனால் எண்ணம் மாறாது. மாநிலத்துக்கான கல்வி உரிமையை எடுத்து சென்றது காங்கிரஸ் கட்சி. அதை வேடிக்கை பார்த்தது திமுக. இவர்கள் மாநில உரிமையை பற்றி பேசுகின்றனர். நாங்கள் இந்த இரண்டு கட்சிகளுமே வரக்கூடாது, ஒழித்துவிட வேண்டும் என்கிறோம். திருச்சி மாநாட்டில் 6 லட்சம் பேர் கூடினர். ஆனால் ஒரு சத்தம், கூச்சல் இல்லை. ஒரு நாற்காலி உடையவில்லை. அந்தளவுக்கு கட்டுகோப்பான படை எங்களுடையது.

## 'திமுக விருப்ப மனுவா? வேட்பு மனுவா?'



பாளையங்கோட்டை சட்டப்பேரவை தொகுதியில் திமுக சார்பில் வாங்கப்பட்டது விருப்ப மனுவா? வேட்பு மனுவா? என்று, தற்போது அக்கட்சியினரே ஐயம் கிளப்புகிறார்கள். இத்தொகுதியில் மீண்டும் போட்டியிட தற்போதைய எம்.எல். ஏவும், திருநெல்வேலி மத்திய மாவட்டச் செயலாளருமான அப்துல் வகாப் விருப்ப மனு அளித்துள்ளார். அவருடன் மாவட்ட பொறுப்பு அமைச்சர் கே.என்.நேரு உடனிருந்தார்.

இது தொடர்பாக கட்சியின் மூத்த நிர்வாகியிடம் பேசியபோது, "விருப்ப மனுவுடன் சம்பந்தப்பட்ட மாவட்டச் செயலாளரின் பரிந்துரை கடிதம் வேண்டுமென்பது திமுகவின் சம்பிரதாய சட்டவிதி. ஆனால், அப்துல் வகாப் மனு அளித்தபோது, அவருடன் அமைச்சர் இருப்பது, விருப்பமனுவை வேட்புமனுவாக பார்க்க வைத்திருக்கிறது. திருநெல்வேலி மாநகர திமுகவில் நிலவும் கோஷ்டி பூசலுக்கு இது தூபமிட்டுள்ளது. மாநகராட்சியில் நிலவிய கோஷ்டி பூசலை தீர்க்க முடியாமல் அமைச்சர்கள் தங்கம் தென்னரசுவும், கே.என்.நேருவும் திணறியதையும், திமுகவின் செயல்பாட்டை பார்த்து பலரும் குமுறியதையும் மக்கள் எளிதில் மறக்கமாட்டார்கள். இந்த கோஷ்டி பூசலால்தான் அப்துல் வகாபின் கட்சி பதவியை பறித்து முன்னாள் அமைச்சர் டிபிஎம் மைதீன்கானிடம் கட்சி தலைமை ஒப்படைத்திருந்தது.

பின்னர், பொறுப்பு அமைச்சரின் கட்டளைகளை பொறுப்பாக நிறைவேற்றுவதாக அளிக்கப்பட்ட உறுதிமொழியின் பேரில் மீண்டும் கட்சி பொறுப்பு வகாப் வசம் அளிக்கப்பட்டது. இப்போது அதே அமைச்சரின் ஆசியுடன் மீண்டும் களமிறங்க அப்துல் வகாப் தயாராகிவிட்டார். அதற்காகவே வேட்புமனுவையும் அளித்துள்ளார். அவருடன் அமைச்சரும் இருப்பது உள்ளபடியே கட்சி சார்பில் போட்டியிட மனு அளித்துள்ள மற்ற நிர்வாகிகளுக்கு அதிர்ச்சி அளித்துள்ளது. தங்களுக்கு சீட் கிடைக்குமா என்ற கேள்விகள் அவர்களிடையே எழுந்துள்ளது" என்று தெரிவித்தார்.

## அதிமுகவில் இணைந்தார் நடிகை லதா

தமிழகத்தில் சட்டசபை தேர்தல் அடுத்த மாதம் (ஏப்ரல்) நடைபெற உள்ள நிலையில் புதிய உறுப்பினர்களை தங்கள் கட்சியில் சேர்ப்பது மற்றும் கூட்டணிகளை வலுப்படுத்துவது போன்ற பணிகளில் அரசியல் கட்சிகள் ஈடுபட்டு வருகிறது. அந்த வகையில் மாற்றுக் கட்சியை சேர்ந்தவர்கள், திரைப்பிரபலங்கள் அதிமுகவில் இணைந்து வருகின்றனர். இந்த நிலையில், பழம்பெறும் நடிகையான லதா இன்று அதிமுகவில் இணைந்துள்ளார். கட்சியின் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச்சாமியை சென்னை பசுமைவழிச் சாலையில் உள்ள அலுவலகத்தில் நேரில் சந்தித்து அதிமுகவில் தன்னை இணைத்து கொண்டார். அவருக்கு எடப்பாடி பழனிசாமி பூங்கொத்து கொடுத்து வரவேற்றார். பின்னர் நடிகை லதாவுக்கு உறப்பினர் அட்டையை எடப்பாடி பழனிசாமி வழங்கினார்.

## "இந்தியை திணித்த காங்கிரஸோடுதான் திமுக கூட்டணி வைத்துள்ளது" - தமிழிசை சவுந்தரராஜன் தாக்கு



இந்தியை திணித்த காங்கிரசுடன்தான் திமுக கூட்டணி வைத்துள்ளது. திமுகவின் பழைய காலத்து இந்தி எதிர்ப்பு நாடகம் மக்களிடம் இனி எடுபடாது என தமிழிசை சவுந்தரராஜன் தெரிவித்தார்.

தமிழக பாஜக சார்பில் தி.நகரில் உள்ள கமலாலயத்தில் ஹோலி பண்டிகை நேற்று கொண்டாடப்பட்டது. இதில் பாஜக முன்னாள் மாநில தலைவர் தமிழிசை சவுந்தரராஜன், சிறுபான்மை பிரிவு தேசிய செயலாளர் வேலூர் இப்ராஹிம், மாநில செயலாளர் பிரமிளா சம்பத் உள்ளிட்ட பாஜக நிர்வாகிகள் கலந்து கொண்டனர். அப்போது தமிழிசை சவுந்தரராஜன் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

காங்கிரஸ் ஆட்சியில் இருந்தபோது இந்தியை திணித்தது. அதற்கு எதிராக திமுக போராட்டம் நடத்தியது. இந்தியை திணித்த காங்கிரஸுடன் திமுக தான் இப்போது கூட்டணி வைத்துள்ளது. உணர்வுப்பூர்வமாக பல பிரச்சினைகள் தமிழகத்தில் நடந்து கொண்டிருக்கிறது. அனைத்தையும் மூடி மறைக்க பார்க்கிறது திமுக. எனவே, திமுகவின் பழைய காலத்து இந்தி எதிர்ப்பு நாடகம் இப்போது எடுபடாது. மக்கள் விழிப்புணர்வுடன் இருக்கிறார்கள். திமுகவின் தோல்வியை மறைக்க மீண்டும் மொழி பிரச்சினையை எடுத்து வந்தால், மக்கள் அதை நிச்சயம் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். தனியார் பள்ளிகளிலும் தமிழகத்தில் இனி இருமொழி கொள்கை தான். அங்கு இந்தி சொல்லிக்கொடுக்கப்படாது. தனியார், அரசு பள்ளி மாணவர்கள் அனைவருக்கும் ஒரே கல்வி தான் என்று பிரகடனப்படுத்த முதல்வர் தயாரா?

விஜய்யின் பின்னால் இளைஞர்கள் சென்று, விபத்துக்குள்ளாவது நல்லதுக்கு அல்ல. அதை கட்டுப்படுத்த வேண்டும். விஜய் ஆட்சிக்கு வருவது இருக்கட்டும். முதலில், கூட்டத்தை எப்படி கட்டுப்படுத்த வேண்டும், தொண்டர்களை எப்படி கட்டுப்படுத்த வேண்டும் என்பதை முயற்சி செய்து முன்னுதாரணமாக இருக்க வேண்டும். நடக்க உள்ள தேர்தல் எலெக்ஷன் இல்லை, எமோஷன் என விஜய் சொல்கிறார். உண்மையில், தமிழகம் புரோமோஷன் அடைய வேண்டுமென்றால், என்டிஏ ஆட்சிக்கு வரவேண்டும் எனகூறினார்.

## அதிமுகவில் ஜெயக்குமாருக்கு சீட் கிடைக்காது - செங்கோட்டையன்



ஈரோட்டில் தவெக நிர்வாக குழு தலைமை ஒருங்கிணைப்பாளர் செங்கோட்டையன் செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:-

தமிழக வெற்றிக் கழகத்தால் காங்கிரசுக்கு பயன் கிடைத்து இருக்கிறது. எங்களிடம் வந்துவிடுவோம் என கூறி காங்கிரஸ் கூடுதல் சீட்டுகளை பெற்று இருக்கிறார்கள். ஒவ்வொரு கட்சியும் எங்களை காட்டி கூடுதல் சீட்டுகளை பெறக்கூடிய நிலை தற்போது உள்ளது. ஆட்சியில் பங்கு என்று நாங்கள் அறிவித்ததால் தான் மற்ற கூட்டணிகளில் பங்கு கேட்கிறார்கள்.

தவெக வலிமையான கூட்டணியுடன் தேர்தலை சந்திக்கும் பொறுத்திருந்து பாருங்கள். அதிமுக முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் வேண்டுமானால் தவெகவுக்கு வரலாம். எனென்றால் அவருக்கு அதிமுகவில் சீட் கிடைக்கப்போவதில்லை. அவரது மகனுக்கு தான் கிடைக்கப்போகிறது.

அதனால்தான் ஆதங்கத்தில் ஜெயக்குமார் பேசுகிறார். அவர் எனக்கு நல்ல நண்பர்; அவரது கருத்துக்கு பதில் சொல்வது நன்றாக இருக்காது. ஆட்சியில் பங்கு என்பது எங்கள் கட்சியின் கொள்கை. கூட்டணிக்கு வருபவர்களை வரவேற்போம். இவ்வாறு அவர் கூறினார்.

## ஏழுமலையான் உண்டியல் காணிக்கை ரூ. 4.46 கோடி

**திருமலை, மார்ச் 6:**

பக்தர்களின் வருகை சரிந்துள்ள நிலையில், செவ்வாய்க்கிழமை சந்திரகிரகணத்தை முன்னிட்டு காலை 9 மணிமுதல் மாலை 7.30 மணிவரை மூடப்பட்டது. கிரகணம் நிறைவு பெற்று சுத்தி, புண்ணியா வசனம் உள்ளிட்டவை நடத்தப்பட்டு இரவு 8.30 கோயில் நடை திறக்கப்பட்டு பக்தர்கள் தரிசனத்திற்கு அனுமதிக்கப்பட்டனர். புதன்கிழமை நிலவரப்படி தர்ம தரிசனத்துக்கு 10 (தரிசன டோக்கன்கள் இல்லாதவர்கள்) மணிநேரமும், ரூ.300 விரைவு தரிசனம், நேரடி இலவச தரிசன டோக்கன்கள் பெற்ற பக்தர்களுக்கும் 3 முதல் 4 மணி நேரம் ஆனது. மேலும், செவ்வாய்க்கிழமை முழுவதும் 27,200 பக்தர்கள் தரிசனம் செய்தனர்; 9, 987 பக்தர்கள் தலைமுடி காணிக்கை செலுத்தினர். உண்டியல் காணிக்கையை கணக்கிட்டதில் ரூ.4.46 கோடி வசூலானதாக தேவஸ்தானம் தெரிவித்துள்ளது.

## நில ஆவணம், பட்டா மாறுதல் அறிக்கை இணையவழி சேவை தொடக்கம்

**சென்னை, மார்ச் 6:**

வருவாய், பேரிடர் மேலாண்மைத் துறையின் கீழ் இயங்கிவரும் நில அளவை, மற்றும் நிலவரித் திட்டத் துறையால் இணைய வழி ஆவணங்களான 'அ' பதிவேடு, சிட்டா மற்றும் புலப்படம் ஆகியவை இணையவழி பயன்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இந்த ஆவணங்களின் விவரங்களை ஒருங்கிணைத்து, நில உரிமைதாரர்களுக்கு 'ஒருங்கிணைந்த நில ஆவணம்' (INTEGRATED LAND RECORD) என்ற சேவையையும், இணையவழியில் ஒரு புல எண்ணில் நடைபெறும் பட்டா மாறுதல் விவரங்களை பொது மக்கள் தெரிந்து கொள்ளும் வகையில் 'பட்டா மாறுதல் விவரங்களின் அறிக்கை' (HISTORY OF PATTA TRANSFER) என்ற சேவையையும் வருவாய்த் துறை அமைச்சர் சாத்தூர் ராமச்சந்திரன் நேற்று தொடங்கி வைத்தார்.

இந்தநிகழ்வில், துறைசெயலர் பெ.அமுதா, நில நிர்வாக ஆணையர் கஜலட்சுமி உள்ளிட்டோர் பங்கேற்றனர். இந்த புதிய சேவை மூலம், நில உரிமைதாரர்கள் தங்களது நிலம் சார்ந்த விவரங்களை உள்ளீடு செய்து HTTPS://ESERVICES.TN.GOV.IN/ESERVICESNEW/HOME.HTML என்ற இணையதளத்தில் 'ஒருங்கிணைந்த நில ஆவணத்தை பார்வையிட்டு பதிவிறக்கம் செய்யலாம். பட்டா மாறுதல் விவர அறிக்கையை பொருத்தவரை, நில உரிமையாளர்கள் HTTPS://ESERVICES.TN.GOV.IN/ESERVICESNEW/HOME.HTML என்ற இணையதளத்தில் HTTPS://TAMILNILAM.TN.GOV.IN/CITIZEN என்ற தலைப்பை தேர்வு செய்து, தங்கள் நிலம் சார்ந்த விவரங்கள் மற்றும் விவரம் தேவைப்படும் தேதியினை தேர்வு செய்ய வேண்டும்.

பின்னர், பட்டா மாற்ற விவரக்கட்டணமாக ஆண்டு ஒன்றுக்கு ரூ.50 வீதம் மற்றும் செயலாக்க கட்டணமாக ரூ.60 ஆகியவற்றை இணையம் வாயிலாக செலுத்தி விண்ணப்பித்து, 'முந்தைய பட்டா மாறுதல் விவர அறிக்கை' யை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என்று தமிழக அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# கல்யாண வெங்கடேஸ்வரர் கோவிலில் புஷ்ப யாகம்.. டிக்கெட் கட்டணம் ரூ.516

**திருப்பதி, மார்ச் 6:**



திருப்பதி அருகே உள்ள சீனிவாசமங்காபுரம் கல்யாண வெங்கடேஸ்வரர் கோவிலில் வரும் 15-ம் தேதி புஷ்ப யாகம் நடைபெற உள்ளது.

பிரம்மோற்சவ நிகழ்ச்சிகளின்போது அர்ச்சகர்கள், அதிகாரிகள், ஊழியர்கள் அல்லது பக்தர்களால் தெரிந்தோ தெரியாமலோ குறைகள் ஏதேனும் ஏற்பட்டிருக்கலாம். அந்த குறைகளால் ஏற்பட்ட தோஷங்களுக்கு பரிகாரமாக புஷ்ப யாகம் செய்யப்படுவது வழக்கம். இந்த புனித சடங்குகளை செய்வதன் மூலம், தோஷங்கள் நீங்கும் என்று நம்பப்படுகிறது.

அவ்வகையில், கடந்த மாதம் 8ம் தேதி தொடங்கி 16-ம் தேதி வரை வருடாந்திர பிரம்மோற்சவ விழா நடைபெற்ற நிலையில், பாரம்பரிய முறைப்படி புஷ்ப யாகத்திற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

இதன் ஒரு பகுதியாக வரும் 14ம் தேதி (14.3.2026) சேனாதிபதி உற்சவம் மற்றும் அங்குரார்ப்பணம் நடைபெறுகிறது.

மறுநாள் 15-ம் தேதி காலை 10 மணி முதல் 11 மணி வரை உற்சவ மூர்த்திகளான கல்யாண வெங்கடேஸ்வரர், ஸ்ரீதேவி, பூதேவி ஆகியோருக்கு ஸ்நாபன திருமஞ்சனம் நடைபெறுகிறது. பால், தயார், தேன், மஞ்சள், சந்தன கலவை, இளநீர் ஆகிய திரவியங்களால் சிறப்பு அபிஷேகம் செய்யப்படுகிறது.

மதியம் 2 மணி முதல் 4 மணி வரை புஷ்பயாகம் நடைபெறுகிறது. அப்போது துளசி, கிரிஸான்தமம், ஒலியாண்டர், மல்லிகை, சம்பங்கி, ரோஜா மற்றும் தாமரை உள்ளிட்ட பல்வேறு மலர்களை பகவானுக்கு சமர்ப்பித்து புஷ்பயாகம் நிகழ்த்தப்படுகிறது. மாலை5.30 மணிமுதல் 6.30 மணி வரை உற்சவர்கள் மாட வீதிகளில் உலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலிக்கிறார்கள்.

புஷ்பயாகத்தில் பங்கேற்பதற்கான டிக்கெட்டுகள் மார்ச் 14ம் தேதி முதல் கோவிலில் கிடைக்கும். ஒருடிக்கெட் விலை ரூ.516. இதில் இரண்டு பேர் புஷ்பயாகத்தில் பங்கேற்கலாம். புஷ்பயாகத்தை முன்னிட்டு, மார்ச் 15 அன்று நித்ய கல்யாணோற்சவ சேவை ரத்து செய்யப்படுவதாக திருமலை திருப்பதி தேவஸ்தானம் அறிவித்துள்ளது.

# கோவை கோனியம்மன் கோவில் தேரோட்டம் கோலாகலம்.. பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் பங்கேற்பு

**கோவை, மார்ச் 6:**



கோவையின் காவல் தெய்வமான கோனியம்மன் கோவில் தேர்த்திருவிழா கோலாகலமாக நடைபெற்று வருகிறது. விழா நாட்களில் தினமும் சிறப்பு பூஜைகள் நடைபெற்றன. இதில் திரளான பக்தர்கள் கலந்துகொண்டு அம்மனை வழிபட்டனர்.

நேற்று திருக்கல்யாண வைபவம் நடைபெற்றது. இந்நிகழ்வில் ஏராளமான பக்தர்கள் கலந்துகொண்டு அம்மனை தரிசனம் செய்தனர்.

விழாவின் சிகர நிகழ்வான திருத்தேரோட்டம் இன்று நடைபெறுகிறது.

இதையொட்டி அதிகாலையில் உற்சவர் கோனியம்மனுக்கு சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டது. அலங்கரிக்கப்பட்ட அம்மன், பல்லக்கில் எழுந்தருளி ராஜவிதியில் உள்ள தேர்நிலை திடலுக்கு வந்தடைந்தார்.

பின்னர் வேத மந்திரங்கள் முழங்க, அலங்கரிக்கப்பட்ட தேரில் அம்மன் எழுந்தருளியதும், மதியம் 2.05 மணியளவில் தேரோட்டம் தொடங்கியது. ஆயிரக்கணக்கான பக்தர்கள் 'ஓம் சக்தி.. பராசக்தி' என்று அம்மனை போற்றி முழக்கம் எழுப்பியபடி வடம் பிடித்து தேர் இழுத்தனர்.

வீதியின் இருபுறமும் பக்தர்கள் திரண்டு நின்று அம்மனை தரிசனம் செய்தனர். சிலர் உப்பு மிளகை தேர்க்காலில் தூவி வணங்கினர். தேர் ஒப்பனக்கார வீதி, பெரிய கடை வீதி வழியாக நிலையை அடையும்

தேரோட்டத்தை முன்னிட்டு விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. 2000-க்கும் மேற்பட்ட காவலர்கள் மற்றும் ஏராளமான தன்னார்வலர்கள் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

# போர் பதற்றம் தணிய வேண்டி சீர்காழி அருகே சிறப்பு யாகம்

**சீர்காழி, மார்ச் 6:**

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி அருகே ஆலஞ்சேரி கிராமத்தில் பழமை வாய்ந்த அகிலாண்டேஸ்வரி சமேத அகஸ்தீஸ்வரர் ஆலயம் உள்ளது. அகஸ்திய மகரிஷி பூஜை செய்து வழிபட்ட பழமையான தலமான இக்கோவிலில் சிறப்பு யாகம் நடைபெற்றது.

போர் பதற்றம் தணிந்து உலக மக்கள் அமைதியுடன் வாழ வேண்டியும், விவசாயம் செழிக்க வேண்டியும் கிராம மக்கள் ஒன்றிணைந்து இந்த யாகத்தை நடத்தினர்.

இதற்காக 30 யாக குண்டங்கள் அமைக்கப்பட்டு புனித நீர் கடங்கள் வைக்கப்பட்டு பூஜை செய்யப்பட்டது. யாகத்தில் ஏராளமான வேள்விப் பொருட்கள் உள்ளிட்டவை இடப்பட்டு பூர்ணாஹுதி தீபாராதனை செய்யப்பட்டது.

தொடர்ந்து புனித நீரால் சுவாமிக்கு சிறப்பு அபிஷேகம் செய்யப்பட்டு, மகா தீபாராதனை காண்பிக்கப்பட்டது. இந்த சிறப்பு வழிபாடுகளில் திரளான மக்கள் பங்கேற்று தரிசனம் செய்தனர்.



வறுமை, நோய், அறியாமை மூன்றும்
முற்றிலும் நீங்கும்
போர் என்னும் பொல்லா அரக்கனை
பூமியில் இல்லாமல்
ஆக்கினால்...!
தொடர்புக்கு: 9791667528



## நலம் தரும் மருத்துவம்

### டாக்டர் வீட்டுக்கே போகாமல் இருக்க இந்த ஒரு அரிசி வீட்டில் இருந்தால் போதும்!

நம்முடைய பாரம்பரிய அரிசி வகைகளில், கருப்பு நிற அரிசி வகையைச் சார்ந்தது இந்த கருப்பு கவுனி அரிசி. இந்த அரிசி சீனாவிலிருந்து வந்தது என்றும், ஆரம்பக் காலத்தில் மன்னர்கள் மட்டுமே சாப்பிடும் அரிசி வகையாக இது இருந்தது என்றும் கூறப்படுகிறது. இதனால் இதற்கு ஆங்கிலத்தில் PURPLE RICE மற்றும் FORBIDDEN RICE என்ற பெயர்கள் உண்டு.

கருப்பு கவுனி அரிசியில் (KARUPPU KAVUNI RICE) இல்லாத சத்துகளே இல்லை என்று கூடச் சொல்லலாம். இதில் ஏராளமாக வைட்டமின்கள், தாதுக்கள் (MINERALS) மற்றும் அமினோ அமிலங்கள் நிறைந்துள்ளன. புரதம், கால்சியம், பாஸ்பரஸ், இரும்புச்சத்து, மாங்கனீசு, மெக்னீசியம் மற்றும் பொட்டாசியம் போன்றவை இதில் அடங்கியுள்ளன.

முக்கிய சத்துகள் மற்றும் பயன்கள்: ஒட்டுமொத்த ஆரோக்கியம்: இதில் ஊட்டச்சத்துகள் (NUTRIENTS) மிக அதிகம். இவை உடலின் ஒட்டுமொத்த ஆரோக்கியத்திற்கும், சீரான செயல்பாட்டிற்கும் மிக முக்கியம். குறிப்பாகக் குடல் மற்றும் கல்லீரல் ஆரோக்கியத்தை இது மேம்படுத்தும்.

இதில் உள்ள 'ஆன்ட்டி-இன்ஃபிளமேட்டரி' (ANTI-INFLAMMATORY) பண்புகள் உடல் வீக்கங்களைக் குறைக்க உதவும். இதில் உள்ள அழற்சி எதிர்ப்பு பண்புகள் மற்றும் 'ஆந்தோசயனின்' (ANTHOCYANIN) என்னும் ஆன்டி-ஆக்ஸிடன்ட்டுகள் ஆஸ்துமாவைக் கட்டுப்படுத்தும். ஆஸ்துமா மற்றும் சுவாசம் தொடர்பான பிரச்னை உள்ளவர்கள் கருப்பு கவுனி அரிசியை எடுத்துக் கொள்வது நல்லது. உடலில் உள்ள கழிவுகளைச் சுத்திகரித்து வெளியேற்றும் வேலையை இதில் உள்ள மூலக்கூறுகள் செய்கின்றன. இது உடலில் உள்ள நச்சுக்களை வெளியேற்றி 'டீடாக்ஸ்' செய்யும் வேலையைச் செய்கிறது.

சிறுதானிய வகைகளை விடவும் கருப்பு கவுனி அரிசியில் கிளைசெமிக் குறியீடு (GLYCEMIC INDEX) மிக மிகக் குறைவு. இதைச் சாப்பிடும் போது இரத்தத்தில் சர்க்கரை அளவை உயர்த்தும் வேகமும் விகிதமும் மிகவும் குறைவாக இருக்கும். இது நீரிழிவைக் கட்டுப்படுத்துவதில் மிகப்பெரிய அளவில் உதவும். இரத்த அழுத்தத்தைச் சீராக வைத்திருக்கவும், இரத்தக் குழாய்களில் கொழுப்புப் படிவதைத் தடுக்கவும் இது உதவுகிறது. இரத்தத்தில் இருக்கும் LDL (கெட்ட கொழுப்பை) கரைத்து வெளியேற்றி, HDL (நல்ல கொழுப்பை) அதிகரிக்கச் செய்யும். இதில் உள்ள ஆந்தோசயனின், புற்றுநோய் செல்களைத் தாக்கி அழிக்கும் ஆற்றல் கொண்டது எனக் கூறப்படுகிறது. எனவே, புற்றுநோய் ஆபத்தைக் குறைக்க இதனை உண்பது சிறந்தது. இதனைப் பாயசம், கஞ்சி அல்லது கூழ் செய்து சாப்பிடலாம். காலை உணவாகவோ அல்லது மாலை நேரச் சிற்றுண்டியாகவோ இந்தச் சத்தான கூழைத் தயாரித்துக் குடிப்பது உடலுக்கு மிகுந்த ஆரோக்கியத்தைத் தரும்.

# தண்ணீருக்கு நினைவாற்றல் உண்டா? அறிவியலும் உண்மையும்!

தண்ணீருக்கு ஞாபக சக்தி இருக்கிறது என்ற செய்தி பல காலமாக சமூக வலைதளங்களில் உலா வருகிறது. குறிப்பாக, தண்ணீரிடம் அன்பாகப் பேசினால் அது அழகாக மாறும் என்றும் சிலர் கூறுகிறார்கள். இது உண்மையா அல்லது வெறும் கற்பனையா எனத் தெரிந்துகொள்வோமா?

WATER MEMORY என்றால் என்ன?

ஒரு பொருளைத் தண்ணீரில் கரைத்துவிட்டு, பிறகு அந்தப் பொருளை தண்ணீரிலிருந்து முழுவதுமாக நீக்கினாலும், தண்ணீர் அந்தப்பொருளின் குணத்தை ஞாபகம் வைத்திருக்கும் என்பதே இந்தக் கோட்பாடு.

1988-ல் ஜாக் பென்வெனிஸ்டு என்ற விஞ்ஞானி, ஒரு பொருள் அந்தத் தண்ணீரில் இல்லாத நிலையிலும் தண்ணீர் அந்தப்பொருளின் வீரியத்தைக் காட்டுகிறது என்று ஒரு கட்டுரையை வெளியிட்டார். இது அறிவியலின் அடிப்படை விதிகளுக்கே சவாலாக இருந்தது.

அறிவியலில் ஒரு பரிசோதனை உண்மையானது என்றால், அதை யார் செய்தாலும் ஒரே முடிவு வரவேண்டும். ஆனால், மற்ற விஞ்ஞானிகள் அதே பரிசோதனையைச் செய்தபோது ஜாக் சொன்ன முடிவுகள் கிடைக்கவில்லை. எனவே, நிரூபிக்க முடியாததால் இந்தக் கருத்து அறிவியல் பூர்வமாக ஏற்கப்படவில்லை.



தண்ணீரிடம் நல்ல வார்த்தைகளைச் சொன்னால் அழகான பனிப் படிகங்கள் உருவாகும் என்று மசாரு எமோட்டோ சில புகைப்படங்களை வெளியிட்டார். ஆனால், இவரது சோதனைகள் முறையான அறிவியல் கட்டுப்பாடுகளுடன் செய்யப்படவில்லை. அவர் தனக்குத் தேவையான படிகங்களை மட்டும் தேர்ந்தெடுத்துப் புகைப்படம் எடுத்தார் என்பதுதான் உண்மை. எனவே, இது வெறும் ஒரு கலை சார்ந்த விஷயமாகவே பார்க்கப் படுகிறதே தவிர, அறிவியலாக அல்ல.

தண்ணீர் உண்மையில் எப்படிச் செயல்படுகிறது?

தண்ணீர் மூலக்கூறுகள் ஒன்றுடன் ஒன்று ஹைட்ரஜன் பிணைப்பு மூலம் இணைந்திருக்கும். இந்த இணைப்புகள் ஒரு விநாடியின் மிகச்சிறிய பகுதியில் (பிக்கோ விநாடி - 1012) உடைந்து மீண்டும் சேரும். இதனால், தண்ணீரின் கட்டமைப்பு நொடிக்கு நொடி மாறிக்கொண்டே இருக்கும். எனவே, ஒரு பொருளின் தகவலை நீண்ட நேரம் சேமித்து வைக்கும் அளவுக்கு தண்ணீருக்கு நிலையான கட்டமைப்பு கிடையாது.



தற்போதைய நவீன ஆய்வுகளில், தண்ணீர் மூலக்கூறுகள் சில குறிப்பிட்ட சூழல்களில் சிறிது நேரம் ஒரு ஒழுங்கான அமைப்பில் இருக்கலாம் என்று கண்டறியப்பட்டுள்ளது. ஆனால், இது நினைவாற்றல் அல்லது ஞாபக சக்தியுடன் தொடர்புடையது அல்ல. இது வெறும் வேதியியல் மாற்றம் மட்டுமே.

சுருக்கமாகச் சொன்னால், தண்ணீருக்கு மனிதனைப் போல நினைவாற்றல் கிடையாது. நல்ல வார்த்தை, கெட்ட வார்த்தைக்கும் தண்ணீருக்கும் நேரடித் தொடர்பு இருப்பதற்கான அறிவியல் ஆதாரம் இல்லை. அறிவியல் என்பது ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டது. அந்த வகையில் நீர் நினைவாற்றல் என்பது ஒரு நிரூபிக்கப்படாத உண்மை.

# "நிஜத்தின் நிழல்"



எழுபது வயதைத் தொட்டும் இன்னமும் சற்றும் குறையாத வீம்புக்காரர் ராஜசேகர்.

கெட்டியான நெஞ்சு சளியால் அடிக்கடி உச்சஸ்தாயில் இருமுவார். ஆனாலும், சித்த மருத்துவர் கொடுத்த சூரணத்தைக் குடிக்க மாட்டார்.

"எனக்கு ஒன்றும் இல்லை... நான் நல்லாத்தான் இருக்கேன்" என்று வீர வசனம் வேறு. அவர் மனைவி கமலம் தினமும் கெஞ்சுவாள். "கொஞ்சமாவது எடுத்துக்கங்க... இரவு முழுக்க இருமிட்டே கிடக்கறீங்க!"
"அடப்போ... நான் என்ன குழந்தையா?"
சோர்ந்து போன கமலம், தன் மருமகள் மீனாவிடம் கேட்டாள். "அவரை எப்படி சூரணம் குடிக்க வைக்கலாம்?"
மீனா சிரித்தாள். "அவருக்குத் தெரியாம அவர் குடிக்கும் பாலில் கலந்து கொடுக்கலாம்... என்ன சொல்றீங்க?"
"கண்டுபிடிச்சிட்டா கத்துவாரே"
"தெனமும் கொஞ்சம் கொஞ்சமாய் கண்டே பிடிக்க முடியாத அளவுக்கு கலக்குவோம்"
அதே போல் அன்று முதல் தினமும் இரவு பாலில் சூரணம் கலந்தாள் மருமகள் மீனா.
ராஜசேகரும் குடித்தார். இருமல் கொஞ்சமாய்க் குறையத் தொடங்கியது.
ஒரு இரவு தண்ணீர் குடிக்க சமையலறைப்பக்கம் வந்த ராஜசேகர் மீனா கண்ணாடி டம்ளரில் பாலை ஊற்றி, அதில் ஏதோ ஒரு பொடியை கலக்குவதைப் பார்த்து விட்டார்.
மனசுக்குள் மின்னலடித்தது.
"விஷமாயிருக்குமோ?"
அடுத்த நொடி கோபம் வெடித்தது. "ஏய்! என்ன கலக்கறே?" கத்தினார்.
வீடே அதிர்ந்தது. மீனாவின் கையில் இருந்த டம்ளர் குலுங்கியது.
"அது...வந்து" மீனா தடுமாறினாள்.
"என்னைக் கொல்லத் திட்டமா? வீட்டை கைப்பற்றணுமா?"
வயதின் அச்சம், உடல்நல பயம், தனிமை, எல்லாம் வார்த்தைகளாக வெளிவந்தன.
மீனா அழுதாள்.
கமலம் சுதாரித்துக் கொண்டு, அலமாரியில் இருந்து சூரணப் பொட்டலத்தை எடுத்துக் காட்டினாள்.
"இதைத்தான் கலக்கினாள்... நான்தான் கலக்கச் சொன்னேன்... உங்க நலனுக்காக..." கமலம் சொல்ல, அறை முழுக்க அமைதி.

ராஜசேகர் கையில் இருந்த பொடியைப் பார்த்தார். மருத்துவரின் பெயர் இருந்தது.
அவரது கோபம் கரைய ஆரம்பித்தது
நாற்காலியில் அமர்ந்தார். மருமகள் முன்னால் தலை குனிந்தார்.
"மன்னிச்சுக்கோம்மா... வயசு ஆகறப்போ... இந்த மாதிரியான பயம் அதுவா வந்திடும் போல..."

மீனா அருகே வந்து சொன்னாள்:
"நீங்களும் என் அப்பா மாதிரிதான்... உங்க ஆரோக்கியத்தின் மீதும் எனக்கு அக்கறையிருக்கு!"



-முகில் தினகரன்
கோயமுத்தூர்.

# அதிகாலை மணியோசை.....!



அதிகாலை மூன்று மணிக்கு முதல் மணி ஓசை அனைவரது தூக்கத்தையும் களைத்துவிடும். ஒட்டு மொத்த ஊரும் விழித்துக் கொள்ளும். ஊரின் ஒவ்வொரு வீட்டின் வாசற்படியில் மின்சார விளக்குகள் போடப்படும்.
இரண்டாவது மணியோசைக்கு வீட்டுக் கட்டுத்தறியிலிருந்து மாடுகள் அவிழ்த்துக் குளக்கரையை நோக்கி ஒட்டிச் செல்வார்கள்.
ஆணும் பெண்ணும் குழந்தைகளோடு மாட்டை ஓட்டிச் செல்லும்போது பேசும் பேச்சு பரவலாகக் கேட்கும்.
மாடுகளோடு மக்களும், பால் கறக்கும் கணபதிக்கும் தனபாலுக்காக காத்துக்கொண்டிருப்பார்கள்.
கோயிலுக்கருகில் நிருத்தியிருந்த சித்திவிணாயகர் பேருந்திற்குள் தூங்கும் ஓட்டுணருக்கும் நடத்துணருக்கும், மாட்டோடு மக்கள் சத்தமும் ஒரு பொருட்டாகக் கருதாமல் ஆழ்ந்த தூக்கத்தில் இருப்பார்கள்.
கணபதியும் தனபாலும்தான் ஒட்டுமொத்த மாட்டின் பாலையும் கறப்பார்கள். ஒரு சிலர் தாங்கலாகவே பால் கறந்துவிடுவார்கள்
மாட்டின் மடியிலிருந்து பாலைக் கறப்பதில் இருவருமே திறமையானவர்கள்.
"ஐயனார் வரலயாமா, இவனுக்கு இதே வேலையா போச்சு. என்னைக்குமா அவன் நேரத்துக்கு வந்திருக்கான்" என்று வேதனையோடு "ச்சுக்" கொட்டிய பெரியவரைப் பார்த்து
"யோவ். கண்ணுக்குட்டிய அவிழ்த்து விடுயா"என்று ஐய்யனார் கோபமாகச் சொல்ல, சிரித்துக்கொண்டே பெரியவர் கண்ணுக்குட்டி கட்டியிருக்கும் இடம் நோக்கி வேகமாக ஓடுவது தினமும் நடக்கும்.
"ஏம்பா அங்க கறந்துட்டு இங்க வா. நான்தான் அடுத்தது.' என்ற பெரியவரின் சத்தத்திற்கு,
"இருய்யா... அப்படியே விட்டுட்டு வரமுடியுமா?" எனக் கோபமாகப் பேசுவதில் தொடங்கி, பால் கறக்கும் இடம் சிறு சண்டைகள் செய்யும் போர்களமாக மாறிவிடும்.
"ஏம்பா நான்தான் அடுத்தது. அவருக்கு முன்னாடியே வந்துட்டேன்'என்று அடுத்த ஒரு பெண்மணி சத்தமாகக் கத்தியதில் கோவப்பட்ட தனபால் "அவிழ்த்து விடுமா" என்று படபடப்பாகப் பதில் சொல்வார்.
கணபதி ஒருபுரம் "கண்ணுக் குட்டிய அவிழ்த்து விட்டுச் சொரப்பு பிடிம்மா ... இதோ வந்துடறேன்' என்று தனபாலோடு சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருப்பார்கள்.
கணபதியும் தனபாலும் புயல் மாதிரி சுற்றிசுற்றி பால் கறப்பார்கள். ஐய்யனார் இவர்கள் இருவருக்கும் நேர் எதிரானவர். பொருமையாகத்தான் பால் கறப்பார்.
இதற்கிடையில் மூன்றாவது மணியை வேகமாக அடித்துவிட்டு பஜனைக் கோயில் மதில் சுவரில் அசந்து உட்காருவார் பெரியவர்.
ஊரின் ஒட்டு மொத்த மாடுகளும் குளக்கரையின் கீழ் உள்ள முருகன் கோவிலுக்கு முன்னால் நடப்பட்டிருந்த மொளக்குச்சியில் மாட்டைக் கட்டி பால் கறந்து ஊத்தி விட்டு, அவரவர்கள் தங்களுடைய மாட்டை வீட்டுக்கு ஓட்டிச் செல்வார்கள்.
பால் கறக்கும் இடம் எப்போதும் கலகலப்பாகவும் சுருசுருப்பாகவும் இருக்கும்.
ஒரு சிலர் பால் கறப்பவர் இல்லாமல் பரிதாபமாக நின்றிருப்பார்கள்.
இறக்கப்பட்டு கணபதியும் தனபாலும் அந்த நேரத்திற்கு உதவி செய்வார்கள்.
கடைசி நேரத்தில் பால் வண்டி வந்தவுடன், அவசர அவசரமாகப் பால் டப்பாவை எடுத்துவந்து ஊத்திவிட்டு செல்கின்ற பெண்மணிகளும் இருப்பார்கள்.
"சீக்கிரம்மா, இவ்வளவு நேரம் என்னம்மா பண்ண'என்று குரல் கொடுக்கக்கூடிய பெரியவர் கடைசியாக எல்லாவற்றையும் முடித்துவிட்டு, பாத்திரங்களை வெளியே போட்டுத் தண்ணீரில் ஊர வைத்து, பால் வாங்கும் அறையை மூடிவிட்டு வீட்டுக்குச் செல்வார்.
அதிகாலை மூன்று மணிக்கு எழுந்து காலை ஆறு மணி எப்படிக் கடந்தது என்று தெரியாமலே மக்கள் சுருசுருப்பாக இயங்குவார்கள்.
பால்வண்டி சென்றபிறகு ஒரு சிலர் சொம்போடு "கொஞ்சம் கண்ணசந்துட்டமா, குழந்தைக்குப் பால் வாங்கல" எனப் பரிதாபமாக நின்ற காட்சியும் பார்க்கலாம்.
"வீட்டுக்கு வாம்மா, நான் தரன் "என்ற இரக்ககுனம் கொண்டவர்களையும் பார்க்க முடியும்.
காலை எழு மணியிலிருந்து அந்த இடம் வெறிச்சோடி கிடக்கும்.
இப்போதெல்லாம் மக்களின் தூக்கம் அதிகாலை மூன்று மணிக்குக் களைவதில்லை.
மூன்று மணிக்கு அடிக்கும் மணியோசை மறைந்தேபோனது.



- கயப்பக்கம்
இரா.இரமேஷ்


# மாயக்கண்ணன் லீலை (பாகம் -1)





- எம்.எல்.பிரபா
ஆதம்பாக்கம்.
சென்னை 88

மானிட உலகில் அவதரித்து அப்பிறவிக்குரிய செயல்களை செய்த கிருஷ்ணனுடைய அற்புதமான பால லீலைகளை பற்றி இந்த கதைகள் மூலம் நாம் அறிந்து கொள்ளலாம்.
தேவகிக்கும், வசுதேவருக்கும் பிறக்கும் எட்டாவது குழந்தையால் தேவகியின் அண்ணனான கம்சனுக்கு மரணம் என்பது விதி .அதை அறிந்த கம்சன் தேவகியையும், வசுதேவரையும் சிறையில் அடைத்தான்.
தேவகிக்கு பிறக்கும் ஒவ்வொரு குழந்தையும் கொன்றான். எட்டாவது குழந்தையாக கிருஷ்ணன் நள்ளிரவில் பிறந்தான்.
எல்லோரும் மயக்கத்தில் இருந்தனர்.



அப்பொழுது ஒரு அசரீரி கூறியது "இந்த குழந்தையை கோகுலத்தில் யசோதையிடம் விட்டுவிட்டு அங்குள்ள குழந்தையை தூக்கிக் கொண்டு வந்து விடு" என்றது .வசுதேவருக்கு ஒன்றும் புரியவில்லை . கம்சனிடம் இருந்து எப்படியாவது குழந்தையை காப்பாற்ற வேண்டும் என்று நினைத்தார்.
கையில் குழந்தையை தூக்கியவுடன் சிறை கதவு தானாக திறந்தது.
கை, கால்களில் கட்டப்பட்ட சங்கிலிகள் தானாக அவிழ்ந்தது.
குழந்தையை கையில் தூக்கிக் கொண்டு வெளியே வந்தார். யமுனை ஆறு தண்ணீர் விலகி வழி விட்டது .மழை பொழிந்து கொண்டிருந்தது.
ஆதிசேஷன் குடையாக மாறி கிருஷ்ணரின் மேல் மழை தண்ணீர் விழாமல் பாதுகாத்தது.
அப்படியே கோகுலம் சென்று குழந்தை கிருஷ்ணனை யசோதை பக்கத்தில் விட்டுவிட்டு அங்கிருந்த பெண் குழந்தையை தூக்கிக் கொண்டு வந்துவிட்டார் வசுதேவர் . உள்ளே வந்தவுடன் சிறை கதவுகள் தானாக மூடிக்கொண்டது .கை, கால்களில் சங்கிலிகள் தானாக பூட்டி கொண்டது.
குழந்தை அழும் சத்தம் கேட்டு சிறையில் பாதுகாவலர்கள் அனைவரும் மயக்கம் தெளிந்து எழுந்து குழந்தை பிறந்ததை அறிந்து அந்த செய்தியை கம்சனிடம் கூறினர். கம்சன் உடனே வந்து பெண் குழந்தையை தூக்கி வெட்டுவதற்காக வாளை எடுத்தவுடன் வேகமாக தன் காலால் எட்டி உதைத்தது. மேலே சென்று ,ஏ ...முட்டாளே.. உன்னை கொள்வதற்காக பிறந்த கண்ணன் கோகுலத்தில் பத்திரமாக உள்ளான் என்று கூறிவிட்டு அந்த மாயை மறைந்து விட்டது .அன்று முதல் கம்சன் கிருஷ்ணனை எப்படியாவது கொன்று விட வேண்டும் என எண்ணி முதலில் சகடாசுரனை அனுப்பி வைத்தான் .சகடாசுரன் வண்டியில் ஒளிந்து கொண்டு கிருஷ்ணனை கொல்வதற்காக சக்கரத்தை நகத்திய சமயத்தில் கிருஷ்ணர் தன் பிஞ்சுக்காலால் எட்டி உதைத்தார். அதனால் வண்டி குடை சாய்ந்து விழுந்தது. சக்கரம் நொறுங்கி சிதறி சகடாசுரன் இறந்து கிடந்தான். அங்குள்ள ஊர் மக்கள் பார்த்து அதிர்ச்சி அடைந்தார்கள். பயந்தார்கள் .பின்பு குழந்தைக்கு ஒன்றும் ஆகவில்லை என்று நினைத்து சந்தோஷம் அடைந்தார்கள்.
கம்சனுக்கு சகடாசுரன் இறந்த செய்தி சென்றது. சிறிய குழந்தையை கொல்ல முடியவில்லையே!! என்று கோபம் கொண்டான். இது கிருஷ்ணனின் லீலை என்று அவனுக்கு தெரியவில்லை.
அடுத்ததாக தன்னுடைய கட்டளைக்கு பணிந்தவனும் ,மகா பராக்கிரமசாலியான மற்றொரு அசுரனை, கிருஷ்ணனை கொல்லுவதற்காக கம்சன் அனுப்புகிறான். அவன் தான்....

# 27 நட்சத்திரங்களுக்குரிய திருத்தலங்கள்

நமது ஆன்மீக அன்பர்களின் நலன் கருதி, ஒவ்வொரு நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கும் உரிய திருத்தலங்களை இங்கே தொகுத்து வழங்குகிறோம். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஆலயங்கள் அனைத்தும், பல யுகங்களின் வரலாற்றுப் பெருமை கொண்டவை. காலப்போக்கில் அழிவுகள் ஏற்பட்டாலும்,அவை தன்னையே புதுப்பித்துக் கொண்டு இன்றும் சக்தி நிறைந்த தலங்களாக விளங்குகின்றன. எத்தனையோ மகான்களும், ரிஷிகளும், தேவர்களும் வழிபட்டஇந்த ஆலயங்களில், இன்றைக்கும் வலிமையான ஆன்மீக அதிர்வுகள் நிலவுகின்றன. தரிசனம் செய்ய வரும் பக்தர்களுக்கு அருளும், அமைதியும், மனப்பலமும் வழங்குகின்றன.

**வழிபாட்டு வழிமுறை**

கீழே கொடுக்கப்பட்டுள்ள உங்கள் ஜென்ம நட்சத்திரத்திற்குரிய திருத்தலத்தை, அந்த நட்சத்திரம் வரும் தினத்தில், முழு நம்பிக்கையுடன், ஆத்ம சக்தியுடன் வழிபட்டு வாருங்கள். அதன் பிறகு, உங்கள் வாழ்க்கையில் நிச்சயம் ஒரு புதிய வெளிச்சம் பிறக்கும். வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம், சாதாரண நாட்களிலும் இந்த ஆலயங்களுக்கு சென்று வழிபட்டால், உங்கள் கஷ்டங்கள் பெருமளவு குறையும்.

**27 நட்சத்திரங்களும் திருத்தலங்களும்**

**1.அஸ்வினி**
அருள்மிகு இறவி மருந்தீஸ்வரர் திருக்கோயில்
**இருப்பிடம்:**
திருவாரூரிலிருந்து 30 கி.மீ. தூரத்தில் உள்ள திருத்துறைப்பூண்டி. பஸ் ஸ்டாண்டிலிருந்து 1 கி.மீ. தூரத்தில் கோயில் உள்ளது.

**2.பரணி**
அருள்மிகு அக்னீஸ்வரர் திருக்கோயில்
**இருப்பிடம்:**
மயிலாடுதுறையிலிருந்து 15 கி.மீ. தூரத்தில், காரைக்கால் செல்லும் சாலையில் உள்ள நல்லாடை கிராமம்.

**3.கார்த்திகை**
அருள்மிகு காஞ்சீசுவரர் திருக்கோயில்
**இருப்பிடம்:**
மயிலாடுதுறையிலிருந்து பூம்புகார் செல்லும் வழியில் 8 கி.மீ. தூரத்தில் கருஞ்சாநகரம். மெயின் ரோட்டிலிருந்து அரை கி.மீ.

**4.ரோகிணி**
அருள்மிகு பாண்டவதூதப் பெருமாள் திருக்கோயில்
**இருப்பிடம்:**
காஞ்சிபுரம் ஏகாம்பரேஸ்வரர் கோயில் எதிரே.

**5. மிருகசீரிடம்**
அருள்மிகு ஆதிநாராயணப் பெருமாள் திருக்கோயில்
**இருப்பிடம்:**
தஞ்சாவூரிலிருந்து திருவாரூர் செல்லும் வழியில் 50 கி.மீ., முகாந்தனூர் அருகில்.

**6.திருவாதிரை**
அருள்மிகு அய்யா வரதீஸ்வரர் திருக்கோயில்
**இருப்பிடம்:**
தஞ்சாவூரிலிருந்து 70 கி.மீ., அதிராம்பட்டினம் அருகில்.

**7.புனர்பூசம்**
அருள்மிகு அதீஸ்வரர் திருக்கோயில்
**இருப்பிடம்:**
வேலூரிலிருந்து கிருஷ்ணகிரி செல்லும் வழியில் வாணியம்பாடி அருகில்.

**8.பூசம்**
அருள்மிகு அசயபுரீஸ்வரர் திருக்கோயில்
**இருப்பிடம்:**
பட்டுக்கோட்டையிலிருந்து ராமேஸ்வரம் செல்லும் கிழக்கு கடற்கரைச் சாலை வழியில்.

**9.ஆயில்யம்**
அருள்மிகு கற்கடேஸ்வரர் திருக்கோயில்
**இருப்பிடம்:**
கும்பகோணத்திலிருந்து சூரியனார் கோவில் செல்லும் சாலையில் திருவிசநல்லூர் அருகில்.

**10. மகம்**
அருள்மிகு மகாலிங்கேஸ்வரர் திருக்கோயில்
**இருப்பிடம்:**
திண்டுக்கல்லிலிருந்து நத்தம் செல்லும் சாலையில் விராப்பட்டி அருகில்.

**11.பூரம்**
அருள்மிகு ஸ்ரீஹரி தீர்த்தேஸ்வரர் திருக்கோயில்
**இருப்பிடம்:**
புதுக்கோட்டையிலிருந்து பட்டுக்கோட்டை செல்லும் வழியில் 7 கி.மீ. தூரத்தில் உள்ள திருவரங்கம் கிராமத்தில் ஆலயம் அமைந்துள்ளது.

**12. உத்திரம்**
அருள்மிகு மாங்கல்யேஸ்வரர் திருக்கோயில்
**இருப்பிடம்:**
திருச்சி சத்திரம் பஸ் ஸ்டாண்டிலிருந்து 22 கி.மீ. தூரத்தில் உள்ள லால்குடி, அங்கிருந்து 5 கி.மீ. தூரத்தில் இடையாற்று மங்கலம் கிராமம்.

**13.ஹஸ்தம்**
அருள்மிகு கிருபா கூபரேஸ்வரர் திருக்கோயில்
**இருப்பிடம்:**
கும்பகோணத்திலிருந்து மயிலாடுதுறை செல்லும் வழியில் குத்தனல்லூர் அருகே, அங்கிருந்து பிரியும் சாலையில் 8 கி.மீ. தூரத்தில் கோமல் கிராமம். பஸ், ஆட்டோ வசதி உண்டு.

**14. சித்திரை**
அருள்மிகு சித்திரரத வல்லபெருமாள் திருக்கோயில்
**இருப்பிடம்:**



மதுரையிலிருந்து 23 கி.மீ. தூரத்தில் உள்ள குருவித்துறை. அங்கிருந்து 3 கி.மீ. தூரத்தில் கோயில். வியாழன், பௌர்ணமி தினங்களில் பேருந்து வசதி உள்ளது.

**15.சுவாதி**
அருள்மிகு தாத்ரீஸ்வரர் திருக்கோயில்
**இருப்பிடம்:**
சென்னையிலிருந்து பூந்தமல்லி வழியாக தண்ணீரை செல்லும் பாதையில் 8 கி.மீ. தூரத்தில் சித்துக்கோடு கிராமம். குறிப்பிட்ட நேரங்களில் மட்டுமே பேருந்து வசதி.

**16. விசாகம்**
அருள்மிகு முத்துக்குமாரசுவாமி திருக்கோயில்
**இருப்பிடம்:**
மதுரையிலிருந்து 155 கி.மீ. தூரத்தில் உள்ள செங்கோட்டை, அங்கிருந்து 7 கி.மீ. தூரத்தில் திருமலைக்கோவில். பேருந்து மற்றும் வேன் வசதி உள்ளது.

**17. அனுஷம்**
அருள்மிகு மகாலட்சுமிபுரீஸ்வரர் திருக்கோயில்
**இருப்பிடம்:**
மயிலாடுதுறையிலிருந்து சீர்காழி செல்லும் வழியில் 7 கி.மீ. தூரத்தில் உள்ள திருநின்றியூர்.

**18. கேட்டை**
அருள்மிகு வரதராஜப் பெருமாள் திருக்கோயில்
**இருப்பிடம்:**
தஞ்சாவூரிலிருந்து கும்பகோணம் செல்லும் வழியில் 13 கி.மீ. தூரத்தில் உள்ள பகவதி கோயில் பஸ் ஸ்டாப்பிற்கு அருகில்.

**19. மூலம்**
அருள்மிகு சிங்கீஸ்வரர் திருக்கோயில்
**இருப்பிடம்:**
சென்னை கோயம்பேட்டிலிருந்து பேரம்பாக்கம் வழியாக 45 கி.மீ. தூரத்தில் மம்பேடு கிராமம்.

**20. பூராடம்**
அருள்மிகு ஆகாசபுரீஸ்வரர் திருக்கோயில்
**இருப்பிடம்:**
தஞ்சாவூரிலிருந்து திருவையாறு சென்று, அங்கிருந்து கல்லணை செல்லும் வழியில் 4 கி.மீ. தூரத்தில் கருவெளி.

**21. உத்திராடம்**
அருள்மிகு பிரம்மஹரீஸ்வரர் திருக்கோயில்
**இருப்பிடம்:**
சிவகங்கையிலிருந்து காரைக்குடி செல்லும் வழியில் 12 கி.மீ. தூரத்தில் ஒக்கூர், அங்கிருந்து 3 கி.மீ. தூரத்தில் பூங்குடி.

**22. திருவோணம்**
பிரசன்ன வெங்கடேசப் பெருமாள் திருக்கோயில்
**இருப்பிடம்:**
வேலூரிலிருந்து சென்னை செல்லும் வழியில் 20 கி.மீ. தூரத்தில் உள்ள காவேரிப்பாக்கம், அங்கிருந்து 2 கி.மீ. தூரத்தில் திருப்பாற்கடல்.

**23.அவிட்டம்**
அருள்மிகு பிரம்மஞான புரீஸ்வரர் திருக்கோயில்
**இருப்பிடம்:**
கும்பகோணம் மகாமகக் குளம் மேற்கு கரையிலிருந்து 4 கி.மீ. தூரத்தில் உள்ள கொடுக்கை கிராமம்.

**24.சதயம்**
அருள்மிகு அக்னிபுரீஸ்வரர் திருக்கோயில்
**இருப்பிடம்:**
திருவாரூர் மாவட்டம், நன்னிலத்திலிருந்து நாகப்பட்டினம் செல்லும் வழியில் 10 கி.மீ. தூரத்தில் திருப்புழையூர்.

**25. பூரட்டாதி**
அருள்மிகு திருவானேஸ்வரர் திருக்கோயில்
**இருப்பிடம்:**
திருவையாற்றிலிருந்து 17 கி.மீ. தூரத்தில் திருக்காட்டுப்பள்ளி, அங்கிருந்து 2 கி.மீ. தூரத்தில் ரங்கநாதபுரம்.

**26. உத்திரட்டாதி**
அருள்மிகு சகஸ்ரலட்சமீஸ்வரர் திருக்கோயில்
**இருப்பிடம்:**
புதுக்கோட்டையிலிருந்து ஆவுடையார்கோவில் சென்று, அங்கிருந்து திருப்புவனவாசல் செல்லும் வழியில் 21 கி.மீ. தூரத்தில் தீயத்தூர்.

**27. ரேவதி**
அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயில்
**இருப்பிடம்:**
திருச்சியிலிருந்து முசிறி சென்று, அங்கிருந்து தாத்தையங்கார் பேட்டை வழியாக 5 கி.மீ. தூரத்தில் காகுடி கிராமம்.

இந்த 27 நட்சத்திரத் திருத்தலங்கள்,நமது பூர்வ ஜென்ம கர்மங்களைச் சீர்செய்யும் அதீத ஆன்மீக சக்தி கொண்டவை.

உங்கள் ஜென்ம நட்சத்திர நாளில்,இந்த ஆலயங்களில் வழிபாடு செய்தால்,மன அமைதி, தடைகள் நீக்கம், வாழ்க்கை முன்னேற்றம் நிச்சயமாக ஏற்படும்.

முனைவர்
**இராம.வேதநாயகம்**

# தினம் ஒரு தலைவர்கள் எம்.என்.ராய் வரலாறு

மனபேந்திர நாத் ராய் அல்லது எம். என். ராய் 21 மார்ச்சு 1887 – 26 ஜனவரி 1954) இந்தியா விடுதலை அடைய புரட்சிச் செயல்களில் ஈடுபட்டவர். ஒரு கம்யூனிஸ்ட்டு, போராளி, சிந்தனையாளர், நாத்திகர் என்று இவர் போற்றப்படுகிறார்.



**பிறப்பும் படிப்பும்**

இவரது இயற்பெயர் நரேந்திர நாத் பட்டாச்சாரியா. தந்தை ஒரு புரோகிதர். ராய் மேற்கு வங்கத்தில் ஆர்பிலியா என்னும் ஊரில் பிறந்தார். அவருடைய பள்ளிப்படிப்பு ஆர்பிலியாவில் தொடங்கியது. வங்கத்தொழில்க் கழகத்தில் பொறியியலும் வேதியியலும் கற்றார். சொந்த முயற்சியில் தொடர்ந்து படித்து தம் அறிவைப் பெருக்கிக்கொண்டார்.

**தேசிய உணர்ச்சி**

19ஆம் நூற்றாண்டின் இறுதியில் இந்திய தேசிய உணர்ச்சி எங்கும் பரவத்தொடங்கியது. பங்கிம் சந்திர சட்டர்ஜி, விவேகானந்தர் ஆகியோரின் எழுத்துகளைப் படித்து உணர்வு பெற்றார். பிரித்தானிய அரசுக்கு எதிராகப் போராடி இந்தியா விடுதலை பெறவேண்டும் என்று விரும்பினார். ஆயுதப்புரட்சி மூலம் மாற்றம் காணலாம் என்று நம்பினார். இந்தியர்களுக்கு தனி அரசியல் அமைப்பு சட்டம் வேண்டும் என்பதை முதன்முதலாக, 1927 ல் வலியுறுத்தி பேசினார்.

**பொதுவுடைமைக் கட்சி**

மெக்சிக்கோவிலும் இந்தியாவிலும் பொதுவுடைமைக் கட்சியைத் தொடங்கினார். தொழிலாளர் பற்றிய சட்டங்களைப் படித்து அவற்றில் ஆழ்ந்த அறிவு பெற்றார். மெக்சிக்கோவிலிருந்து உருசியாவுக்குச் சென்றார். அங்கு லெனின், டிராட்ஸ்கி, ஸ்டாலின் ஆகியோரின் நட்பைப் பெற்றார். 1923இல் கம்யூனிஸ்டுக் கொள்கைத் திட்டம் வகுக்கப்பட்டது. இக்கொள்கைத் திட்டத்தில் எம். என். ராயின் கருத்துக்களும் விவாதிக்கப்பட்டன. பின்னர் உஸ்பெகிஸ்தான், சீனா ஆகிய நாடுகளுக்கும் சென்று பொதுவுடைமைக் கருத்துகளைப் பரப்பினார்.

**தந்தை பெரியாருடன் எம்.என்.ராய்**



லெனின் அவர்களுடன் இரஷ்ய நாட்டில் பணியாற்றித் திரும்பிய இந்திய நாத்திக அறிஞர் எம்.என்.ராய் அவர்களையும் அவரது துணைவியாரையும் 1941 பிப்பிரவரியில் சென்னையில் சென்ட்ரல் தொடர்வண்டி நிலையத்தில் பெரியார் ஈ.வெ.ரா. வரவேற்றபோது எடுத்த படம். இடதுகோடியில் நிற்பவர் முன்னாள் அமைச்சர் எஸ்.முத்தய்யா முதலியார்.
– 'விடுதலை', 26.2.1941

**இந்தியாவுக்குத் திரும்பல்**

1930 டிசம்பரில் இந்தியாவுக்குத் திரும்பினார். ஜவகர்லால் நேரு, சுபாஸ் சந்திர போஸ் ஆகியோரைச் சந்தித்துப் பேசினார். இந்தியாவில் காங்கிரஸ் கட்சியில் சேர விரும்பினார். இருப்பினும் காந்தியடிகளின் தலைமையை அவர் விரும்பவில்லை. பம்பாயில் கைதாகி சிறைக்குச் சென்றார். இன்டிபெண்டென்ட் இந்தியா என்னும் இதழை நடத்தினார். ஏஐடியூசி என்னும் தொழிற்சங்கத்திற்குப் புத்துயிர் கொடுத்துத் தொடங்கி வைத்தார். ஆனால் பிற்காலத்தில் முதலாளிய சனநாயகத்தையும் கம்யூனீசத்தையும் வெறுத்து ஒதுங்கினார். புரட்சிகர மனிதநேயம் என்ற கொள்கைக்காக தம் இறுதிக் காலத்தில் பாடுபட்டார். 1954இல் டேராடூனில் இறந்தார்.

# 'ஒரே கலரில்... ஒரே காரில்': பங்கேற்ற விஜய் - த்ரிஷா!



AGS குழுமத்தின் உரிமையாளர்களில் ஒருவரான கல்பாத்தி எஸ். சுரேஷின் மகன் திருமணம் இன்று சென்னையில் மிக விமரிசையாக நடைபெற்றது. இந்நிலையில் மாலை திருமண வரவேற்பு விழா நடைபெற்றது. இந்த வரவேற்பு நிகழ்ச்சியில் நடிகர் விஜய் மற்றும் நடிகை திரிஷா ஆகியோர் ஒன்றாக கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினர்.

ஒரே காரில் வந்த இருவரும், ஒரே நிறத்தில் ஆடைகள் அணிந்துவந்ததும் கவனம் ஈர்த்துவருகிறது. கடந்தவாரம் விஜய்யின் மனைவி சங்கீதா அவரிடமிருந்து விவாகரத்துக்கோரி செங்கல்பட்டு குடும்பநல நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தார். நடிகை ஒருவருடன் உடனான தகாத உறவே இதற்கு காரணம் எனவும் குறிப்பிட்டிருந்தார்.

இந்த விவாகரத்திற்கு நடிகை த்ரிஷாவுடனான தொடர்புதான் காரணம் என சமூக வலைதளங்களில் பல்வேறு வதந்திகள் பரவி வருகின்றன. எனினும், இது குறித்து விஜய் அல்லது த்ரிஷா தரப்பிலிருந்து எந்தவொரு அதிகாரப்பூர்வமான விளக்கமும் அளிக்கப்படவில்லை. இந்நிலையில் இருவரும் ஒன்றாக விழாவில் பங்கேற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.



நடிகை ஸ்ரீலீலா தென் இந்திய மொழிகளில் முன்னணி நடிகையாக வளர்ந்து இருக்கிறார். அவர் தமிழில் கடைசியாக பராசக்தி படத்தில் நடித்து இருந்தார். தெலுங்கு, தமிழ் என ஒரே நேரத்தில் பல படங்களில் அவர் நடித்து வருகிறார். இன்ஸ்டாவில் 15 மில்லியனுக்கும் மேல் ரசிகர்கள் வைத்திருக்கிறார் அவர். ஸ்ரீலீலா தற்போது ஹோலி ஸ்பெஷலாக ஒரு போட்டோஷூட் எடுத்து இருக்கிறார். அதை வெளியிட்டு ஹோலி வாழ்த்துக்கள் சொல்லி இருக்கிறார் அவர்.

# #ThugLife பட நடிகைக்கு மார்பக புற்றுநோய்



எனக்கு கிரேடு 1 மார்பக புற்றுநோய் இருப்பதாக பெற்றோரிடம் சொல்லும் தைரியம் எனக்கு கிடைத்தது. சிகிச்சைக்கு பின் தற்போது நான் நன்றாக குணமடைந்து வருகிறேன்.

கமல்ஹாசன் நடித்த 'தக் லைப்' படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் பிரபலமானவர் ராஜ்ஸ்ரீதேஷ்பாண்டே. தொடர்ந்து இந்தி, மலையாளம், மராத்தி என இந்திய அளவில் பிரபல நடிகையாக இருந்து வருகிறார். இந்நிலையில் ராஜ்ஸ்ரீதேஷ்பாண்டே தனக்கு மார்பக புற்றுநோய் இருப்பது கண்டறியப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள பதிவில், 'வழக்கமான உடல்பரிசோதனையின் போது எனக்கு கிரேடு 1 மார்பக புற்றுநோய் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. ஆரம்பத்தில் கண்டறியப்பட்டதால் சிகிச்சை எளிதானது. இதை படிக்கும் அனைவருக்கும் சொல்ல வேண்டிய நேரம் இது. எனக்கு கிரேடு 1 மார்பக புற்றுநோய் இருப்பதாக பெற்றோரிடம் சொல்லும் தைரியம் எனக்கு கிடைத்தது. சிகிச்சைக்கு பின் தற்போது நான் நன்றாக குணமடைந்து வருகிறேன். விரைவில் மருத்துவமனையில் இருந்து வீடு திரும்புவேன்' என பதிவிட்டுள்ளார்.

# சாய் அபயங்கரின் 'பவழ மல்லி' பாடலை வெளியிட்ட சிம்பு




தமிழ் திரையுலகில் முன்னணி இசையமைப்பாளராக உருவெடுத்து வருபவர் சாய் அபயங்கர். இண்டீ பாடல்கள் மூலம் பிரபலமான சாய் அபயங்கர் சமீபத்தில் வெளியான பல பெரிய திரைப்படங்களுக்கு இசையமைத்துள்ளார். மேலும், நடிகர் சூர்யா மற்றும் ஆர்.ஜே. பாலாஜி கூட்டணியில் உருவாகி இருக்கும் கருப்பு திரைப்படத்திற்கும் இசையமைத்துள்ளார்.

இதுதவிர மேலும், சில பெரிய பட்ஜெட் திரைப்படங்களுக்கு இசையமைத்து வரும் சாய் அபயங்கர் தனது அடுத்த இண்டீ பாடலுக்கான ப்ரோமோ வீடியோவை வெளியிட்டுள்ளார்.

"பவழ மல்லி" என தலைப்பிடப்பட்டுள்ள இந்த பாடலை விவேக் எழுத, ஸ்ருதி ஹாசன் பாடியுள்ளார். சாய் அபயங்கர் இசையில் உருவாகி இருக்கும் இந்தப் பாடலை நடிகர் சிம்பு வெளியிட்டுள்ளார். இந்த பாடலில் சாய் அபயங்கருடன் சேர்ந்து கயாடு லோஹர் நடனமாடியுள்ளார்.

# 'மனிதன் தெய்வமாகலாம்' படத்தின் டீசரை வெளியிட்ட தனுஷ்




மனிதன் தெய்வமாகலாம் படத்தை விஜயா சதீஷ் தயாரிக்கிறார்.

செல்வராகனுக்கு ஜோடியாக அறிமுக நடிகை குஷி ரவி நடிக்கிறார்.

இயக்குநர் டென்னிஸ் மஞ்சுநாத் இயக்கத்தில் 'மனிதன் தெய்வமாகலாம்' என்ற படத்தில் செல்வராகவன் நடித்து வருகிறார். விஜயா சதீஷ் இப்படத்தை தயாரிக்கிறார்.

இப்படத்தில் செல்வராகனுக்கு ஜோடியாக அறிமுக நடிகை குஷி ரவி நடிக்கிறார். மேலும், வை.ஜி. மகேந்திரன், மைம் கோபி, கௌசல்யா, சதீஷ், விர்திகா, என். ஜோதி கண்ணன் உள்ளிட்ட பலர் முக்கிய பாத்திரங்களில் நடிக்கின்றனர்.

இயற்கையும் அமைதியும் சூழ்ந்துள்ள ஒரு கிராமத்தில் நிகழும் பெரும் சோகம் அதன் ஒற்றுமையை சிதைக்கிறது. அதனைத் துடைத்தெறிய மக்கள் மனவலிமையில் போராடும் நாயகன், தனது கிராமத்தைக் காப்பாற்ற எடுக்கும் தீர்மானம், அவனை அங்கு தெய்வமாக உயர்த்துகிறது. இதுவே படத்திற்கான அற்புதமான தலைப்பை உருவாக்கியது.

இந்நிலையில், 'மனிதன் தெய்வமாகலாம்' திரைப்படத்தின் டீசரை நடிகர் தனுஷ் வெளியிட்டுள்ளார்.




எதிர்நீச்சல் சீரியலில் ரேணுகா என்கிற கதாபாத்திரத்தில் நடித்து வருபவர் நடிகை பிரியதர்ஷினி. இவர் நடிகை மற்றுமின்றி சின்னத்திரையில் மிகவும் பிரபலமான தொகுப்பாளரும் ஆவார். இவர் தற்போது மாலத்தீவிற்கு வெகேஷன் சென்றுள்ளார். அங்கு எடுத்துக்கொண்ட புகைப்படங்களை தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பிரியதர்ஷினி பதிவு செய்துள்ளார். அந்த புகைப்படங்கள் தற்போது இணையத்தில் வைரலாகி வருகிறது.

# 'சாரா' எனக்கு மகள் போன்றவர்- இயக்குநர் ஏ.எல்.விஜய் நெகிழ்ச்சி

சாரா எனக்கு மகள் போன்றவர்- இயக்குநர் ஏ.எல்.விஜய் நெகிழ்ச்சி #SaraArjun

சாரா இந்திய அளவில் பிரபலம் அடைந்தார்.

புதிய பட வாய்ப்புகள் சாராவை நோக்கி படையெடுக்கின்றன.

ஏ.எல்.விஜய் இயக்கத்தில் விக்ரம் நடிப்பில் வெளியான படம் 'தெய்வதிருமகள்'. இப்படத்தில் குழந்தை நட்சத்திரமாக அறிமுகமானவர் சாரா அர்ஜூன்.



தற்போது கதாநாயகியாக உருவெடுத்துள்ள சாரா அர்ஜூன் 'துரந்தர்' படத்தில் கதாநாயகியாக நடித்திருந்தார். படம் மிகப்பெரிய வெற்றி பெற்று சாரா இந்திய அளவில் பிரபலம் அடைந்தார். தொடர்ந்து புதிய பட வாய்ப்புகள் சாராவை நோக்கி படையெடுக்கின்றன.

இது குறித்து இயக்குநர் ஏ.எல். விஜய் கூறுகையில், 'சாரா எனக்கு மகள் போன்றவர். பெற்றோரிடம் இருப்பதைவிட என்னிடம் அதிகமாக இருந்தவர். வாரத்திற்கு ஒரு முறையாவது இப்போதும் பேசிக் கொண்டிருக்கிறோம். 'துரந்தர்' படத்தை பார்த்து விட்டு சாராவிடம் அப்பா, அம்மா பெருமை அடைந்திருப்பார்களா?' என கேட்டேன். அதற்கு சாரா 'நீங்களும் பெருமையடைந்திருப்பீர்களே?' என கேட்டார். 'அவளை நினைத்தால் மகிழ்ச்சியாக இருக்கிறது' என்றார்.

# TheBoys தொடரின் கடைசி சீசன் வெளியாகும் தேதி அறிவிப்பு




2019-ஆம் ஆண்டு அமேசான் ஓடிடி தளத்தில் வெளியான 'தி பாய்ஸ்' தொடர் ரசிகர்களிடையே பெரும் வரவேற்பை பெற்றது. சூப்பர் ஹீரோக்கள் வில்லன்களாக இருந்தால் எப்படி இருக்கும் என வித்தியாசமான யோசனையில் உருவான இந்த தொடர் பெரும் வெற்றி பெற்று அடுத்தடுத்த பாகங்கள் வெளியாகி சக்கை போடு போட்டது.

சூப்பர்மேன் பவர் கொண்ட ஹோம்லேண்டர் என்ற வில்லனை கொலை செய்ய பில்லி பட்சர் என்ற டீம் முயற்சிப்பதே இந்த தொடரின் முக்கிய ஒன்லைன்.

இந்நிலையில், 'தி பாய்ஸ்' தொடரின் இறுதி சீசன் ஏப்ரல்-8 வெளியாகும் என தயாரிப்பு நிறுவனம் அறிவித்துள்ளது. இந்த் சீசனிலாவது ஹோம்லேண்டர் கொல்லப்படுவாரா என்று தி பாய்ஸ் ரசிகர்கள் ஆவலுடன் இடங்க தொடரை எதிர்பார்த்து காத்துள்ளனர்.

சீரியல் நடிகை ஷபானா தனது கணவர் ஆர்யன் உடன் தாய்லாந்தின் புகெட் தீவுக்கு ட்ரிப் சென்று இருக்கிறார். செம்பருத்தி சீரியல் மூலமாக பாப்புலர் ஆகி மற்ற பல தொடர்களிலும் நடித்து இருக்கும் நடிகை ஷபானா, பாக்கியலட்சுமி சீரியல் புகழ் நடிகர் ஆர்யனை காதல் திருமணம் செய்துகொண்டார்.

தாய்லாந்து ட்ரிப்பில் அவர்கள் எடுத்துக்கொண்ட புகைப்படங்களை இன்ஸ்டாவில் வெளியிட்டு இருக்கின்றனர். ஷார்ட் ஆன ட்ரெண்டி உடையில் ஷபானா அங்கே வலம் வந்திருக்கிறார்.



# நீங்கள் அரசியல்வாதியா? நடிகரா?- பேரரசு தாக்கு



ஒரு கட்சிக்கு ஆதரவாக பேசுங்கள். அது உங்கள் விருப்பம், அது தவறில்லை.

திரைத்துறையை சார்ந்தவர்கள் பல கட்சிகளில் இருக்கலாம்.

நடிகர் சத்யராஜுக்கு கண்டனம் தெரிவித்து இயக்குநர் பேரரசு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:-

சத்யராஜ் நீங்கள் யார் தியாகியா? அரசியல்வாதியா? திரைப்பட நடிகரா? சினிமா தொழிலில் இருந்து கொண்டு நடிகர்களை இனி மேலும் சிறுமைப்படுத்தி பேசாதீர்கள். உங்கள் மகளுக்கு தி.மு.க.வில் பதவி கிடைத்தது எப்படி? தியாகி சத்யராஜ் மகள் என்ற முறையிலா கிடைத்தது? பிரபல நடிகர் மகள் என்ற முறையில் தான் உங்கள் மகளுக்கு பதவி கிடைத்தது. உங்களை மேடையில் உட்கார வைத்ததின் காரணம் என்ன? மக்களுக்காக பல போராட்டங்களை கண்டவரா? இல்லை மிகப்பெரிய சமூக சீர்திருத்தவாதியா? உங்களை மேடை ஏற்றியதற்கான தகுதி என்ன? நீங்கள் ஒரு பிரபல திரைப்பட நடிகர் என்று ஒரே காரணம்தான். ஒரு கட்சிக்கு ஆதரவாக பேசுங்கள். அது உங்கள் விருப்பம், அது தவறில்லை.

நடிகர்கள் என்றால் அவர்களுக்கு ஒன்றுமே தெரியாது, அவர்கள் முட்டாள்கள் என்ற தோரணையில் ஒரு நடிகராய் இருந்து கொண்டு நீங்க பேசாதீர்கள். இந்த கருத்து உங்கள் முகத்திற்கு முன்னேயும் திரும்பும். திரைத்துறையை சார்ந்தவர்கள் பல கட்சிகளில் இருக்கலாம். ஆனால் எந்த துறை, எந்த தொழில் நமக்கு சோறு போட்டதோ அந்த தொழிலுக்கு எதிராக இருக்கக் கூடாது. இன்னொன்று சமூக நீதிக்கும் சனாதனத்திற்கும் போட்டியே வராது. ஏனென்றால் சனாதனம் என்பது சமூக நீதிதான். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.சத்யராஜ் குறித்து பேரரசு வெளியிட்டுள்ள அறிக்கை வைரலாகி வருகிறது.

# #HappyRaj ஹேப்பி ராஜ் வரான்... ரிலீஸ் அப்டேட் கொடுத்த படக்குழு




இசையமைப்பாளரும், நடிகருமான ஜி.வி. பிரகாஷ் குமார் நடிப்பில் உருவாகி இருக்கும் திரைப்படம் "ஹேப்பி ராஜ்." இந்தப் படத்தை அறிமுக இயக்குநரான மரியா ராஜா இளஞ்செழியன் இயக்குகிறார். அவர் பிரதீப் ரங்கநாதனின் 'லவ் டுடே' படத்தில் உதவி இயக்குநராக பணியாற்றியவர்.

இந்தப் படத்தில் ஜி.வி. பிரகாஷ்-க்கு ஜோடியாக ஸ்ரீகௌரி பிரியா நடிக்கிறார். மேலும், இந்தப் படத்தின் மூலம் 11 வருடங்களுக்குப் பிறகு தமிழ் சினிமாவிற்கு அப்பாஸ் கம்பேக் கொடுக்கிறார். இந்தப் படத்திற்கு ஜஸ்டின் பிரபாகரன் இசையமைக்கிறார். ஹேப்பி ராஜ் படத்தின் முதல் பாடலாக "ஆடினே இருப்பேன்" வெளியாகி ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றது. ஜஸ்டின் பிராபகரன் இசையில் துல்லலான பாடலாக "ஆடினே இருப்பேன்" அமைந்தது.

இந்த நிலையில், ஹேப்பி ராஜ் திரைப்படம் வருகிற மார்ச் 27-ஆம் தேதி உலகளவில் திரையரங்குகளில் வெளியாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், இதற்கான போஸ்டரும் வெளியிடப்பட்டுள்ளது.


# கருப்பு படத்தில் இருந்து விலகினாரா ஆர்.ஜே. பாலாஜி?



நடிகர் சூர்யா மற்றும் இயக்குநர் ஆர்.ஜே. பாலாஜி கூட்டணியில் உருவாகி இருக்கும் திரைப்படம் "கருப்பு." பலமுறை இந்தப் படத்தின் ரிலீஸ் தேதி மாற்றப்பட்டுள்ள நிலையில், இந்தப் படத்தின் ரிலீஸ் குறித்து இதுவரை எந்த தகவலும் வெளியாகாமல் இருக்கிறது.

டிரீம் வாரியர் பிக்சர்ஸ் தயாரிப்பில் உருவாகி உள்ள கருப்பு படத்திற்கு சாய் அபயங்கர் இசையமைத்துள்ளார். கதாநாயகியாக திரிஷா நடித்துள்ளார். மேலும், சுவாசிகா, இந்திரன்ஸ், யோகி பாபு, ஷிவாதா, சுப்ரீத் ரெட்டி, அனகா மாயா ரவி மற்றும் நட்டி நட்ராஜ் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். இந்தப் படம் நீதிமன்ற வழக்கு ஒன்றை மையமாக வைத்து அதில் கடவுள் நம்பிக்கையை இணைத்து உருவாகியுள்ளது. இந்த நிலையில், கருப்பு திரைப்படத்தின் பின்னணி வேலைகளின் போது இயக்குநர் ஆர்.ஜே. பாலாஜிக்கும், தயாரிப்பாளர் எஸ். ஆர். பிரபுவுக்கும் ஏற்பட்ட மோதல் காரணமாக ஆர். ஜே. பாலாஜி படத்தில் இருந்து விலகியதாகவும், படத்தின் பின்னணி வேலைகளை முடித்து, ரிலீசுக்கு கொண்டுவர முடிவு செய்யப்பட்டுள்ளதாக x தளத்தில் பதிவிடப்பட்டுள்ளது.

# 'கெணத்த காணோம்' படத்தின் டிரெய்லரை வெளியிடும் கார்த்தி




நடிகர் யோகி பாபு புதிதாக நடிக்க உள்ள படம் 'கெனத்த காணோம்'. இப்படத்தில் யோகி பாபுவுக்கு ஜோடியாக லவ்லின் சந்திரசேகர் நடித்துள்ளார். இப்படத்தை 'ஒரு கிடாவின் கருணை மனு', 'சத்ய சோதனை' போன்ற தாக்கத்தை ஏற்படுத்தும் கதைகளை இயக்கிய சுரேஷ் சங்கையா இயக்கியுள்ளார்.

இப்படத்தில் ஜார்ஜ் மரியன், ரேச்சல் ரெபெக்கா, ராமகிருஷ்ணன் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். ஆர்.பி. டாக்கீஸ், பாக்ஸ் ஆபிஸ் ஸ்டுடியோ மற்றும் ஜியோ ஹாட்ஸ்டார் ஆகியவை இணைந்து இப்படத்தை தயாரித்துள்ளார். இப்படத்திற்கு வி.தியாகராஜன் ஒளிப்பதிவு செய்கிறார். நிவாஸ் கே. பிரசன்னா இசையமைக்கிறார்.

இந்நிலையில், 'கெணத்த காணோம்' படத்தின் டிரெய்லர் நாளை காலை 10 மணிக்கு வெளியாகும் என படக்குழு அறிவித்துள்ளது. இந்த டிரெய்லரை நடிகர் கார்த்தி வெளியிட உள்ளார்.

# ஆக்ஷன் தெறிக்கும் "லீடர்" டீசர்



தி லெஜெண்ட் நியூ சரவணா ஸ்டோர்ஸ் புரொடக்ஷன்ஸ் தயாரிப்பில் உருவாகி இருக்கும் இந்தப் படத்திற்கு எஸ். வெங்கடேஷ் ஒளிப்பதிவு செய்ய பிரதீப் படத்தொகுப்பை கவனிக்கிறார். கலை இயக்க பணிகளை துரைராஜ் மேற்கொண்டுள்ளார். இந்தப் படத்தின் சண்டை காட்சிகளை மேத்யூ மகேஷ் அமைத்துள்ளார்.

ஆக்ஷன் கதையம்சம் கொண்ட இந்தப் படத்தின் டீசரை படக்குழு வெளியிட்டது. இந்தப் படம் வருகிற ஏப்ரல் மாதம் வெளியாகும் என்று அறிவிக்கப்பட்டு இருக்கிறது.

பாடகி ஸ்ரேயா கோஷல் இந்திய அளவில் முன்னணி பாடகியாக இருப்பவர். அவரது குரலுக்கு மிகப்பெரிய ரசிகர் கூட்டம் நாடு முழுவதும் இருக்கிறது.

அவரது மெலோடியான பாடல்களை ரசிகர்கள் அதிகம் கொண்டாடுவார்கள். அதே நேரத்தில் அவரது மற்ற பாடல்களும் மிகப்பெரிய ஹிட் ஆகின்றன. அப்படி ஒரு பாடல் தான் Chikni Chameli. கத்ரீனா கைப் மிக கவர்ச்சியாக அந்த பாடலுக்கு ஆடி இருப்பார்.

இனி அது போன்ற பாடல்களை பாட மாட்டேன் என சொல்லி ரசிகர்களுக்கு ஷாக் கொடுத்து இருக்கிறார் ஸ்ரேயா கோஷல்.

### அவமானமாக கருதவில்லை

ஸ்ரேயா கோஷல் அப்படி பேசியதற்கு அதிகம் ட்ரோல்கள் வந்தது. அதற்கு விளக்கம் கொடுத்த அவர் "அப்படி ஒரு பாடலை பாடியதற்காக அவமானமாக கருதவில்லை. ஆனால் இனிமேல் அப்படி ஒரு பாடலை பாடமாட்டேன் என்று தான் கூறினேன்."

"ஒரு பாடல் ஹிட் ஆனால், அந்த பாடலை கச்சேரிகளில் மேடையில் பாட வேண்டி இருக்கிறது. குழந்தைகள் முன்பும் இப்படிப்பட்ட வரிகள் உடன் பாடல்களை பாட சங்கடம் ஏற்படுகிறது."

"Chikni Chameli பாடல் பாடிய நேரத்தில் நான் என்ன பாடுகிறேன் என எனக்கு புரியவில்லை. அந்த நேரத்தில் நான் அதிகம் mature ஆக இல்லை" என ஸ்ரேயா கோஷல் கூறி இருக்கிறார்.








## முயற்சி திருவினையாக்கும்

விழிகள் மூடிப் படுத்திருந்தால்
விடியல் விழிக்குத் தெரியாது
விழித்த விழிக்கே இருள்விரட்டி
விடிந்த ஒளியின் எழில்தெரியும்
வழியா வியர்வை உடலிருந்தால்
வாழ்க்கை இருளில் போய்முடியும்
பொழியும் வியர்வை உடலுக்கே
பொலியும் அழகு வாழ்வமையும் !

மண்ணில் காலை ஊன்றுதற்கு
மனத்தில் அச்சம் கொண்டிருந்தால்
மண்ணில் நிற்க முடியாது
மாற்றம் செய்ய இயலாது
எண்ணம் செயலாய் உருபெறவே
எழுச்சி நெஞ்சில் ஏற்றிவிட்டால்
விண்ணும் கைக்குள் அடங்கிவிடும்
வியக்கும் உயர்வும் உனையடையும் !

வெல்லும் முயற்சி இல்லாமல்
வெற்றி உன்னில் விளையாது
புல்லும் உனக்கு வில்லாகும்
புதிய முயற்சி உனக்கிருந்தால்
அல்லும் பகலும் சோராமல்
ஆற்றும் உறுதி
தளராமல்
சொல்லும் செயலும்
ஒன்றானால்
சொர்ணம்போல
வாழ்வொளிரும்!



**பாவலர்**
**கருமலைத்தமிழாழன்**

## பிரளயம்

போர் பதற்றம்
சூழ்ந்தது
எங்கும் வெடிச்
சத்தம்
மழலைகள்
முதியோர்
பாதுகாப்பில்லை
மனதைப் பிசையும்
ஓலம்

செய்தி
சேகரிப்போர்
செவிலியர்கள் பணி
முழு வீச்சில்

சர்வ நாசம்
படருகிறது
பூமியே பிளந்து
சமாதியாகும்
விதமாய் அணு
ஆயுதங்களின்
பயன்பாடுகள்

இப்போதே தங்கம்
தாறுமாறு
என்னவெல்லாம்
நடக்குமோ ஆக்க
மந்திராலோசனை
தேவைஅழிவிற்கு
ஏனலைகிறீர்?

ஈகோவை விட்டு
வாருங்கள்கூடிப்
பேசிமுடிவெடுப்போம்
உயர இருப்பவனே
உயர்ந்தவன்
நீங்களோ நாங்களோ
அல்ல.

**பி. பழனி,**
சென்னை.






மலர்வதற்கு
தேவை...
நீரோட்டம்..
காலநிலை
மாற்றம்..
வேரூன்றல்
தானே தவிர...
வீண் சப்தங்களும்...
வெற்று
அலங்காரங்களும்
அல்ல...



**தே.சௌந்தரராஜன்**
கல்யாணம் பூண்டி



அழுது கொண்டிருக்கும்
அந்த வான்மழையை பார்த்து
சிரித்து கொண்டிருக்கிறேன்
என்னை போல
அவனும் தனித்து
விடப்பட்டவன் தான்
எனக்கு துணையாக
அவனும் இருக்கிறான்
என்கிற ஆறுதல் தான்
இப்போதைக்கு புன்னகையை
தந்து விட்டு
சென்றிருக்கிறது.

ஏமாற்றம் வராமல் இருக்க
எதையுமே எதிர்பார்க்காதே
எதிர்பார்ப்பில்லாத வாழ்க்கை
நிறைய சந்தோஷங்களையும்
ஆச்சரியங்களையும்
போகிற போக்கில்
தந்து விட்டு செல்லும்.

தவறாக எண்ண வேண்டாம்
அவசரத்துக்கு
கைமாத்தாய் 143 தா
தினம், தினம் இரட்டிப்பு
வட்டியோடு நீ
போதும், போதும்ன்னு
சொல்லுமளவுக்கு
தந்து விடுகிறேன்!

நான் 420 தான்
உன் இதயத்தை
உனக்கே தெரியாமல்
களவாடியதால்!
ஈவு இரக்கப்பட்டு
திருடிய பொருளை
ஒருபோதும் திரும்ப தர
மாட்டான்
உனக்கு
வேண்டுமென்றால்
என்னுடையதை
திருடிக் கொள்!



**லி.நௌஷாத் கான்**

## கனியும் காலம்

## விழித்திரு

" நெருங்குகிறது
நெருங்குகிறது தேர்வு காலம்
சுண்டி இழுக்கிறது ..."

படி படி பலமாய் படி
விழித்திரு வீட்டில் இரு
வெற்றி பெறப்படி படி ..."

கைபேசியை விலக்கிப் படி
தொலைக்காட்சி
பெட்டியை தொலைவில்
வைத்துப் படி .... "

விரும்பிப் படி ஆழ்ந்துப் படி
அமைதியாய்ப் படி
அனுபவித்துப் படி .... "

ஏறு முகம் காணப் படி
பெற்றோர் ஆசிரியர்
தெய்வத்தின் ஆசி பெற்று
படி படி ....."

பயம் பயம் இல்லை என்று
நித்தம் நித்தம் அசை போட்டு
பயிற்சி செய்து முயற்சி செய்
நம்பிக்கையை
உயர்த்தி வை ....."

கடமை என்று எண்ணி
உழை மதிப்பெண் மழையாய்
பொழியும் ..."

வெறுப்பாய் கடுப்பாய்
கசப்பாய் மலைப்பாய்
எண்ணி படிக்காதே ..."

மறதி என்ற மாயை
தோற்றத்தின் திரையை
விலக்கி ஞானம் ஞாபகம்
என்ற போர்வையால்
அனணத்து விடு ..."

சொலும் படி வெல்லும் படி
அல்லும் பகலும் படி
நிறுத்திப் படி நியாயப் படி
திருந்திப் படி ..."

எப்படி என்று எதிர்மறை
காட்டாமல்
மேலும் படி
நாளும் படி
தேர்வு நேரம்
நெருங்குகிறது...."



**ஆர்.சீதாராமன்**
சீர்காழி



நான் விரும்பி பெறாதது
என்பிறப்பு

என் விருப்பமின்றி
வரப்போகும் இறப்பு
இதுயார் விதித்தது

நான் விரும்பி பெற்றது
உன் உறவு
என் விருப்பத்திற்கு எதிராக

நீயெடுத்த முடிவு நம் பிரிவு
இதுயேன் நிகழ்ந்தது

எதுவுமே பதில் இல்லா
கேள்வியாக

-------------------

வலிகளை கண்ட வழிகள்
உன் விழியை கண்டால் என்
வலி போயிடம்
என நினைத்தேன்..

நீ ஏற்படுத்திய காயமே என்
விழிகளுக்கு பெறும்
வலியை தந்தது..

வலிகளை கண்ட
என் விழிகளுக்கு
நீ ஏற்படுத்திய
காயங்கள் பெரிதல்ல..

எப்போதே மருத்து
விட்டது என இதயத்திற்கு
தெரியும் ஆனால்
அப்போதெல்லாம் விழிகள்
தான் கொட்டி தீர்க்கிறது..

எப்போதும் அழுவும்
விழிகளுக்கு தெரியும்
அது ஒரு நிரம்பிய
குளம் என்று..

-------------------

## தனிமை

தனிமை என்பது
சுடர்நிலை அல்ல அது
அகல்விளக்கின் அடி
இருள்...

**கவிஞர் பாலசந்தர்**
மண்ணச்சநல்லூர்

## வாழ்க்கைப் பயணம்

கனவுகள் சுமந்த பயணம்
இது !

முட்களும் மலர்களும் நிறைந்த
பாதை!

வீழ்வதும் எழுவதும் இயல்பு
இங்கே !

விடாமுயற்சியே வெற்றித்
தாரகை !

கண்ணீர்த் துளிகள் கடந்து
போகும்!

புன்னகை பூக்கள் பொழுது
விடியும்!

வாழ்வின் ரகசியம் அன்பில்
அறிந்திடு!

சிப்பிக்குள் விழுந்த
மழைத்துளி முத்தாக மாறுவது
போல
உன் வலி நிறைந்த நாட்களே
நாளை உன்னை செதுக்கும்!

தடைகள் ஆயிரம் வந்தாலும்
தளர்ந்து விடாதே !

வீழ்வது மரம் அல்ல மீண்டும்
எழப்போகும் விதை!

ஓடும் நதியாய்
ஓடிக்கொண்டிரு!

தேங்கும் குட்டையாய்
நின்று விடாதே !

உன் நம்பிக்கை தான்
உன் பாதை !

இருளைக் கண்டு அஞ்சாதே!
விடியல் உன் வாசலில்
காத்திருக்கிறது!

வியர்வை சிந்தும் உழைப்பு !
தோல்வி தந்த பாடம்!

உன் மீதான நம்பிக்கை!

இவை மூன்றும் இணைந்தால்
வெற்றி உன் கைவசம்!

கடல் அலைகள் போல்
இன்பமும் துன்பமும் மாறி
மாறி வரும் !

கரையைத் தொடும்
அலைகளாய் நம் முயற்சிகள்
இருக்கட்டும்!

நேற்று என்பது ஒரு கனவு,
நாளை என்பது ஒரு புதிர்
,இன்று மட்டும் நம் கையில்
உள்ள விலை மதிப்பற்ற பரிசு!


வலிகள் குறையும்போது
வாழ்க்கை அழகாகும் !

கவலை மறையும் போது
இதயம் லேசாகும் !

நேற்று என்பது உதிர்ந்த
இலை, நாளை என்பது மலராத
அரும்பு ,இன்று மட்டும்
உன் கையில் இருக்கும்
வாசம் ! வீழ்வது
எழுவதற்கே அலைகள்
சொல்லும் பாடம்!



**பெ.திருமுகம்** ஆசிரியர்
மணமேல்குடி



## என்னவளே...!!

உன்னிடம் மயங்கி கிடக்கும்
போதே என்னை மறந்து
விடு என்று உரைத்து
இருக்கலாம்.
இப்படி தனிமை விட்டு
நெஞ்சில் ஆறாத
ரணமாக
தங்கி விட்டாயே

நானும் என்னன்பும்
நேரம் ஆகஆக
சிங்கிள் டிக்குலேயே
இருக்கிறது என்னன்பும்
நானும். டபுள் டிக் வரும்வரை
காத்திருக்க முடியாமல்
உனக்கு ரீச்சார்ச்சும்
செய்துவிட்டேன்
நேற்று நீ சொன்னதை
நினைவில் வைத்து.

டபுள் டிக்கும் வந்து
காத்துக்கொண்டு
இருக்கிறேன். நீ இன்ஸ்டாவில்
ரீல்ஸோடும் ஸ்டோரியோடும்
தழுவிக்கொண்டும்
இருக்கிறாய்.புளூ டிக்
வரும்வரை காத்திருக்க
முடியமல் அழைத்துவிட்டேன்.
நீயோ துண்டித்து
புளூ டிக்குக்கு க்ரீன்
சிக்னலாக்கி ரெட் சிக்னலில்
என்னை நிறுத்தி
சென்றுவிட்டாய்.
இவ்வளவு காலம்
காத்திருந்ததற்கு
சிங்கிள்(டிக்லே)ளாக
இருந்திருக்கலாம்
நானும் என் அன்பும்.



**துங்கன்** (கோவை)

மகளிர் தின சிறப்பு கவிதை

## அக்னி சிறகுகள்:

அடுப்படியில் வெந்து
கொண்டிருக்கும் அக்னி
சிறகுகளே.....

பார்லரிலேயே தன்
வாழ்நாளில் பாதியை
கழித்துக் கொண்டிருக்கும்
பாவைகளே.....

ஆண்களுக்கு நிகராக
மது அருந்துவதே சம
உரிமை என்று நினைத்துக்
கொண்டிருக்கும் அறிவு
ஜீவிகளே....

அடுத்த நாள் என்ன
சமைக்கலாம் என்று
அனுதினமும் சிந்தித்துக்
கொண்டிருக்கும் சிந்தனை
சிற்பிகளே......

பெண் உரிமை என்பதை
எப்போது நீ சரியாக புரிந்து
கொள்கிறாயோ அன்றுதான்
பாரதியும் பெரியாரும்
பெருமூச்சு விடுவர்....

அன்பில் அன்னை
தெரசாவாய்....

ஆராய்ச்சியில் கல்பனா
சாவ்லாவாய்.....

ஒலிம்பிக்கில் P.T.
உஷாவாய்.....

பாரதியின் கனவை
நினைவாக்க முன்னேறிக்
கொண்டிருக்கும்
புதுமைப்பெண்களே....

கொடியாக இருங்கள்....
பற்றி படரும் கொடியாக
இல்லை....

செங்கோட்டையின்
உச்சியில் பறக்கும்
வெற்றிக்கொடியாக.....

**கவிசிற்பி.தங்க.பிரியதர்ஷினி**
கறம்பக்குடி

## தோல்வி !

காதலில் தோல்வி
கண்டவர்கள் தற்கொலை
செய்து கொள்வது எப்படி...
என்ற புத்தகத்தை தேடி
லைப்ரரியில்
அலைந்தபோது...
முதல் மாடிக்கு செல்ல
சொன்னார் ஒரு
இளைஞர்...
அங்கே மிகப்பெரும்
வரிசை நின்றிருந்தது...
" சார்... இந்த கியூ எதற்கு !'
என்று விசாரித்தான்....
" காதல் திருமணம்
செய்தவர்கள் ஏன் தற்கொலை
செய்கிறார்கள் !"
அப்படிங்கற புத்தகத்தை
வாங்க நிக்கற கியூ
வரிசை !"
அவன் சொல்ல மனதை
மாற்றி திரும்பினான்
அவன் !



**எம்.பி.தினேஷ்.**
கோவை

# நூல் விமர்சனம்

நூல் :
நம்பிக்கை நாற்றுகள் 100
நூல் ஆசிரியர் : சிந்தனைக் கவிஞர் கவிதாசன்
நூல் விமர்சனம்:
கவிஞர் இரா.இரவி
வெளியீடு : விஜயா பதிப்பகம்,
20, ராஜ வீதி, கோவை.
பக்கங்கள் 104,
விலை ரூ. 100




நம்பிக்கை நாற்றுகள் 100 படித்தால், நாற்றுகளாக இருக்கும் பயிர்களாக செழித்து வளர்ந்திட உதவிடும் உன்னத நூல். கையடக்க நூலாக படங்களுடன், ஓவியங்களுடன் சிறப்பாக வந்துள்ளது. பாராட்டுகள். நூலை சிறப்பாக வடிவமைத்து பதிப்பித்துள்ள விஜயா பதிப்பகத்திற்கு பாராட்டுகள். முத்துமுத்தாக 100 நம்பிக்கை நாற்றுகள் உள்ளன. முதல் நாற்று. "ஒவ்வொரு நாளும் அரை மணி நேரம் அறிவை வளப்படுத்த வாசியுங்கள். நேரமில்லை என்பது எரிபொருள் நிரப்ப நேரமில்லை என வாகனஓட்டி சொல்வதைப் போன்றது" அறிவை விரிவு செய்ய வாசிப்பு அவசியம். வாசிக்க நேரமில்லை என்பது, பெட்ரோல் நிரப்ப நேரமில்லை என்று கூறி வாகனஓட்டி தொலைதூர பயணம் மேற்கொண்டு பெட்ரோல் இன்றி பயணம் தடைபடுவதைப் போன்றது. வண்டி ஓட பெட்ரோல் அவசியம். அதுபோல மனிதனுக்கு வாசிப்பு அவசியம். வாசிப்பை சாதனையாளர்கள், தலைவர்கள் அனைவருமே நேசித்தவர்கள் என்பதை நாம் அறிவோம். வாசிப்புத்தான் அவர்களைத் தலைவர்களாக உயர்த்தியது. எனவே வாசியுங்கள். "சிந்திக்காமல் செயல்படுவது மூடத்தனம்! சிந்தித்த பிறகும் செயல்படாமல் இருப்பது முட்டாள்தனம்!" எந்த ஒரு செயலையும் சிந்தித்து பின் செயல்பட்டால் செயல் சிறப்பாகும். சிந்தித்துக்கொண்டே இருப்பது முட்டாள்தனம் தான். சிந்தனையைச் செயலாக மாற்றினால் சாதிக்க முடியும். வெல்ல முடியும், சிகரம் தொட முடியும். சிந்தனை + செயல் = வெற்றி என்பதை உணர்த்தியது சிறப்பு. நம்பிக்கை நாற்றுகள் 100ல், ஒருவரி போல ஆத்திசூடியும் உண்டு, இருவரி போல திருக்குறளும் உண்டு, மூவடி போல ஹைக்கூவும் உண்டு, நான்குவரி நாலடியாரும், வெண்பாவும் உண்டு. வாழ்வியல் கருத்துக்களை வெற்றிக்கான சாதனைக்கான சூட்சுமத்தை சொல்லித்தரும் நூல் இது. நூலாசிரியர் சிந்தனைக்கவிஞர் கவிதாசன் அவர்களுக்கு பாராட்டுகள். "சிந்தனைக் கவிஞர்" என்ற பட்டத்திற்கு பொருத்தமானவர் கவிதாசன் அவர்கள். "பிரச்சனையைத் தீர்க்க ஆர்வமுள்ளவரிடம் ஆலோசனை கேளுங்கள்! தீவிரப்படுத்தும் நோக்கம் உள்ளவரிடம் வேண்டாம்!" பொதுவாக பிரச்சனையைத் தீர்க்க ஆலோசனை வழங்கிடும் நல்லவர்கள் உண்டு. அவர்களிடம் மட்டுமே கலந்து ஆலோசிக்க வேண்டும். அதை விடுத்து பிரச்சனையை தூண்டிவிட்டு தீவிரப்படுத்தி சண்டைக்கு வழிவகுக்கும் கெட்டவர்களிடம் யோசனை கேட்க வேண்டாம் என்கிறார். "நன்றியுணர்வில்லாதவர்கள் எந்த நிலைக்கு உயர்ந்தாலும் அவர்களை மனிதர்களாக ஏற்றுக்கொள்வதில்லை குறள் வேதம்!" திருவள்ளுவரின் திருக்குறளை வழிமொழிந்து வடித்த நம்பிக்கை நாற்று சிறப்பு. ஆம், நன்றி மறந்தவர்களை நாம் மதிப்பதில்லை. நன்றியோடு உள்ளவர்கள் மேலே மேலே உயர வாய்ப்பு வளரும். மாமனிதர் அப்துல்கலாம் அவர்கள் குடியரசுத் தலைவராக பதவி ஏற்கும் விழாவிற்கு அவருக்கு நூல்கள் வழங்கிட நூல்களுக்கு அழைப்பு விடுத்தார். நன்றியுணர்வுடன் இருந்ததால் தான் மக்கள் போற்றும் குடியரசுத்தலைவராக விளங்கினார்.

கலாம் ஐயா பற்றி சிற்றிதழ்களில் வந்த செய்திகளை எல்லாம் வெட்டி ஒட்டி அவருக்கு அனுப்பி வைத்தேன். எனக்கு நன்றி சொல்லி மடல் அனுப்பி இருந்தார். அந்த மடலை பொச்சிசமாக பாதுகாத்து வருகிறேன். இதுபோன்ற நினைவுகளை மலர்வித்தது இந்த நாற்று. "தொடர் முயற்சியுடன் தோழமை கொண்டவர்கள் தோல்வியை துரத்தி அடிக்கிறார்கள்!" முயற்சி திருவினையாக்கும் என்றது திருக்குறள். முயற்சியால் வென்று மின்சாரம் கண்டுபிடித்தவர் எடிசன். கஜினிமுகமது 17 முறை முயற்சி செய்து வென்றார். ஒருமுறை முயற்சி செய்து தோற்றதும், அத்தோடு முயற்சியை கைவிட்டுவிடும் பலரை நாம் பார்க்கிறோம். தொடர்முயற்சி வேண்டும். எண்ணியதை முடியும்வரை முயற்சி செய்வதல்ல, எண்ணியதை முடிக்கும்வரை முயற்சி செய்வதே சிறப்பு. "நம்பிக்கையூட்டும் சொற்களும் நல்ல மருந்தே! நம்பிக்கையான சொற்களைப் பேசும்போது நாமும் குணமடைகிறோம்!" நண்பரை பார்க்க மருத்துவமனைக்குச் சென்றால் அவருக்கு ஆறுதலாக வார்த்தை பேச வேண்டும். எல்லாம் சரியாகி விடும். அறிவியல் முன்னேறி விட்டது. விரைவில் நலம் பெறுவீர்கள், கவலை வேண்டாம் என்று ஆறுதல் சொன்னால், அவருக்கு மருந்தாக அமையும். அதை விடுத்து சிலர் எதிர்மறையாக பேசுபவர்களும் உண்டு. அவர்களின் பேச்சு அவர்களை ரணப்படுத்தி விடும். மேலும் நோயாளியாக்கி விடும். எனவே நேர்மறையான நம்பிக்கை தரும் நல்ல சொற்களையே பேசுவது கடமை என்பதை உணர்த்தியது சிறப்பு. "புண்படுத்தியவரையும் பண்படுத்தும் இயல்புடையவரே பண்பட்டவராவார்" இதற்கும் திருக்குறள் தான் நமக்கு உதாரணம். "இன்னா செய்தாரை ஒறுத்தல்", நமக்கு தீங்கு இழைத்த பகைவருக்கும், அவரே வெட்கப்படும்வண்ணம் நன்மை செய் என்றார். இந்த திருக்குறள் தான் காந்தியடிகளின் அகிம்சை கோட்பாட்டிற்கு அடிப்படையாக இருந்தது. இந்தத் திருக்குறளையும் திருவள்ளுவரையும் அறிமுகம் செய்தவர் ரஷ்யாவில் வாழ்ந்த லியோ டால்ஸ்டாய் என்ற அறிஞர். ஆனால் இன்று நம்மில் பலர் புண்படுத்தியவரை திரும்ப புண்படுத்தவே எத்தனித்த வருகின்றனர். அது தவறு. பண்பாக நடந்து கொள்வது மனிதனுக்கு அழகு என்பதை உணர்த்தியது சிறப்பு. "எப்பொழுதும் கவனமாகப் பேச வேண்டும் ஏனென்றால் எழுதியதைக் கூட திருத்தி எழுத முடியும் பேசியதை,,,?" இதைப் படித்தவுடன், "கனியிருப்பக் காய் கவர்ந்தற்று" திருக்குறளே என் நினைவிற்கு வந்தது. கனிபோன்ற இனிமையான சொற்கள் இருக்கையில், காய்போன்ற வன்சொற்கள் எதற்கு? இந்தத் திருக்குறளை படித்துவிட்டுப் போய் வெளிநாட்டிலிருந்து மதுரைக்கு வந்த தமிழ் படித்தார் ஒருவர். நாம் பேசும்போது கவனமாகப் பேசுவது முக்கியம். "தீயினால் சுட்ட புண்" திருக்குறளும் நினைவிற்கு வந்தது. கவனமாக இன்சொல் பேச வேண்டியதை அவசியத்தை உணர்த்தியது. "பொறுமை என்பது ஓர் ஆற்றல்மிகு ஆயுதம் மனவலிமை இல்லாதவர் களுக்கு அதைக் கையாளத் தெரியாது" விதையை விதைத்துவிட்டு குரங்கு தினமும் எடுத்து எடுத்துப் பார்த்ததாம், வளரவில்லை என்று வருத்தப்பட்டதாம், பொறுமை இன்றி எடுத்துப் பார்த்தால் எப்படி வளரும்? எனவே சிலவற்றில் பொறுமை அவசியம் என்பதை உணர்த்தியது சிறப்பு. நூலாசிரியர் சிந்தனைக்கவிஞர் கவிதாசன் அவர்களுக்கு மீண்டும் பாராட்டுகள்.




## போர் வேண்டாமே...

உலகத்தில் அமைதி மலர்
மலரட்டுமே ... கைகளில்
இருக்கும் ஆயுதங்களை
விட்டு அன்புடன்
பேசுவோமே... உலக
மக்களின் கண்களில்
கண்ணீர் எதற்கு????
நாடுகளுக்கு எல்லைகள்
இருந்தாலும் மனங்கள்
ஒன்றுதானே... இருட்டடிக்கும்
போர் எதற்கு???? ஆயுதம்
தாங்கி எதற்கு அச்சுறுத்த
வேண்டும்?? அகிலத்தில்
ஜனித்தவர்கள் சகோதர
சகோதரிகள் அன்றோ
போர் வேண்டாமே...
அகிலம் முழுவதும் அமைதி

பிறந்து மக்கள்
மனதில்
உற்சாகம்
என்ற மலர்
மலரட்டுமே...

**உஷா முத்துராமன்**

## சுற்றம் பேணிடல் நலமென்க!

அறுசீர் மண்டிலம்.

சுற்றமே சொந்தமாம்
அறிந்திடு சோர்ந்திடும்
காலமே தெரிந்திடு
உற்றநல் உதவியை
அளித்திடு உணர்ந்துநீ
நன்றியில் களித்திடு!
பற்றுடன் நாளுமே
நடந்திடு பாங்குடன்
வேளையில் வினவிடு
கற்றதை நலமுடன்
உரைத்திடு காலமும்
அணைத்து நீ நிறைந்திடு!

குற்றமே பார்த்திடின்
சுற்றமே குவலயந் தன்னிலே
இல்லையே சற்றுமே
அன்புதான் குறைந்திடின்
சந்ததம் வாழ்விலே துன்பமே!
நற்றவம் செய்திடல்
வேண்டுமே நலமுடன்
சுற்றமே அமைந்திட
மற்றவர் யாரையும்
சுற்றமாய் மாண்புடன் ஏற்றிடப்
பழகிடு!

**முனைவர்
இராம.வேதநாயகம்.**



உன் வாய்மொழி
என் தாய் மொழி
கேட்டால் இனிக்கிறதே
முகம் பார்க்கையில்
அகம் வேர்க்கையில்
இந்த உலகம் துளிர்க்கிறதே..

ஏனடி பெண்ணே
நீ நடந்தால் என் இதயம்
அதிர்கிறதே உன் காலடி
மண்ணில் ஒரு கானகமே
இங்கு பூத்து நிற்கிறதே
பெயர் சூட்டிப் போ என
புதிது புதிதாய்ப்
பூக்கள் மலர்கிறதே
உன் பெயரைத்தானே
சூட்டி மகிழ்ந்தேன்
அத்தனை பூவுக்கும்

விரல்களின் இடைவெளி
அளவெடுத்தால்
அழகாய்ப் பொருந்தியதே
என் விரல்களில்கூட
தேனே சுரந்து
சுவைக்கச் சொல்கிறதே

உனக்கென எனக்கென
பூமிக்கூடு புதிதாய்த்
தோன்றியது இளங்குஞ்சுகள்

வரும்வரை
ஏதும்
செய்வோம்
இளமை
தொலையாமல்.

**ரிஷபன்**

## தர்மத்தின் வாழ்வுதனை...!

அறுசீர் மண்டிலம்.

அறத்தின் வழியிலே
செல்வார்க்கு ஆங்கே
சோதனை வந்திடுமே
திறமாய்க் கண்டவர்
உழைத்தாலே தேர்ந்து
சாதனை தந்திடுமே!
நிறைவாய்த் தர்மமே
வென்றுவிடும்
நெஞ்சில் தேனையே
வார்த்துவிடும் குறைவாய்
எண்ணியே வாழாமல்
கூர்த்த வாழ்வினை
வாழ்ந்திடுக!

தொடக்க செயல்களைச்
செய்கையிலே தொடரும்
சோதனை வந்திடுமே
முடிவில் சாதனையாய் மாறும்
மேன்மை கொண்டு நீ
உழைத்திடுக!
தடையைப் படியென
எண்ணிடு நீ தாங்கும்
சக்தியே வந்திடுமே

படிக்கல்
லாகவே
மாற்றிவிடு
பாதை
தெரியுமே
பாங்காக!

**முனைவர்
இராம.வேதநாயகம்**
திருவண்ணாமலை.



## தாய்மை

தோளில் சுமக்கும்
சுமைகள் எல்லாம்
காலின் வழியாக காணாமல்
ஓடி விடுகிறது
அம்மாவின் மடியில்
தலைசாய்க்கும் போது.

ஏலம் போடுகிறார்கள்
யாரும் எடுக்க
முன் வருவதில்லை
அப்பா அம்மாவை.

பையனின் போட்டோவை
தினம் தினம் பையிலிருந்து

எடுத்து
பார்கக்கும்
முதியோர்
இல்லத்தில்
தாய்.

**ஜயந்தி
சிவக்குமார்**
திருச்சி.



## பேருந்தில் அவள்...

மிகப் பெரிய பேராசை தான்
எனக்கு, ஓயாமல் அவள்
கன்னத்தை முத்தமிடும்
கம்மலாக இருக்க...
ஆனால்,அவள்
ஆடை நெறிகளில்
தெரிகிறதே,அவளின்
கண்ணியமும்,கர்வமும்
யார் வீட்டில்
பிறந்த தேவதையோ
தெரியவில்லை,?
இன்று தெரிகிறாள்

பேருந்தில்
பேரழகியாய்...

**வே.
சுபலட்சுமி**
அரூர்
இப்படிக்கு,
அவளை ரசித்த
நான்.



## குழந்தைகளைக் கொண்டாடுவோம்

பகர்கின்ற கட்டாயக் கல்விச் சட்டம்
பறைசாற்றும் குழந்தைதொழி லாளர்சட்டம்
முகம்காட்டும் கண்ணாடி போலயிங்கே
முன்னிருந்தும் கண்மறைக்கும் வறுமையாலே
அகரத்தை எழுதுதற்கே கனவு கண்டு
அன்புத்தாய் நீவிவிட்ட அரும்விரல்கள்
தகதகக்கும் கந்தகத்து மருந்தில் தோய்ந்து
தயாரித்துத் தருகிறது நெருப்புக்குச்சி !

சீருடையில் அழகொளிரச் சிரிப்பு திர்த்துச்
சிற்றுந்தில் அமர்ந்தபடி கைய சைத்துப்
பேருவகை தருமென்று கனவு கண்டு
பெருமன்பில் நீவிவிட்ட பிஞ்சு விரல்கள்
சீருடையில் தொழிற்சாலை பெயர்விளங்க
சீறிவரும் வெடிமருந்து வாசம் வீசும்
பேருந்தில் செல்கிறது வறுமை என்னும்
பெயரழிக்கத் தீக்குச்சி அடுக்குதற்கே !

பூப்போன்ற மென்விரல்கள் புத்தகத்தைப்
புரட்டிக்கண் வியந்திடவே பார்த்துப் பார்த்து
நாப்புரள பேசுதற்கு முயற்சி செய்து
நல்லறிவு பெறவாய்த்த இளமை தன்னில்
தீப்பற்றும் வெடிமருந்து கிடங்கிற் குள்ளே
திரியாக வறுமையிலே கருகுவ தெல்லாம்
காப்பாற்றத் திட்டங்கள் வகுத்திடாமல்
கள்ளராக ஆட்சிசெய்யும் கயவராலே !

கல்லுடைத்தும் மண்சுமந்தும் துணிது வைத்தும்
கடும்வெயிலில் சித்தாளாய் வேலை செய்தும்
பொல்லாத வறுமையினைப் போக்கு தற்குப்

பொழுதுழைக்கும் தாயுக்குத்துணையாய் நின்று
கல்விதனைக் கற்கியலா குழந்தை கட்குக்
காப்பாக நாமிருப்போம் ! பிஞ்சு கட்கு
நல்லதொரு கல்விதனை நாம்கொ டுத்தே
நற்காலம் அவர்வாழ்வில் பூக்க வைப்போம் !

**பாவலர் கருமலைத்தமிழாழன்**



1. நிம்மதியில் நுழைய
வேண்டும் எனில்
எதிர்பார்ப்பில் இருந்து விலக
வேண்டும்

2. நண்பன் நேருக்கு நேர்
சொல்வான்

எதிரி நாலு பேர் முன்பாக
விமர்சிப்பான் துரோகி நீ
இல்லாத நேரம் பார்த்து
விமர்சிப்பான்

3. கோபமாக இருக்கும்
மனைவியை கூல்
பண்ணுவதும் ஸ்கேல்
இல்லாமல் கோடு போடுவதும்
ஒன்றுதான் நாம ஒரு பக்கம்
இழுத்து விட்டால் அது ஒரு
பக்கம் இழுத்துட்டு போகும்

4. நல்லவராக நடிக்க
எல்லோராலும் முடியும் ஆனால்
நல்லவராக வாழ
ஒரு சிலரால் தான் முடியும்

5.பரிகாரம் செய்து விட்டால்
கடவுளும் பணம் கொடுத்து
விட்டால் மனிதனும்
சமாதானம் அடைந்து
விடுவார்கள் என்று
நினைக்கும் உலகம் இது

---------------------

1. அழகைப் பற்றி கனவு
காணாதீர்கள் அது உங்கள்
கடமையை பாழாக்கி விடும்
கடமையைப் பற்றி கனவு
காணுங்கள் அது உங்கள்
வாழ்க்கையை அழகாக்கும்

2. வாழ்க்கை என்றால்
மேடு பள்ளம் இருக்கத்தான்
செய்யும் அங்கே
சமநிலையை தேடுவதை
விட
சமாளித்து ஓடுவதே
புத்திசாலித்தனம்

3. பணம் இல்லாத எது
ஒன்றையும் இந்த உலகம்
மதிப்பது இல்லை அது
நானாக இருந்தாலும் சரி
அல்லது நீயாக இருந்தாலும்
சரி

4. பயன்படுத்திக் கொள்ளாத
நிமிடங்களை தான்
நேரமே சரியில்லை என நாம்
சலித்துக் கொள்கிறோம்

5. மதிப்பற்றது என்று
தெரிந்தும் அதை பற்றியே
சிந்தித்துக் கொண்டு
இருந்தால் நிம்மதியை இழக்க
நேரிடும்

---------------------

1 மூர் மார்க்கெட்டிலும்
சைனா பஜாரிலும்
என்ன கேட்டாலும் கிடைக்கும்
என்றார்கள் நான் கடன்
கேட்டேன் இல்லை என்றான்
பாவி

2. உலகில் நடக்கும்
அக்கிரமங்களை காணச்
சகிக்காமல் வானத்தில்
இருக்கும் வருண பகவான்
வடிக்கின்ற கண்ணீர் தான்
மழை

3.ஏழையர் செல்வர்
பாகுபாடின்றி சுகமாக
உறங்கும் இன்பத் தொட்டில்
சுடுகாடு கூவம் ஒருபுறமும்
குற்றாலம் மறுபுறமும்
கலந்தாடும் சன்னிதானம்

4.போடுக கள்ளை ஒரு
மொந்தை போட்டபின் ஆடுக
அதற்குத் தக



5. மரத்தடி ஜோதிடர்
தனக்கு நெடு ஆயுள்
என்றார்
மறுநாளே மரம் விழுந்து
அவர் மரணம்

**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி

## போர் வேண்டாம் பாரில் அமைதிதான் வேண்டும்!

எண்சீர் மண்டிலம்.

பெண்ணாசை மண்ணாசை
பொன்னாசை வேண்டாம்
பெருமைகாக்கும்
அமைதியன்றோ
பீடுறவே தேவை!
கண்ணான மண்காத்துக்
கண்ணியமாய் ஓங்கிக்
கருத்தாக விளைச்சல்கள்
காண்போமே மாந்தா!
மண்ணிதிலே பெண்ணின்றி
மகத்துவமே இல்லை!
மாண்புடனே
பெண்ணியத்தைக்
காத்திடவே நிற்போம்!
பொன்மேலே ஆசைவைத்துப்
பொலிவுதனை ஆக்காப்
போதுமென்ற மனம்தானே
வேண்டுமடா மாந்தா!

உயிரெல்லாம் மாய்கின்ற
நிலையேதான் வேண்டா
உணர்வுபூர்வ மாயெண்ணி
ஊக்கத்தைக் கொள்க!
நயன்மையுடன் சமாதானப்
புறாதன்னை விட்டு
நாளும்தான் போரின்றி
நடந்திடுவோம் பாரில்!
பயத்தோடு பாங்கான
அச்சம்தான் கொண்டு
பாலலகரும் அழிகின்றார்
பாவிகளே பாரீர்!
தயங்காமல் ஐநாசபை
தாரணிக்கு நல்ல
தக்கவாறு செய்தியைத்தான்
தந்திடவே வேண்டும்!

**முனைவர்
இராம.வேதநாயகம்.**
திருவண்ணாமலை.

## பொறுத்துக்கொள் வீராக !

ஆட்சிக் கட்டிலில்
அமர்ந்தவர்களின் ஆட்சி
சரியில்லையெனில்,அடுத்தது
சரியாகிவிடும் என்று
ஐந்தாண்டு காலம்
நாம் பொறுத்து
போவதில்லையா....
அடுத்த ஐந்து ஆண்டுகளும்
ஆட்சி சரியில்லாமல்
போனாலும் நாம் பொறுத்துக்
கொள்ளதான் ஆக
வேண்டும்....ஒவ்வொரு
ஐந்தாண்டு காலமும்
ஆட்சியையே பொறுத்துக்
கொள்ளும் நம் குடும்ப
வாழ்க்கையும் அது
போலவே.... நாளை
சரியாகிவிடும் என்று

மனதோடு
சமரசம்
செய்து கால
சக்கரத்தை
நீட்டிச்
செல்வதை
தவிர வேறு
வழியில்லை !

**எம்.பி.தினேஷ்.**
கோவை



கடை வீதியில் உன்னைக்
கண்டேன்

விதவிதமான பொருட்களை
வாங்கிக்கொண்டிருந்தாய்...

நானும் கடைவீதி
யிலிருந்தேன்,

அன்பெனும்
பொருளை இலவசமாக
விநியோகித்துக்கொண்டு,

ஆனால்,

நீ என்னைத்தவிர

மற்றவர்கள்
எல்லோரிடமும்
வேண்டாத
பொருட்களையே
வாங்கிக்
கொண்டு
செல்கிறாய்...?

**எஸ் சந்திர சேகரன்
அமுதா** செஞ்சிக்கோட்டை



## ரோஜாப்பூ டீ

உன்னை அடிக்கடி பயமுறுத்தி
என்னை அணைக்க வைக்கும்
கரப்பான் பூச்சி
பல்லிக்கும் கூட
நன்றிக் கடன் பட்டு
அதனைப் பற்றிக் கவிதை
எழுதுகிறேன்!
இதனை வைத்தே
நீ யூகித்து விடலாம்
காதலின் மீது மட்டுமல்ல
உன் மீதும் எனக்கு
எவ்வளவு காதல் என்று!
நீ கோபத்தில் ருத்ரதாண்டவம்
ஆடும் போது கூட
அதில் சில அபிநயங்கள்
என் கவிதை வரிகளை
அழகாக்குகிறது தெரியுமா!
நீ மு த் த மி ட் டு வி ட் டு ச்
செல்கையிலெல்லாம்
நான் உணர்கிறேன்!
நீ வரும் போது ரோஜாப்பூத்
தேநீர் அருந்தி விட்டு
வந்திருப்பாயோ என்று!

## தேன் டீ

உன்னைத் தொடும்
ஒவ்வொரு முறையும்
வீணையை வாசித்தாற் போல்
அத்தனை சுகந்தம் எனக்கு!
கோயில்களுக்கு ஆலய
கோபுரம் அழகு தருவதுபோல்
என் உள்ளத்தரசி நீ என்
இதயத்தில் வீற்றிருப்பதே
நம் காதலுக்கு அழகு!
சர்க்கரையும் தேயிலைத்
தூளும் பாலும் கலந்து தான்
நீ தேநீர் தயாரிக்கிறாய்?
அதில் எப்பொழுது தான்
நீ கா த ல் கலப்பாய் என்றே
தெரியவில்லை!
உன்னிடமிருந்து நான் அதை
வாங்கி அருந்துகையில்
அது *தேன் நீராகி விடுகிறது!

## செம்பருத்திப்பூ டீ

நீ சமையலறையிலிருக்கும்
போதும்(கூட) என் மையல்
குறைவதில்லை!
நீ தயாரித்துத் தரும்
செம்பருத்திப் பூத்தேநீரில்
கூட அதிகபட்சக் காதல்
இடம் பிடித்திருக்கிறது!

அச்சிதழ்களில் தொடங்கி
மின்னிதழ்கள் வரை
நான் கவிதைகள் எழுத
ஆசையான காரணம்
உன்னிதழ்கள் தரும்
பரிசுகளை விட
வேறென்னவாக இருந்து விட
முடியும்?! நீ இடம் பெறாமல்
என்னிடம் ஒரு கவிதை
இருக்குமென்றால் அது
நான் இன்னும் எழுதாத
கவிதையாகத்தான் இருக்கும்!

## சங்கு பூ டீ

என் ப்ரிய சகி நீ(யே)
என்றும் என்னைப் பிரியாத
சகி(யும்)நீயே! உன் உருட்டல்
மிரட்டல்களில்(கூட)
என்னமாய் ஒரு புரிதலான
காதல்! நீ வழங்கும்
சுவையான சங்கு பூத்
தேநீரைப் போல் நீயும்
கூட வித்தியாசமான
சுவையுள்ளவள் தான்!
ஒவ்வொரு நாளையும்
இனிமையாக்குகிறது
இந்தக் காதல் போதுமா?!
இன்னும் கொஞ்சம்
வேண்டுமா?! என்ற உனதான
அன்பு! தீராக் காதலை நீ
தினசரி வழங்குவதால் தான்
என் காதல் ஒவ்வொரு
வினாடியும் மிகப்பேரழகாகவே
பயணம் செய்கிறது!

## கற்பூரவள்ளி டீ

நீ கஷாயம் கொடுத்தாலே
அது எனக்குக் கரும்பாக
இனிக்கும்! என் நலன் கருதி
நீ கற்பூரவள்ளி தேநீர்
கொடுத்தால் நான்
அருந்தாமல் தவிர்த்து
விடுவேனா என்ன!?
அம்புலிமாமா பாலமித்ரா
படிக்கும் செல்லப்பிள்ளை என
எல்லோரும் உன்னை
நினைக்கிறார்கள்!
அடுத்தடுத்த கட்டத்திற்கு
என்னை அழைத்துச் செல்லும்
அசகாய சுந்தரி நீயென்று
எனக்கல்லவா தெரியும்!
ஒவ்வொரு பெண்ணும் கதை
படிக்க நீயோ கதைகள்
எழுதும் தேவதை!
காதலெழுத உனக்குச்
சொல்லியா தர வேண்டும்!?
சொல்லித் தெரிவதில்லை
மன்மதக் கலை என்பார்கள்!
ஆனால் என் ரதி நீ
உன் சொல்லும் செயலும்
இருக்கிறதே அது என்
இப்பிறவியின் வரம்!
நீ வந்தாய்!

வரமாக உன்னையே
தந்தாய்!
என்றும் நீ வாழ்க
வளத்துடன் வளர்க
நலத்துடன்!

**முத்து ஆனந்த்**
வேலூர்

## இட ஒதுக்கீடு.

இட ஒதுக்கீடு சமத்துவத்தின் விதை.
சமத்துவத்திலிருந்து முளைத்த விதைதான் இட ஒதுக்கீடு,
சமூகம் உயர்வதற்கான நியாயத்தின் மறுசுழற்சி.
நூற்றாண்டு காலமாக வதைபட்டு நின்றவருக்குக் கிடைக்கும்
ஒளிவிளக்கு. நீதியின் கதவைத் திறக்கும் நம்பிக்கை அது.
அறிவும் திறமையும் எல்லோரிடமும் உள்ளது.

அதை வெளிக்கொணரும் வாய்ப்பு வேண்டும்.
ஒடுக்கப்பட்டோரின் கனவுகள் நனவாக,
வாழ்க்கைத்தரம் உயர இட ஒதுக்கீடு ஒரு
பாலமாக நிற்கும்.
சமத்துவம் நிறைந்த நாளை நோக்கி நடக்கும்
நலிவடைந்தோர் வெல்லும் பாதைக்கு இதுவே
விடிவெள்ளி.

**உ.மு.ந.ராசன் கலாமணி** கோயம்புத்தூர்.

## உங்களிடம் ஒரு வேண்டுகோள்

உங்களிடம் ஒரு
வேண்டுகோள் உள்ளத்தில்
எழுகிறதுஉண்மையைச்
சொல்லுங்கள் உங்களை
நீங்கள் எண்ணுங்கள்

உங்களிடம் ஒரு
வேண்டுகோள் உயிரைக்
காக்கும் மருத்துவத்தில்
விலையே இல்லாஉயிருக்கு
விலையும்வைக்கத்துணியாதீர்

உங்களிடம் ஒரு
வேண்டுகோள் அழகு
பார்த்து அகத்தை மறந்து
அமிலம் வீசத் துணியாதீர்


உங்களிடம் ஒரு
வேண்டுகோள் பொய்மை
பேசி தன் சுகம் பேணி
தரத்தை இழக்க நினையாதீர்

உங்களிடம் ஒரு
வேண்டுகோள்
அழியும் பொருளுக்கு
ஆசைப்பட்டு
அறத்தை அறவே
துறக்காதீர்

உங்களிடம் ஒரு
வேண்டுகோள் வீசும்
மலரின் மணம் போல பேசும்
மழலைகள் பலருண்டு அரக்க
குணத்தை விட்டொழித்து
அருளை மனதில் ஏற்றுங்கள்

உங்களிடம் ஒரு
வேண்டுகோள் இல்லை
என வருந்தாது இருப்பதை
நினைத்து மகிழுங்கள்

உங்களிடம் ஒரு
வேண்டுகோள்
வாழும் காலம் சிலவென்று
வகையாய் மனத்தில்
எண்ணியே அல்லன
தவிர்த்து நல்லன போற்றி
நலமாய் வாழ வழியறிவோம்

வையத்தில்

மனிதரெல்லாம்
வாழும் வகை
அறிந்தவரே நமக்கு
நாமே வினாத்தொடுக்க
விடைகள் உள்ளத்தில்
உலா வரும்.

**தமிழ்நிலா**




**WANTED**

M/F லோடுமேன்,பிக்கர், ஹெவப்ர்,
வர/மாத சம்பளம்: 450-700. உணவு
இடம் free day/N8 shift

**7540003588**


























Get Free Jobs Alert on Your
WhatsApp
Register Yourself on our
8122664699
WhatsApp Your Name, Age & Address on Above Number
Josh Jobs Team Give u Daily Update of Govt. as Well as Private Jobs













FREE MARRIAGE
INFORMATION CENTER :
இலவச திருமண
தகவல் மையம்
இலவச திருமண தகவல் மையம்
யாருக்கும் பணம் தர தேவை இல்லை
பணம் வங்கும் புரோக்கர்கள் தவிர்க்கவும்
www.enthuani.com
Call: 9337501889


ADIYOGI
REAL ESTATE
WHOLESALE
VADACHENNAI CALL DRIVER
ஆதியோகி
ரியல் எஸ்டேட்
CMDA DTCP அப்ரூவல்
வீட்டுமனைகள் விற்பனை
_CONTACT_
8939228901


Vilambaram
We
provide
Targeted Leads
to grow your
buisness
Boost
your
business
Call:: 91 7789941009, 9337501889
www.vilambaram.com


THINKING to BUY / SELL / RENT
a PROPERTY
New / Resale
Residential / Commercial
Plots Flats House
Villa Bungalows
Farm Land Ware Houses
Factory Sites Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Call :7871617005


SEVEN STARS
LOGISTICS PVT.LTD.
we simplify shipping for your business
We Build Perfection
IATA
Our Services are ...
Freight Forwarding, International Courier,
Customs Clearance, Cargo Movement by Air,
Sea and Road, Door to Door Service.
# 2, 2nd floor, Krishnan Koil Street, George Town,
Chennai - 600 001. INDIA.
+91 44 43570909 +91 96770 88843
info@sevenstarslogistics.com www.sevenstarslogistics.com


SADHANA DEVI.K
CAR WASH
SUPREME
Car Wash
& Detailing
Car Foam Pressure Wash
Teflon Coating
Ceramic Wax Treatment
Under Chassis Painting
Interior Foam Wash / Stain Remover
Paint Correction / Protection
We Done Here
9840882711
7200043675
Supremecarwashchennai@gmail.com
No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai - 600 081.


அருள்தரும்
தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்
www.arultharumdeivam.com
அற்புதமான
ஆன்மீக செய்திகள்,
பரிகாரங்கள்,
ஸ்தல வரலாறு மற்றும்
சுவாரஸ்யமான
தகவல்கள் மாதம்
இருமுறை படித்து
ஆன்மீகத்தை
அறியுங்கள்..


LOW COST
MATRIMONY
WEBSITE
CALL: 7789951009


MLMPERFECT.COM
Start Any MLM
Software @
Rs.499/Month
+ EMI Available
EMI
Trusted by
1000+
satisfied clients
Binary Plan
Matrix Plan
Level Plan
Generation Plan
Cryptocurrency MLM
9853719337 / 7436914247


WANTED
EXPERIENCED
SOCIAL MEDIA
CONTENT CREATORS
94386 10756


We Are Urgently Hiring!
Marketing Manager
Ad Sales (Print Media)
Package
Rs. 4.8 LPA
Company : PADMA DIGITAL BROADCAST PRIVATE LTD
Location : Chennai
Padma Digital a leading name in print media, is looking for a Marketing Manager – Ad Sales to join our dynamic team.
Key responsibilities for Marketing Manager
• Minimum 5 years of experience in print media ad sales
• Proven experience in space selling
• Strong background in field sales and client acquisition
• Excellent communication and negotiation skills
• If you're a results-driven professional with a passion for media sales, we want to hear from you
If you are interested
Do send your resume and portfollo to
padmamediapublications@gmail.com
Call: 9337501889
பாஸ்கர்
பேப்பர்பாய்
தெய்வம்
தமிழ்நாடு இ பேப்பர்.காம்


Any Website
Rs.10,000/-
Professional Websites at Affordable Price!
Call: 7789941009


Sanjay
Cell: 90032 64920
Real Choice
Retail & Wholesale Dealers In: Designer Sarees, Chudidhar, Laganga, Choli & Wedding Collection
#361, Mint Street, (Opp. New Jain Temple)
Sowcarpet, Chennai-600 079.
Real Choice Chennai
Real Choice Chennai
Real Choice Chennai


WANTED
Needed female staff to look after children, patients.
Contact
9150989424


சிவா விஷ்ணு
திருமண தகவல் மையம்
அனைத்து இனத்தவர்களுக்கும்
முதல் மணம் • மறுமணம்
பொருத்தமான ஜாதகங்கள் அனுப்பப்படும்
மணமகன் • மணமகள் தேவைப்படும் அனைவருக்கும்
நம்பகமான மற்றும் விரைவான சேவை
✓ அனைத்து இனத்தவர்களுக்கும் பதிவு
✓ ஜாதக பொருததம் பார்த்து அனுப்பப்படும்
✓ முதல் திருமணம் & மறுமணம் வசதி
✓ உடனடி தொடர்பு & சிறந்த பொருத்தம்
தொடர்புக்கு: 9150989424


WANTED
Retd, VRS, Home Makers, NRIs, Business Person
Contact
8248951872


WANTED
Site Supervisor required for construction work in Ambattur
Contact:
8428872887


START YOUR OWN
EPAPER
WEBSITE TODAY!
CALL 7789941009


Vilambaram
WE HELP YOU TO BOOST YOUR BUSINESS
VISIT:VILAMBARAM.COM
CONTACT: 8122798599


WANTED
Job 1-SALES ENGINEER
Required Experience:
05-07 years in selling Acrylic Laminates (Decorative for Interiors) in Tamil Nadu
Job 1-SALES ENGINEER
Required Experience:
05-07 years in selling Metal Roofing for PEB Building in Tamil Nadu
ALP AEROFLEX INDIA PVT. LTD.
Contact details for
Tamilnadu Location
Cell: 9884083322
Email: hari@alpoverseas.com


Wanted
REPORTERS
சட்டமன்ற தொகுதி வாரியாக
நிருபர்கள் தேவை
PRESS
PRGI No. TNBIL/25/A1564
பேப்பர்பாய்
8122664699


தனியார் வாகன உதிரிபாகங்கள் உற்பத்தி செய்யும் நிறுவனத்தில் பணிபுரிய ஆட்கள் தேவை.
Quality Line Inspector
Fresher/Exp Male Only
Qualification - ITI/Diploma/B.E
Final Quality Inspector
Fresher / Exp - Male/Female
Qualification: 10th/ 12th/ ITI
VMC Machine operator
Fresher/ EXP Male only
Qualif: 10th/12th/ITI/Diploma
Mr Prakesh : 8939 940 090
Mr.Neelavanan : 9884 001 253
SALARY BASED ON EXPERIENCE


TAMIL TELECALLER JOB FOR
WORK FROM HOME
ALL OVER TAMILNADU
APPLY NOW
7789951009
PRINT MEDIA, DIGITAL MEDIA
SOCIAL MEDIA
DAILY & MONTHLY SALARY
SALARY STARING FROM
Rs. 10000/- onwards
Whatsapp: 7789951009


UNIVERSAL ENGINEERS CHENNAI PVT LTD
உடனடி வேலை வாய்ப்பு திங்கள் முதல் வெள்ளி வரை காலை 10.00 மணிமுதல் மாலை 3.00 மணிவரை நேரில் வரவும்
அலுமினிய வெல்டர் - 5 நபர்கள்
டிக் (TIG) வெல்டர் - 5 நபர்கள்
ஹெல்பர்கள் - 25 நபர்கள்
பெண்டிங் மிஷின் ஆப்பரேட்டர்
Press Brake,Laser ஆப்பரேட்டர்
Turret ஆப்பரேட்டர்
5 - 6 வருடம் அனுபவம் உள்ளவர்கள் தேவை.
No. 72, North Phase, Ambattur Industrial Estate,Chennai - 600098
hr.executive@universalengineers.in
Ph: 8925928971



அருள்மிகு ஸ்ரீ மாலையம்மன் சமேத அருள்மிகு சுப்பிரமணியர் துணை
அருள்மிகு திருச்செந்தூர் முருகர் துணை
ஸ்ரீ ஹரி
ஜோதிட மையம்
ராசி
ஜாதகம், திருமணப் பொருத்தம், ஜாமக்கோள் , ஆரூடம் பார்க்கப்படும்.
தாம்பூல பிரசன்னம் , சோழி பிரசன்னம், அஷ்ட மங்கல பிரசன்னம்
மேலும் திருமணம், புத்திர பாக்கியம், கல்வி, தொழில் ஆகியவற்றில் ஏற்பட்ட தடைகளுக்கு ஜோதிடரீதியான தீர்வு செய்யப்படும்.
ஜோதிட நிபுணர் இராஜபாளையம்
இராமமூர்த்தி MA Astro
81899 08040 / 93425 03572
harisudhan1968@gmail.com



# பல்சுவை களஞ்சியம்




## நாட்டுப்பெண், மாட்டுப்பெண்



நீர்ப்பாசன வசதி உள்ள இடங்களில் நடவு செய்வதற்காக, வயலில் ஒரு சிறு பகுதியில் நாற்று விடுவார்கள். குறிப்பிட்ட நாள்கள் சென்ற பிறகு அந்த நாற்றுகளைப் பறித்து, பக்குவப் படுத்தப்பட்ட வேறு வயல்களில் நடுவார்கள் !

நாற்றைப் பறித்து எடுத்துச் சென்ற பின்பு அந்த இடம் வெட்புலமாக (VA-CANT) இருக்கும் அல்லவா ? அந்த இடத்தைப் பக்குவப் படுத்திவிட்டு வேறு இடத்தில் விடப்பட்டிருக்கும் நாற்றைக் கொண்டு வந்து இங்கு நடுவார்கள். இது தான் வேளாண் பெருமக்கள் பின்பற்றும் நடைமுறை !

இங்கு என்ன நிகழ்கிறது ? ஒரு வயலில் வளர்ந்திருக்கும் நாற்றைக் கொண்டுபோய் இன்னொரு இடத்தில் நடுகிறார்கள். அங்கு அது செழித்து வளர்ந்து பலன் தருகிறது. வளர்வது ஓரிடம்; நெல்மணியாம் வித்துக்களை விளைவிப்பது இன்னோரிடம் !

நம் வீட்டில் பிறந்து வளரும் நமது பெண்ணும் "நாற்று"ப் போன்றவள். வளர்வது நம்வீட்டில்; வாழ்வதும் பிள்ளைகளைப் பெற்றுக் குலம் தழைக்கச் செய்வதும் இன்னொரு வீட்டில். அவள் வளர்வது ஓரிடம்; வாழ்வது இன்னோரிடம். நம் வீட்டு நாற்றினைப் பறித்து இன்னொரு வீட்டில் நடுகிறோம். நாற்று அங்கு தன் வாழ்க்கையைத் தொடர்கிறது !

"நாற்றுப் பெண்" என்ற சொல் "நாட்டுப் பெண்" ஆயிற்று.

"நாற்று" போன்ற பெண் "நாற்றி" எனப்பட்டாள். "நாற்றி" என்பது திரிந்து "நாத்தி" ஆகிவிட்டது. "நாற்று அன்னார்" என்றால் நாற்று போன்றவள் என்று பொருள். நாற்று + அன்னார் = நாற்றன்னார் = நாற்றனார் = நாத்தனார் "நாத்தனார்".

நம் வீட்டில் விளக்கேற்றிய நமது பெண் திருமணமாகி இன்னொரு வீட்டுக்கு வாழசென்றுவிட்டாள். நம் வீட்டில் விளக்கேற்ற ஒரு மாற்றுப் பெண் வேண்டாவா ? நாற்றாகிச் சென்றுவிட்ட நமது வீட்டுப் பெண்ணுக்கு மாற்றாக வேறொரு ஊரில் பிறந்து வளர்ந்த ஒரு பெண்ணை நம் வீட்டுக்கு மருமகளாகக் கொண்டுவருவதுதானே முறை !

"நாற்று"ப் பெண் விளக்கேற்றிய வீட்டில், அவளுக்கு "மாற்றுப் பெண்"ணாக மருமகள் வருகிறாள். இந்த மாற்றுப் பெண்ணைத் தான் பலரும் "மாட்டுப் பெண்" ஆக்கி விட்டார்கள் !

லால்குடி
**வெ நாராயணன்**

## மீம்ஸ்








## உப்பு-இறைவனை உணர்த்தும் ஓர் அடையாளம்

கடலில் இருந்து தோன்றிய மஹாலட்சுமியின் அம்சமாக 'உப்பு' சொல்லப்படுவதால்தான்உப்பைச் சிந்தக் கூடாது' என்று நம் முன்னோர்கள் சொல்லிவைத்தனர். உப்பைக் காலில் மிதிக்கக் கூடாது' என்றும் சொல்வார்கள்
.
உப்பு உணவில் மட்டுமல்ல, நமது ஆன்மிக வாழ்விலும் முக்கியமானது. விதையும் இல்லாமல், மண்ணுமில்லாமல் கடலில் தோன்றும் இந்த 'அதிசய விளைச்சலை' வியக்காத ஞானியரே இல்லை
நீரில் தோன்றி, நீரிலேயே கரைந்து போகும் உப்பு ஜீவாத்மாவைப் போன்றது கடலே பரமாத்மா
.
'சமுத்திரமணி', 'நீர்ப்படிகம்', 'கடல் தங்கம்', 'பூமிகற்பம்', 'சமுத்திர ஸ்வர்ணம்', 'வருண புஷ்பம்', 'சமுத்திரக்கனி', 'ஜலமாணிக்கம்' என்றெல்லாம் உப்பு போற்றப்படுகிறது.
.
வீட்டில், 'திருஷ்டி', 'துர்சக்திகள் தொல்லை' ஏதாவது இருந்தால், உப்பு நீரைப் பாத்திரத்தில் இட்டு, வீட்டின் மையத்தில்





இருக்குமாறு வைத்து மூன்று நாள்கள் கழிந்த பிறகு கால்படாத இடத்திலோ, நீர் நிலைகளிலோ ஊற்றிவிடுவது தமிழர்களின் நெடுநாளைய வழக்கம்
இன்றும் திருஷ்டி கழிக்க, உப்பு சுற்றிப்போடுவது நாம் காணக்கூடிய நடைமுறையே. உப்பு துர்சக்திகளை, கெட்ட அதிர்வுகளை விரட்டும் ஆற்றல்கொண்டது! இப்படிப்பட்டசிறப்புகளை பெற்ற உப்பின் பெருமைகளை நாம் உணராமல் இருப்போமேயானால், அது மிகவும் தப்பு!



**ப.கோபிபச்சமுத்து.**
பாரதியார் நகர்,
கிருஷ்ணகிரி - 1




## விடுகதை

| | |
|---|---|
| வாயில் இருந்து நூல் போடுவான், மந்திரவாதி இல்லை; கிளைக்கு கிளை தாவுவான் ஆனால் குரங்கு இல்லை; வலை விரித்து பதுங்கி இருப்பான் ஆனால் வேடன் இல்லை அவன் யார்? | சிலந்தி |
| நீளவால் குதிரையின் வால் ஓடஓடக் குறையும் அது என்ன? | தையல் ஊசியும் நூலும் |
| எவர் கையிலும் சிக்காத கல், எங்கும் விற்காத கல் அது என்ன? | விக்கல் |
| கண்ணால் பார்க்கலாம் கையால் பிடிக்கமுடியாது அது என்ன? | நிழல் |
| செய்தி வரும் பின்னே மணி ஓசை வரும் முன்னே அவன் யார்? | தொலைபேசி |
| அள்ள முடியும் ஆனால் கிள்ள முடியாது அது என்ன? | தண்ணீர் |



## ஜோக்ஸ்

ஒருவர் ; லட்டுப் போல பொண்ணுப் பார்த்து கட்டி வைத்தியே எப்படி இருக்கா ?
மற்றவர் ;பூந்திப் போல குடும்பத்தை உடைத்து மகனை பிரித்து தனி குடித்தனம் போய் விட்டாள்.
-------------------------
நோயாளி ;நீங்க கடைசியா எழுதி உள்ள மருந்து எங்குமே கிடைக்கவில்லை .
மருத்துவர் ;.எங்குமே கிடைக்காது .அது என் கையெழுத்து .
-------------------------
செவிலியர் ;அறுவைச்சிகிச்சை செய்யும் நேரத்தில் புத்தகம் படிக்கிறீர்கள்
மருத்துவர் ;.சிறுநீரகம் எங்கு இருக்கும் என்பது மறந்து போச்சு. புத்தகத்தில் பார்க்கிறேன் .
-------------------------
மருத்துவ் பேராசிரியர் ;ஆண் மருத்துவ மாணவர்கள் மட்டும் இருந்த வகுப்பில் கர்ப்பபையைக் காட்டி இது என்ன தெரியுதா ? என்றார்.
பலரும் யோசித்தனர் .
மருத்துவ் பேராசிரியர் ; உனக்கும் எனக்கும் இல்லாதது அது என்ன? என்றார்



மாணவன் ; மூளையா ? என்றான் .
-------------------------
10000 ரூபாய் 20000 ரூபாய் செலவு செய்து சுற்றினால் சுற்றுலா என்கின்றனர்.
10 ரூபாய் 20 ரூபாய் செலவு செய்து சுற்றினால் தண்டச்சோறு என்கின்றனர் .
-------------------------
செவிலியர் ; நாளைக்கு நீங்க அறுவைச் சிகிச்சை செய்ய இருந்த நோயாளி 10 வது மாடியில் இருந்து குதித்து இறந்து விட்டார் .
மருத்துவர் ; அசச்சோ அவசரப்பட்டு விட்டாரே
-------------------------
ஜலதோஷம் ஏன் பிடிக்கிறது ?
மூக்கு மேலே இரண்டு ஐஸ் ( eyes) இருக்கு அதனால ஜலதோஷம் ஏன் பிடிக்கிறது ?

# தெய்வீக அருள் தரும் ஆன்மிகம்

## வாழை மற்றும் மாவிலைத் தோரணங்கள்



விழாக்கள் மற்றும் விசேஷ நாட்களில் கோவில்களில் வாழைமரம், மாவிலைத் தோரணங்கள் கட்டுவது ஒரு அறிவியல் காரணத்தைக் கொண்டுள்ளது. மக்கள் கூட்டத்தால் வெளியாகும் கார்பன் டை ஆக்சைட்டு மற்றும் வியர்வை போன்றவற்றால் மூச்சுத் திணறல் ஏற்பட வாய்ப்பு அதிகம். மாசுபட்ட காற்றை தூய்மைப்படுத்தி ஆக்ஸிஜன் நிரம்பிய நல்ல காற்றாக மாற்றி வழங்குபவை தான் இந்த வாழை மரமும், மாவிலைகளும். அதனால் தான் நம் முன்னோர்கள் விசேஷ நாட்களில் இவற்றை கட்டச் செய்தனர்.

## அரச மரம்



அரச மரங்கள் அதிக அளவில் பிராணவாயுவை வெளியிடுகின்றன. எனவே கோவில்களில் அரச மரத்தை நடுவது அல்லது கோவிலைச் சுற்றி இருப்பது நல்ல ஆற்றல் மற்றும் சுத்தமான காற்றைப் பெற உதவுகிறது. அதைச் சுற்றி அமர்ந்து தியானம் செய்வது உடலுக்கு மிகவும் நல்லது.

## நமஸ்காரம்




இந்திய பாரம்பரியத்தில் நமஸ்காரம் என்பது இரண்டு கைகளையும் கூப்பி, ஆள்காட்டி விரல்களின் நுனிகளை ஒன்றாக வைத்திருப்பது ஒரு அறிவியல் பூர்வமான உடலுக்கு ஆரோக்கியம் தரும் செயலாகும்.

## கோவிலை விட உயரமாக வீடு கட்டக்கூடாது

இடி இடிக்கும் பொழுது கோயில் கோபுரங்களின் உச்சியில் அமைக்கப்பட்டிருக்கும் கலசங்கள் அந்த மின்னதிர்ச்சியை உள்வாங்கி தரைக்கு கடத்தும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன. இதனால் அந்த கோபுரத்திற்கோ, சுற்றிலும் உள்ள வீடுகளுக்கோ எந்த பாதிப்பும் ஏற்படாது. எனவே தான் இன்றைய இடிதாங்கி அறிவியல் வசதி இல்லாத அக்காலத்தில், கோயிலை விட உயரமாக கட்டடங்கள் கட்ட வேண்டாம் என்று சொல்லி வைத்துள்ளார்கள் நம் முன்னோர்கள்.

# கோயில்களில் ஒளிந்திருக்கும் அறிவியல்



## கோவில்களில் உள்ள குடமுருட்டல்




இந்த குடமுருட்டல், கோவில் கோபுரங்களில் உள்ள கலசங்களின் மீது உள்ள அஸ்மா கலசத்தின் கதிர்வீச்சை, வானில் உள்ள அனைத்து ஆற்றல் மற்றும் சக்திகளை ஈர்த்து, கோயிலுக்குள் உள்ள கருவறைக்கு கொண்டு வருகிறது. இது கோவிலுக்குள் உள்ள ஆன்மிக ஆற்றலை வலுப்படுத்துகிறது.

## சாம்பிராணி புகை போடுவது



வீட்டில் பூச்சித்தொல்லை, கொசுத்தொல்லை, கண்ணுக்குத் தெரியாத கிருமிகள் போன்றவற்றின் நடமாட்டத்தை குறைக்க இந்த சாம்பிராணி போடப்படுகிறது. அத்துடன் வீட்டில் எதிர்மறை ஆற்றலைப் போக்கி நேர்மறை ஆற்றலை அதிகரிக்கச் செய்யவும் சாம்பிராணி மணம் உதவுகிறது.

## உச்சி வெயிலில் கிணத்தை எட்டிப் பார்க்கக் கூடாது:




உச்சி வெயில் காலங்களில் சூரிய ஒளி நேரடியாக கிணற்றில் விழும். இதனால் திடீரென வேதிவினை நடைபெற்று, கிணற்றுக்குள் விஷ வாயு உண்டாகலாம். அம்மாதியான சமயங்களில் கிணற்றில் எட்டிப் பார்ப்பதால் மயக்கம் ஏற்படவோ அல்லது தடுமாறி கிணற்றுக்குள் தவறி விழவோ வாய்ப்புண்டு. எனவேதான் நம் முன்னோர்கள் உச்சி வெயிலில் கிணத்தை எட்டிப் பார்க்க வேண்டாம் என்று கூறுகிறார்கள்.

இதைப் போன்றே நகத்தை கடித்தால் தரித்திரம் ஏற்படும் என்றும், வாசல் நிலைப்படியில் மஞ்சள் தடவ சிறந்த கிருமி நாசினியான இவை வெளியே உள்ள கிருமிகளை உள்ளே வராமல் தடுக்கும் என்றும் சொல்லி இருக்கிறார்கள். ஆன்மிக அறிவுரைக்குப் பின்னால் அறிவியலும் கலந்து இருக்கிறது என்பது மறக்க முடியாத உண்மை தானே!

# கடவுள் மீது நம்பிக்கை கொண்டிருப்பது ஒருவரை ஆன்மீகவாதியாக்குமா?

கடவுள் மீது நம்பிக்கை இல்லாதவர் ஆன்மீகத்தில் இருக்க முடியாது. ஆனால், நீங்கள் புரிந்துகொள்ள வேண்டியது என்னவென்றால், கடவுள் மீது நம்பிக்கை உள்ளவர்களும் ஆன்மீகவாதியாகிவிட முடியாது. ஏனென்றால், கடவுள் மீது நம்பிக்கை உடையவர்களுக்கும், இல்லாதவர்களுக்கும் பெரிதாக வித்தியாசம் இல்லை. இரண்டு பேருமே தங்களுக்கு தெரியாத ஒன்றைப் பற்றி நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். உங்களது பிரச்சனை என்னவென்றால், உங்களுக்கு தெரியாததை, "தெரியாது" என்று ஒப்புக்கொள்ளும் நேர்மை உங்களிடம் இல்லை. அதனால் ஆத்திகருக்கும், நாத்திகருக்கும் பெரிதாக வேறுபாடு ஒன்றும் இல்லை. இரண்டு பேருமே தாங்கள் வெவ்வேறானவர்கள் என்று வேஷம் போடுகிறார்கள். ஆன்மீகத் தேடலில் உள்ள ஒருவர், ஆத்திகனுமல்ல, நாத்திகனுமல்ல. தனக்கு ஒன்றும் தெரியாது என்ற புரிதலால், அவர் ஒரு தேடலில் இருக்கிறார்.



நீங்கள் ஏதோவொன்றின் மேல் நம்பிக்கை வைக்கும் அந்த க்ஷணத்தில், மற்ற அனைத்தையும் பார்க்கத் தவறி, குருடாகிவிடுகிறீர்கள். இப்போது இவ்வுலகில் உள்ள சண்டைகள் அனைத்தும், அவர்கள் காட்டிக்கொள்வதைப்போல நல்லதுக்கும் கெட்டதுக்கும் இடையில் நடப்பவை அல்ல. இது எப்போதுமே, ஒரு மனிதனின் நம்பிக்கைக்கும், இன்னொரு மனிதனின் நம்பிக்கைக்கும் இடையே உள்ள முரண்பாடாகும். நம்பிக்கைக்கான தேவை என்பது, ஆன்மீகத்தை விடவும், உளவியல் சார்ந்ததாக உள்ளது. உங்களுக்கு ஏதோவொன்றின் மேல் தொற்றிக்கொள்ள வேண்டும், பாதுகாப்பாக உணர வேண்டும், மற்றும் எல்லாமே தெரியும் என்ற உணர்வுடன் இருக்க வேண்டும்; இவை அனைத்தும் ஒரு முதிர்ச்சியில்லாத மனதின் வெளிப்பாடாகும். இந்த பிரபஞ்சத்தைப் பற்றி ஒன்றும் தெரியவில்லை என்றால்தான் என்ன? உண்மையில், உங்களுக்கு ஒன்றும் தெரியாது. இது அழகானதாகும்! நீங்கள், உங்களுக்குள் அழகாகவும், மகிழ்ச்சியாகவும் இருப்பது எப்படி என்று பாருங்கள். அது உங்கள் கைகளில்தான் உள்ளது.


இந்த பகுதியில் உங்கள் படைப்புக்கள் வரவேற்கிறோம்
whatsapp No
8122664699

## கூட்டணிக் கட்சிகளான தே.மு.தி.க - காங்கிரஸ் கட்சிகளுக்கும் இடம் ஒதுக்கீடு



**சென்னை, மார்ச் 06:** தமிழகத்தில் திமுக சார்பில் திருச்சி சிவா, அந்தியூர் செல்வராஜ், என். ஆர். இளங்கோ, கனிமொழி சோமு, அ.தி.மு.க சார்பில் தம்பிதுரை மற்றும் கடந்த முறை அ.தி.மு.க கோட்டாவில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜி.கே. வாசன் ஆகியோரின் பதவிக் காலம் ஏப்ரல் 2-ம் தேதியுடன் நிறைவடைகிறது. இந்த 6 இடங்களுக்கான தேர்தல் அறிவிப்பு கடந்த பிப்.18-ம் தேதி வெளியானது. அதன் அடிப்படையில் தி.மு.க-வின் 4 இடங்களில் இரண்டு இடங்களை தி.மு.க-வுக்கும் இரு இடங்கள் கூட்டணிக் கட்சிகளான தே.மு.தி.க - காங்கிரஸ் கட்சிகளுக்கும் ஒதுக்கப்பட்டது.

## அமைச்சர் அன்பில் மகேஸ் சகோதரி மகள் ஓவியா - மனோஜ் திருமணம்



தஞ்சாவூர் மஹாராஜா திருமண மஹாலில் அமைச்சர் அன்பில் மகேஸ் சகோதரி மகள் ஓவியா - மனோஜ் திருமணம் நடைபெற்றது. இதில் முதல்வர் ஸ்டாலின், துர்கா ஸ்டாலின், துணை முதல்வர் உதயநிதி, கிருத்திகா, சபரீசன், அமைச்சர்கள் கே.என்.நேரு, ரகுபதி, முன்னாள் அமைச்சர் வைத்திலிங்கம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## கோத்தர் பழங்குடியினர் பாரம்பரிய குலதெய்வ வழிபாடு



திருச்சிக்கடி கிராமத்தில் கோத்தர் பழங்குடியினர் அவர்களது பாரம்பரிய குலதெய்வ வழிபாடான ஐனோர் அம்னோர் (கம்பட்ராயர்) வழிபாட்டை சிறப்பாக மேற்கொண்டனர்.

## திமுக - காங்கிரஸ் இடையேயான தொகுதிப் பங்கீடு ஒப்பந்தம் கையெழுத்தானது



திமுக - காங்கிரஸ் இடையேயான தொகுதிப் பங்கீடு ஒப்பந்தம் கையெழுத்தான பிறகு, சமூக ஊடகங்களில் வைரலாகி வரும் தனது 'ஆக்ஷன்' குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் கலகலப்பாக விளக்கம் அளித்துள்ளார்.

## இந்தியாவுக்கு எரிவாயு வழங்க ஆஸ்திரேலியாவும் கனடாவும் முடிவு



மேற்கு ஆசியாவில் அதிகரித்து வரும் மோதல் காரணமாக இந்தியாவுக்கு எரிவாயு வழங்க ஆஸ்திரேலியாவும் கனடாவும் முன்வந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

## 160 சிறுமிகளின் ரத்தம் காய்வதற்குள் அடுத்த தாக்குதல்.. ஏவுகணை தாக்குதலில் ஈரானில் மேலும் 2 பள்ளிகள் தரைமட்டம்

**ஈரான், மார்ச் 06:** ஈரான் மீதான அமெரிக்க-இஸ்ரேல் வான்வழித் தாக்குதல்கள் தீவிரமடைந்துள்ள நிலையில், கல்வி நிறுவனங்கள் மற்றும் பொதுமக்கள் வசிக்கும் பகுதிகள் இலக்காகி வருவது உலகெங்கிலும் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஈரான் மீதான அமெரிக்க-இஸ்ரேல் வான்வழித் தாக்குதல்கள் தீவிரமடைந்துள்ள நிலையில் பள்ளிகள், பொதுமக்கள் வசிக்கும் குடியிருப்பு பகுதிகள் தொடர்ந்து இலக்கு வைக்கப்பட்டு வருகின்றன.

நேற்று மதியம், ஈரானின் தென்மேற்குப் பகுதியில் உள்ள பரண்ட் (Parand) நகரில் உள்ள இரண்டு பள்ளிகள் மீது அமெரிக்காவின் ஏவுகணைகள் விழுந்து வெடித்தன.

இந்த தாக்குதலில் பள்ளிக் கட்டடங்கள் முற்றிலும் இடிந்து தரைமட்டமான புகைப்படங்களை ஈரானின் 'பார்ஸ்' செய்தி நிறுவனம் வெளியிட்டுள்ளது.

பள்ளிகளுக்கு அருகிலுள்ள மக்கள் வசிக்கும் குடியிருப்புப் பகுதிகளிலும் பெரிய அளவில் சேதங்கள் ஏற்பட்டுள்ளன. இதில்



ஏற்பட்ட உயிரிழப்புகள் குறித்த துல்லியமான எண்ணிக்கை இன்னும் வெளியாகவில்லை

முன்னதாக, கடந்த சனிக்கிழமை காலை 10 மணியளவில் ஈரானின் மினாப் நகரில் உள்ள ஒரு பெண்கள் தொடக்கப் பள்ளியின் மீது அமெரிக்க-இஸ்ரேல் நடத்திய குண்டுவீச்சில் சுமார் 160 சிறுமிகள் கொல்லப்பட்டனர். இந்தச் சம்பவம் சர்வதேச அளவில் பரபரப்பை ஏற்படுத்தியது.

இதற்கிடையே, இஸ்ரேலில் உள்ள ரேடார் மையங்களை குறிவைத்து ஈரான் ராணுவம் டிரோன் தாக்குதல்களை நடத்தியுள்ளது.

மேலும், பாரசீக வளைகுடாவின் வடக்குப் பகுதியில் சென்று கொண்டிருந்த அமெரிக்க எண்ணெய் கப்பல் மீது ஈரான் ராணுவம் தாக்குதல் நடத்தியுள்ளது. இந்தத் தாக்குதலில் கப்பல் தீப்பற்றி எரிந்து கொண்டிருப்பதாக ஈரான் ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

நேற்று முன்தினம் இலங்கை அருகே இந்தியப் பெருங்கடலில் ஈரான் போர்க்கப்பல் அமெரிக்காவால் தாக்கப்பட்டு 87 பேர் கொல்லப்பட்ட நிலையில் அதற்கு பதிலடியாக இந்தத் தாக்குதல்களை ஈரான் நடத்தியுள்ளது.

## ஆக்கிரமிப்புகளை அகற்ற உத்தரவு



உயர்நீதிமன்ற மதுரை கிளை, கரூர் பாலசுப்பிரமணிய சுவாமி கோயில் சொத்துகளை மீட்க நடவடிக்கை எடுக்கவில்லை என அதிகாரிகளுக்கு கேள்வி எழுப்பியது. ஆக்கிரமிப்புகளை அகற்ற உத்தரவிட்டது.

## குழந்தைகளின் நோய்கள் நீங்கும் அதிசய சக்தி கொண்ட இடம்



பிட்டாபுரத்தி அம்மன் கோவில் எனப்படும் நெல்லை பகுதியின் புகழ்பெற்ற அம்மன் தலம் குழந்தைகளின் நோய்கள் நீங்கும் அதிசய சக்தி கொண்ட இடமாக பக்தர்களால் நம்பப்படுகிறது.

## வேட்பாளர்களை அறிவிக்க தயாராகும் தவெக



234 தொகுதிகளுக்கும் வேட்பாளர்களை அறிவிக்க தயாராகும் விஜயின் தமிழக வெற்றிக் கழகம், 2 வாரங்களில் பட்டியலை வெளியிடவுள்ளது.

## சிலைகள் திறப்பு



கரந்தைத் தமிழ்ச் சங்கம் தமிழவேள் உமாமகேசுவரனார் கரந்தைக் கலைக் கல்லூரியில் கலைஞர் கருணாநிதி மற்றும் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் முன்னாள் செயலர் செம்மொழி வேளிர் ராமநாதன் ஐயா ஆகியோரின் சிலைகளை, தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேற்று திறந்து வைத்தார்.

## அவினாசி பேருந்து நிலையத்தில் மது பிரியர்கள் தொல்லையால் பெண்கள் அவதி

**திருப்பூர், மார்ச் 06:** திருப்பூர் மாவட்டம் அவினாசி பேருந்து நிலையத்தில் மதுபிரியர்களின் தொல்லையால் பெண்கள் கடும் அவதிப்பட்டு வருகிறார்கள். அவினாசி பேருந்து நிலைய நடைபாதை மற்றும் இருக்கைகளில் ஒரு சில மதுபிரியர்கள், அளவுக்கு அதிகமாக மது அருந்தி விட்டு அரைகுறை ஆடையுடன் உளறிக்கொண்டுதூங்குகிறார்கள்.

இவர்களின் செயல்பாட்டால் பஸ்சிற்கு காத்திருக்கும் பெண்களை முகம் சுழிக்க செய்கிறது. இதேபோல் அவினாசி காவல் நிலையம் அருகே உள்ள பஸ் நிறுத்த பகுதியில் பயணிகளின் இருக்கை உள்ளது. இங்கு பயணிகள் இருப்பதை



விட மதுபிரியர்கள் தான் அதிக அளவில் படுத்து உறங்கி வருகிறார்கள்.

இதனால் பஸ்சிற்கு காத்திக்கும் பள்ளி, கல்லூரி மாணவிகள், பெண்கள் கடும் அவதிப்படுகிறார்கள். எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பேருந்து நிலையம், பஸ் நிறுத்தம் உள்ளிட்ட பகுதிகளில் பொதுமக்களுக்கு இடையூறாக உள்ள மதுப்பிரியர்களை அங்கிருந்த அகற்ற நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று பெண்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## அதிமுக கூட்டணியில் பாமகவுக்கு ஒரு இடம்



அதிமுக கூட்டணியில் பாமகவுக்கு ஒரு மாநிலங்களவை இடம் ஒதுக்கப்பட்டுள்ள நிலையில், அந்த இடத்திற்கு பாமக தலைவர் அன்புமணி, போட்டியிடுகிறார்.

## நீதிமன்றத்தில் ஆஜராக உத்தரவு



பாஜக மூத்த தலைவர் ஹெச்.ராஜாவுக்கு விதிக்கப்பட்ட நிபந்தனையை தளர்த்தி, அவரது வழக்கறிஞர் விசாரணை நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும் என சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.




## கல்பாத்தி சுரேஷ் இல்லத் திருமணவிழாவில் ஜோடியாக பங்கேற்ற விஜய் - த்ரிஷா!



**சென்னை, மார்ச் 06:** AGS குழுமத்தின் உரிமையாளர்களில் ஒருவரான கல்பாத்தி எஸ். சுரேஷின் மகன் திருமணம் இன்று சென்னையில் மிக விமரிசையாக நடைபெற்றது. இந்நிலையில் மாலை திருமண வரவேற்பு விழா நடைபெற்றது. இந்த வரவேற்பு நிகழ்ச்சியில் நடிகர் விஜய் மற்றும் நடிகை திரிஷா ஆகியோர் ஒன்றாக கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினர்.

ஒரே காரில் வந்த இருவரும், ஒரே நிறத்தில் ஆடைகள் அணிந்துவந்ததும் கவனம் ஈர்த்துவருகிறது. கடந்தவாரம் விஜய்யின் மனைவி சங்கீதா அவரிடமிருந்து விவாகரத்துக்கோரி செங்கல்பட்டு குடும்பநல நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தார். நடிகை ஒருவருடன் உடனான தகாத உறவே இதற்கு காரணம் எனவும் குறிப்பிட்டிருந்தார்.

இந்த விவாகரத்திற்கு நடிகை த்ரிஷாவுடனான தொடர்புதான் காரணம் என சமூக வலைதளங்களில் பல்வேறு வதந்திகள் பரவி வருகின்றன. எனினும், இது குறித்து விஜய் அல்லது த்ரிஷா தரப்பிலிருந்து எந்தவொரு அதிகாரப்பூர்வமான விளக்கமும் அளிக்கப்படவில்லை. இந்நிலையில் இருவரும் ஒன்றாக விழாவில் பங்கேற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

## ஒடுகத்தூர் அருகே காட்டு தீ பரவி ரூ. 12 லட்சம் மதிப்பிலான கோழி பண்ணை எரிந்து சாம்பலானது



**வேலூர், மார்ச் 06:** வேலூர் மாவட்டம், ஒடுகத்தூர் அடுத்த மராட்டிப்பாளையம் பகுதியை சேர்ந்தவர் ரேவதி (வயது 55), இவருக்கு அதே பகுதியில் விவசாய நிலம் உள்ளது. இந்த நிலத்தில் ஒரு பகுதியில் மாட்டு தீவனமும், அதன் அருகிலேயே 250 அடி நீளத்தில் தகரத்தால் ஆனா கோழி பண்ணை ஒன்றும் அமைத்துள்ளார்.

தற்போது இந்த பண்ணையில் கோழிகளை வளர்ப்பதற்காக முழு வேலைபாடுகளும் நடந்து வந்தது. கோழிகளை வளர்ப்பதற்காக ரூ.12 லட்சம் மதிப்பில் அனைத்து உபகரண பொருட்களும் வாங்கி வந்து பண்ணையில் பொருத்தப்பட்டு வந்தது. இந்த பண்ணை அருகிலேயே பரவமழை காப்புக்காடு உள்ளது. அந்த பகுதியில் மர்ம நபர் காட்டிற்கு தீ வைத்ததாக கூறப்படுகிறது.

அப்போது காடு பற்றி எரிந்தது. இந்த நிலையில் அங்கிருந்து தீப்பொறி பறந்து வந்து கோழிப் பண்ணை மீது விழுந்துள்ளது. இதில் தீ மளமளவென பண்ணை முழுவதும் பரவி அருகே உள்ள மாட்டு தீவன பயிர்களுக்கும் பரவியது. இதனை பார்த்த அங்கிருந்தவர்கள் உடனே தீயணைப்பு துறையினருக்கு தகவல் தெரிவித்தனர்.

தகவலறிந்த ஒடுகத்தூர் தீயணைப்பு நிலைய அலுவலர் (பொறுப்பு) பாஸ்கரன் தலைமையிலான வீரர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று சுமார் 2 மணி நேரம் போராடி தண்ணீரை பீய்ச்சி அடித்து தீயை கட்டுக்குள் கொண்டு வந்தனர். இருந்த போதிலும் கோழி பண்ணை முழுவதும் தீ பிடித்து எரிந்ததில் சுமார் ரூ.12 லட்சம் பொருட்கள் சாம்பலானது.

# சுற்றுலா: தஞ்சாவூர் சுற்றுலா.. மறக்காமல் சுற்றி பார்க்க வேண்டிய இடங்கள்.!

தமிழ்நாட்டின் நெற்களஞ்சியம் என்று அழைக்கப்படும் தஞ்சை மாவட்டம் தமிழ்நாட்டில் தவிர்க்க முடியாத மாவட்டமாகும். வருடம் முழுவதும் நாம் சோறு சாப்பிடுவதற்கு முக்கிய ஆதராமாக விளங்கும் டெல்டாவின் தலைநகர் என்று கூட அழைக்கலாம்.

இப்படி சிறப்புகளை அடிக்கி கொண்டே செல்லும் சிறப்புகளை வாய்ந்த மாவட்டத்தை உலக திரும்பி பார்க்க வைக்கும் அளவிற்கு கம்பிரமாய் நிற்கிறது தஞ்சை பெரிய கோவில். ஆண்டு தோறும் ஆயிரக்கணக்கானோர் வந்து, இதன் கட்டகலையை பார்த்து பிரமித்து போகும் அளவிற்கு இதன் சிறப்புகளும் உயர்ந்து நிற்கிறது. இப்படிப்பட்ட இந்த மாவட்டத்தில் சுற்றிப்பார்க்க கூடிய இடங்கள் குறித்து அறிந்து கொள்வோம்.



### பெரிய கோவில்

தஞ்சை பெருவுடையார் கோவில் அல்லது தஞ்சை பெரிய கோவில் என்று அழைக்கப்படும் சோழ நாட்டில் பரந்து விரிந்தோடும் காவிரி ஆற்றங்கரையில் அமைந்துள்ளது. இந்தியாவில் உள்ள மிகப்பெரிய கோவில்களில் இது ஒன்றாகும். தமிழர் கட்டிடக்கலைக்கு எடுத்துக் காட்டாக விளங்கும் இது, 10ம் நூற்றாண்டில் சோழ பேரரசர் முதலாம் இராசராச சோழன் கட்டியதாகும். நகரின் மையப்பகுதியில் உள்ளதால் இந்த கோவிலை பார்க்க தவறவிடக்கூடாது. ஆண்டுதோறும் அதிகளவில் சுற்றுலாப்பயணிகள் இங்கு வந்து செல்கின்றனர்.



### சிவகங்கை பூங்கா

1871 - 1872 இல் தஞ்சை நகராட்சியால் மக்கள் பூங்காவாக உருவாக்கப்பட்டது . இது 11 ஆம் நூற்றாண்டின் பிரகதீஸ்வரர் கோயிலின் கிழக்கே அமைந்துள்ளது மற்றும் இடைக்கால சோழ மன்னன் ராஜ ராஜ சோழனால் கட்டப்பட்டதாக நம்பப்படும் சிவகங்கை குளத்தை உள்ளடக்கியது.

### அரண்மனை

தஞ்சை நகரில் உள்ள இந்த அரண்மனை நாயகர்களால் கட்டப்பட்டது. இந்த அரண்மனை கி.பி. 1674 இல் இருந்து 1855 வரை தஞ்சாவூர் மராத்திய அரசின் கைவசம் இருந்தது. இதுவும் தற்போது சுற்றுலா தலமாக உள்ளது.

புன்னைநல்லூர் மாரியம்மன் கோவில்: சிறு கோவிலில் வீற்றிருத்த முத்துமாரியம்மனுக்கு சோழர் மன்னார்களால் கோவில் எழுப்பட்டது என்றும், பின்னர் மராட்டிய மன்னர்களால் மூலஸ்தான கோபுரம் மற்றும் ராஜகோபுரத்துடன் பிரம்மாண்ட கோவில் எழுப்பப்பட்டது. முத்துமாரியம்மன் சன்னதி அருகில், துர்க்கை அம்மனுக்குத் தனி சன்னதி உள்ளது. இரு அம்மன்களும், அருகருகே எழுந்தருளி, பக்தர்களுக்கு அருள்பாலிப்பது, இக்கோவிலின் தனிச்சிறப்பு. அம்பாள் சன்னதியின் வலப்புறம் பேச்சியம்மன் சன்னதி உள்ளது. கோயிலின் உள்ளே ஒரு குளமும், வெளியே ஒரு குளமும் உள்ளன. இது சுற்றுலா தலமாகவும் உள்ளது.

### பூண்டி மாத கோவில்

18ம் நூற்றாண்டில் வாழ்ந்த இத்தாலி நாட்டைச் சேர்ந்த கிறிஸ்துவ போதகரான வீரமாமுனிவரின் முயற்சியால் கட்டப்பட்டது. இதை கட்டப்பட்ட சமயத்தில் ராணி இமாகுலேட் மேரி தேவாலயம் என்று அழைக்கப்பட்டது. பின்னர் 1955 ஆம் ஆண்டு முதல் பூண்டி மாதா கோவில் என்று அழைக்கப்பட்டு வருகிறது. பூண்டி மாதா கோவில் வளாகத்தில் அருங்காட்சியம் அமைக்கப்பட்டுள்ளது. இதில் பக்தர்கள் வேண்டுதல் நிறைவேறியதால் அவர்கள் சாட்சியாக ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆவணங்களும் தங்க ஆபரணங்களும் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. இங்கும் ஆண்டு தோறும் ஏராளமான சுற்றுலாப்பயணிகள் வந்து செல்கின்றனர்.

### சுவாமி மலை

முருக பெருமானினி ஆறுபடை வீடுகளில் இது நான்காம் படை வீடாகும். கோயில் நகரம் என்று அழைக்கப்படும் கும்பகோணத்தில் இருந்து சுமார் 6கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. இக்கோயிலில் மீனாட்சி சுந்தரேசுவரர் எழுந்தருளியுள்ளதால் சுந்தரேசுவரசுவாமி கோயில் என்றும் இக்கோயிலை அழைப்பர். ஆன்மிக சுற்றுலா தலமாகவும் விளங்குவதால் ஆண்டுதோறும் அதிகளவில் சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கின்றனர்.

### கும்பகோணம்:

குடந்தை எனவும், கோவில் நகரம் என்று பெருமையுடன் அழைக்கப்படும் கும்பகோணம் தஞ்சையில் 44 கி.மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. காபி மற்றும் வெற்றிலைக்கு பிரசிப்பெற்ற இந்த பகுதியில் திரும்பிய இடமெல்லாம் கோவில் இருப்பது இதன் சிறப்பாகும். 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் மாகமகம் திருவிழா சிறப்பு வாய்ந்ததாகும்.

### சரஸ்வதி மஹால் நூலகம்

இந்த நூலகம் தஞ்சை அரண்மனை வளாகத்தில் அமைந்துள்ள பழமையான நூலகமாகும். ஆசியாவின் மிகப்பழமையான நூலகங்களில் ஒன்றாகும்.

இந்த பகுதிகளை தவிர அதிராம்பட்டினம் கடற்கரை, அலையாத்தி காடுகள், பட்டுக்கோட்டை, ஒரத்தநாடு உள்ளிட்ட பகுதிகளிலும் பார்ப்பதற்கு கண்ணை கவரும் வகையில் அமைந்திருக்கும்.

# வேலைவாய்ப்பு கார்னர்

## பத்திரிகைத் துறையில் பணியாற்ற விருப்பமா?



பொதுவாக, செய்தி சேகரிப்பாளர் பணிக்குத் தகுந்த அனுபவம் எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கேற்ப இத்துறையில் உங்களின் திறன்களை வளர்த்துக்கொண்டு வேலை தேடினால் தகுந்த பலன் கிடைக்கும். இந்தத் துறைசார் திறனை வளர்க்க, இணைய வழியில் கட்டணமில்லாமலும் கட்டணத்துடனும் வழங்கப்படும் சிறப்புப் படிப்புகளைப் படிக்கலாம். மிஷிகன் ஸ்டேட் யுனிவர்சிட்டி, பென்சில்வேனியா யுனிவர்சிட்டி இரண்டும் பிரபலமான அமெரிக்கப் பல்கலைக்கழகங்கள்.

கோர்செராவில் (Coursera) இந்த இரண்டு பல்கலைக்கழகங்கள் வழங்கும் இதழியல் படிப்புக்குக் கட்டணம் உண்டு. இது போல எட்எக்ஸ் (EdX) தளத்தில், எதிர்காலப் பத்திரிகைத் துறை (Future Journalism) என்கிற படிப்பை கேப் டவுன் பல்கலைக்கழகமும், பெர்க்லி பல்கலைக்கழகமும் வழங்குகின்றன. இவை தவிர ‘ஸ்வயம்’ தளத்தின் மூலம் கட்டணமில்லாமல் இணையவழியில் சில படிப்புகளைப் படிக்கலாம். இத்தளத்தில் 15 வாரப் படிப்பாக அச்சு - காட்சி இதழியல், 12 வாரப் படிப்பாக ரிப்போர்ட்டிங் அண்ட் ஆங்கரிங் படிப்புகள் வழங்கப்படுகின்றன. இதில் ஒளிப்பட இதழியல், தகவல் சேகரிப்பு, எடிட்டிங், இதழியல் தரம், எண்ணிலக்க யுகத்தில் இதழியல் (Digital era) ஆகிய பாடங்கள் கற்றுத் தரப்படும். இதைப் படித்து முடித்துவிட்டு உரிய சான்றிதழ் தேவை என்றால் கட்டணம் செலுத்திப் பெறலாம். இது அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ். இதை வைத்துப் பணி வாய்ப்பைத் தேடினால் உங்களின் இதழியல் ஆசை நிறைவேறக்கூடும்.

# துபாயில் இருந்து 2-வது விமானத்தில் 364 பேர் வருகை

**சென்னை, மார்ச் 6:**

சென்னை: துபாயில் இருந்து புறப்பட்ட 2-வது விமானத்தில் 364 பயணிகள் சென்னை வந்து சேர்ந்தனர். துபாயில் பொதுமக்களுக்கு எந்த பாதிப்பும் இல்லை என்று பயணிகள் தெரிவித்தனர்.

அமெரிக்கா, இஸ்ரேல் - ஈரான் இடையே போர் கடந்த 28-ம் தேதி தொடங்கியது. அன்று முதல் ஐக்கிய அரபு, வளைகுடா மற்றும் மத்திய கிழக்கு நாடுகள் இடையே விமான சேவைகள் முழுவதுமாக பாதிக்கப்பட்டுள்ளது.

இதனால், சென்னைக்கும் துபாய், பக்ரைன், அபுதாபி, குவைத், மஸ்கட் போன்ற நாடுகளில் இடையே விமான இயக்கம் துண்டிக்கப்பட்டது. கடந்த 2-ம் தேதி அதிகாலை எமிரேட்ஸ் ஏர்லைன்ஸ் விமானம் மட்டும் துபாயில் இருந்து 217 பயணிகளுடன் சென்னைக்கு வந்தது. அதன்பின்பு எந்த விமானமும், துபாய் உள்ளிட்ட நாடுகளில் இருந்து சென்னைக்கு வரவில்லை. இந்நிலையில், நேற்று காலை துபாயில் இருந்து 2-வது எமிரேட்ஸ் விமானம் 364 பயணிகளுடன் சென்னைக்கு வந்து சேர்ந்தது.

விமான நிலையத்தில் காத்திருந்த குடும்பத்தினர், உறவினர்கள் அவர்களை கண்ணீர் மல்க வரவேற்று அழைத்து சென்றனர். விமானத்தில் வந்த கடலூரை சேர்ந்த ஜனனி கூறுகையில், துபாயில் குண்டுவெடிப்பு சத்தம், ராணுவ போர் விமானங்கள் பறக்கும் சத்தம் ஓயாமல் கேட்டு கொண்டுதான் இருக்கிறது.

தாக்குதல்கள் அனைத்தும் அமெரிக்கா, இஸ்ரேல் நாடுகளை சேர்ந்த கட்டிடங்கள், அவர்களுடைய ராணுவ தளங்களை மட்டுமே குறிவைத்து நடத்தப்படுகின்றன. பொது மக்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படவில்லை என்றார்.

சேலத்தை சேர்ந்த சரவணகுமார், அமெரிக்காவில் இருந்து துபாய் வழியாக சொந்த ஊர் திரும்ப விமானத்தில் பயணம் செய்தோம். ஆனால், 4 நாட்களாக துபாயில் சிக்கிய பிறகு சென்னை வந்தோம். துபாயில் ராணுவ தாக்குதல்கள் நடந்து கொண்டு இருந்தாலும், பொது மக்களுக்கு எந்த பாதிப்பும் இல்லை என்றார்.

# பருவநிலை மாற்றத்தால் பரவும் ‘மெட்ராஸ் ஐ’

**சென்னை, மார்ச் 6:**

பருவநிலை மாற்றத்தால் பரவி வரும் ‘மெட்ராஸ் ஐ’ தொற்றால் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

குளிர்காலம் முடிந்து வெயில் சுட்டெரித்து வரும் பருவநிலை மாற்றத்தால், குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அதிகளவில் ‘மெட்ராஸ் ஐ’ எனப்படும் கண் நோயால் பாதிக்கப்பட்டு வருகின்றனர். சென்னை எழும்பூர் அரசு கண் மருத்துவமனை உட்பட தனியார் மருத்துவமனைகளுக்கு மெட்ராஸ் ஐ பாதிப்புடன் சிகிச்சைக்கு வருபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளன.

இது தொடர்பாக, அரசு கண் மருத்துவர்கள் கூறியதாவது: கண் விழியையும், இமையையும் இணைக்கும் ஐவ்வுப் படலத்தில் ஏற்படும் வைரஸ் தொற்று தான் ‘மெட்ராஸ் ஐ’ ஆகும். அந்த வகையான பாதிப்புகள் காற்று மூலமாகவும், மாசு வாயிலாகவும் பரவக்கூடும்.



மெட்ராஸ் ஐ பிரச்சினையால் பாதிக்கப்பட்டவர்கள் பயன்படுத்திய பொருள்களை உபயோகித்தாலும் மற்றவர்களுக்கு அந்நோய்த் தொற்று பரவும். கண் எரிச்சல், விழிப் பகுதி சிவந்து காணப்படுதல், நீர் சுரந்து கொண்டே இருத்தல், இமைப்பகுதி ஒட்டிக் கொள்ளுதல் ஆகியவை மெட்ராஸ் ஐ, பாதிப்பின் அறிகுறிகள் ஆகும். சமீப காலமாக இது போன்ற அறிகுறியுடன், மருத்துவமனைக்கு வருவோர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

மெட்ராஸ் ஐ எளிதில் குணப்படுத்தக்கூடியது. ஆரம்பத்திலேயே கண்டறிந்து சிகிச்சை பெற வேண்டும். மெட்ராஸ் ஐ வந்தால் தனி அறையில் இருக்க வேண்டும். தனியாக டவல், சோப்பு ஆகியவற்றை பயன்படுத்த வேண்டும்.

கண் வலிதான் என்று மருத்துவர் ஆலோசனை இல்லாமல் மருந்துகளை வாங்கி பயன்படுத்தக் கூடாது. சில நேரங்களில் கருவிழி பாதிப்பு கூட ஏற்படலாம். பொதுவாக ஒரு கண்ணில் மெட்ராஸ் ஐ பிரச்சினை ஏற்பட்டால், மற்றொரு கண்ணிலும் அந்த பாதிப்பு வருவதற்கு அதிக வாய்ப்புள்ளது.

எனவே மெட்ராஸ் ஐ பாதிப்பு ஏற்பட்டவர்கள், மிகவும் கவனத்துடன் இருக்க வேண்டும். அவர்கள் தாங்கள் பயன்படுத்திய பழைய கான்டாக்ட் லென்ஸ்களை அகற்றிவிட்டு மருத்துவரிடம் கலந்தாலோசித்த பிறகு புதிய கான்டாக்ட் லென்ஸ்களை அணிய வேண்டும். தங்களது தனிப்பட்ட பயன்பாட்டு பொருள்களை பிறர் பயன்படுத்த அனுமதிக்கக்கூடாது. இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

# புதிய ஓய்வூதிய திட்டத்துக்கு எதிரான வழக்கில் தமிழக அரசு பதிலளிக்க ஐகோர்ட் உத்தரவு

**சென்னை, மார்ச் 6:**

புதிய பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்தை அமல்படுத்த எதிர்ப்பு தெரிவித்தும், பழைய ஓய்வூதிய திட்டத்தை தொடர வேண்டும் என அரசு ஊழியர்கள் போராட்டங்களில் ஈடுபட்டு வந்த நிலையில், ஓய்வு பெறும் அரசு ஊழியர்களுக்கு கடைசிமாத ஊதியத்தில் 50 சதவீதத்தை ஓய்வூதியமாக வழங்கும் வகையில் புதிய உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதிய திட்டத்தை தமிழக அரசு அறிமுகம் செய்து, இது சம்பந்தமாக அரசாணையும் பிறப்பித்துள்ளது.

புதிய உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டத்தை எதிர்த்து விருப்ப ஓய்வுபெற்ற அரசு உதவிபெறும் பள்ளி ஆசிரியர் ரேணுகாதேவி என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருக்கிறார்.

அந்த மனுவில், ‘புதிய உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதிய திட்டம் 2026-ஆம் ஆண்டு ஜனவரி முதல் அமலுக்கு வரும் என அறிவித்துள்ளதால், 2025-ஆம் ஆண்டு டிசம்பர் 31-ஆம் தேதிக்கு முன் ஓய்வுபெற்றவர்கள் ஓய்வூதிய பலன்களை பெற முடியாமல் பாதிக்கப்பட்டுள்ளனர்’ எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், ‘பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்தின் கீழ் பங்களிப்பை வழங்கிய அரசு ஊழியர்களுக்கும் ஓய்வூதியம் பெற உரிமை உள்ளது. அதை மறுப்பது, நியாயமற்றது. அரசின் நிதிச்சுமையை குறைப்பதற்காகவே பங்களிப்பு ஓய்வூதிய திட்டம் அறிமுகம் செய்யப்பட்ட நிலையில், அரசு ஊழியர்கள் ஓய்வுபெறும் தேதியை கணக்கில் கொள்ளாமல், ஓய்வூதியம் வழங்க வேண்டும்’ என மனுவில் கூறப்பட்டுள்ளது. அத்துடன், ‘பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்தின் கீழ், 73 ஆயிரம் கோடி ரூபாய் எல்.ஐ.சி. நிறுவனத்தில் இருப்பதாக நிதி அமைச்சர் கூறியிருப்பதால், 2025 டிசம்பருக்கு முன் ஓய்வுபெற்ற அரசு ஊழியர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதில் எந்த சிக்கலும் இருக்காது’ எனவும் மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்தில் செலுத்திய தொகை வட்டியுடன் சேர்ந்துள்ளதால், பழைய ஓய்வூதிய திட்டத்தின் கீழ், மாதாந்திர ஓய்வூதியமாக 8,430 ரூபாயுடன், அகவிலைப்படியும் சேர்த்து, ஓய்வூதியம் வழங்கும்படி இடைக்கால உத்தரவு பிறப்பிக்க வேண்டும் எனவும் மனுவில் கோரப்பட்டுள்ளது.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி பி.டி.ஆஷா, மார்ச் 26-ஆம் தேதிக்குள் பதிலளிக்கும்படி தமிழக அரசுக்கு உத்தரவிட்டு, விசாரணையை தள்ளிவைத்துள்ளார்.

# தவெகவை காட்டி கூடுதல் தொகுதிகள் பெற்ற காங்கிரஸ்! செங்கோட்டையன்

**சென்னை, மார்ச் 6:**

தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தலுக்கான கூட்டணிப் பேச்சுவார்த்தையை தீவிரமாக நடத்திய காங்கிரஸ், நேற்றிரவு திமுகவுடன் தொகுதிப் பங்கீடு ஒப்பந்தத்தை இறுதி செய்தது. காங்கிரஸுடன் கூட்டணி அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டு வந்த தவெக ஏமாற்றம் அடைந்தது.

இதுகுறித்து செய்தியாளர்களுடன் செங்கோட்டையன் பேசியதாவது: “தமிழக வெற்றிக் கழகத்தால் காங்கிரஸுக்கு பலன் கிடைத்துள்ளது. தவெகவுடன் சென்றுவிடுவோம் எனக் கூறி கூடுதல் சீட்டுகளை பெற்றுள்ளார்கள். ஒவ்வொரு கட்சியும் எங்களை காட்டி கூடுதல் சீட் பெறும் நிலைமை உருவாகியுள்ளது. ஆட்சியில் பங்கு என்று தவெக அறிவித்ததால்தான் மற்ற கூட்டணியிலும் பங்கு கேட்க தொடங்கியிருக்கிறார்கள். ஜெயக்குமார் தவெகவுக்கு வர வாய்ப்புள்ளது. அவருக்கு அதிமுகவில் சீட் கிடைக்கப் போவதில்லை. அவரது மகனுக்கு வேண்டுமானால் சீட் கிடைக்கலாம். தனித்து நின்று முதல்வராகவே விஜய் இருக்கிறார். 18 வயது முதல் 45 வயது வரை இருக்கின்ற அனைவரின் மனநிலையையும் புரிந்துகொண்டு விமர்சிக்க வேண்டும்.” எனத் தெரிவித்தார்.

# திமுக - காங்கிரஸ் தேர்தல் உடன்பாடு மகிழ்ச்சியளிக்கிறது: ப.சிதம்பரம்

**சென்னை, மார்ச் 6:**

திமுக – காங்கிரஸ் இடையே பேச்சுவார்த்தை முடிந்து தேர்தல் உடன்பாடு ஏற்பட்டது மகிழ்ச்சியளிக்கிறது என்று முன்னாள் மத்திய நிதியமைச்சர் ப.சிதம்பரம் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் சட்டப்பேரவைக்கான பொதுத் தேர்தல் விரைவில் நடைபெற உள்ளது. தேர்தல் நெருங்கியதை அடுத்து அனைத்துக் கட்சிகளுமே தேர்தல் பணிகளைத் தொடங்கிவிட்டன. இந்த தேர்தலில் திமுக தலைமையிலான மதச்சார்பற்ற கூட்டணியே மீண்டும் வெற்றி பெறும் என அனைத்து கருத்துக் கணிப்பு முடிவுகளும் வெளியாகி வருகிறது. மேலும், இதை வலுசேர்க்கும் வகையில், தேமுதிகவும் கூட்டணியில் இணைந்துள்ளது.

அதோடு கூட்டணி தொகுதி பங்கீடு குறித்து பேச்சுவார்த்தை நடத்த அண்மையில் திமுக பொருளாளரும், மக்களவை குழுத் தலைவருமான டி.ஆர்.பாலு தலைமையில் குழு அமைக்கப்பட்டது. இந்த குழுவினர் கூட்டணி கட்சிகளுடன் தொடர்ந்து பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், சென்னை அண்ணா அறிவாலயத்தில் திமுக தலைவரும், முதல்வருமான மு.க.ஸ்டாலின், திமுக எம்.பிக்கள் கனிமொழி, டி.ஆர்.பாலு, தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் கு.செல்வப்பெருந்தகை, தமிழக காங்கிரஸ் மேலிடப் பொறுப்பாளர் கிரிஷ் சோடங்கர் ஆகியோர் சட்டப்பேரவைத் தேர்தல் மற்றும் மாநிலங்களவைத் தேர்தலுக்கான தொகுதிப் பங்கீடு குறித்து இறுதிப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர்.

இதையடுத்து, முதல்வர் ஸ்டாலின், செல்வப்பெருந்தகை ஆகியோர் உடன்படிக்கையில் கையொப்பமிட்டனர். இதன்படி, காங்கிரஸுக்கு 28 பேரவைத் தொகுதிகளும், ஒரு மாநிலங்களவை உறுப்பினர் பதவியும் ஒதுக்கப்பட்டுள்ளது.


தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com

இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.

"welcome Tamilnadu” என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்

94452 65389

# வளைகுடாவில் போரால் ஏற்றுமதி தடைபடும் அபாயம் - கோவை, திருப்பூர் தொழில் துறையினர் கூறுவது என்ன?

**கோவை, மார்ச் 6:**

ஈரான் மீதான அமெரிக்க, இஸ்ரேல் தாக்குதலால் உலக நாடுகளின் வணிகச் சங்கிலி அறுபட்டு பெரும் பாதிப்பை சந்திக்க தொடங்கியுள்ளது. இதன் காரணமாக வான் எல்லைகள் மூடப்பட்டு, துபாய், இந்தியா உட்பட உலகின் பல்வேறு நாடுகளும் வான்வழி போக்குவரத்து பாதிப்பை சந்தித்துள்ளன. கோவை விமான நிலையத்திலும் கடந்த 4 நாட்களாக ஷார்ஜா, அபுதாபி இடையே விமான போக்குவரத்து தடைபட்டிருப்பதால், தொழில்துறை பாதிப்பை சந்திக்க தொடங்கி உள்ளது.

இது தொடர்பாக தொழில் துறையினர் கூறியதாவது: கோவையில் இருந்து வளைகுடா நாடுகளுக்கு தங்க நகைகள், ஜவுளி மற்றும் ஜவுளி இயந்திரங்கள், மோட்டார் பம்ப் மற்றும் வேளாண் பொருட்களும், திருப்பூரில் இருந்து பின்னலாடைகளும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.



கோவையில் இருந்து சிங்கப்பூர், அபுதாபி, ஷார்ஜா ஆகிய வெளிநாடுகளுக்கும், இந்தியாவின் பல்வேறு மாநிலங்களுக்கும் நாள்தோறும் 30-க்கும் மேற்பட்ட விமானங்கள் இயக்கப்படுகின்றன.

போர் காரணமாக விமான சேவை மட்டுமின்றி, கடல்வழி போக்குவரத்தும் பாதிக்கப்பட தொடங்கியிருப்பதுதான் கோவை, திருப்பூர் தொழில்துறையினரின் பெரும் கவலையாக உள்ளது.

இந்தியாவிலிருந்து அனுப்பப்படும் சரக்குகள், தூத்துக்குடி துறைமுகம் வழியாக துபாய் சென்று அங்கிருந்து பல்வேறு இடங்களுக்கு அனுப்பப்பட்டு வருகிறது. வான்வழி சரக்கு அனுப்புவது கூடுதல் செலவு என்பதால், அதில் ஏற்றுமதி மிகவும் அரிதாகவே நடைபெறுகிறது. இத்தகைய சூழலில் கடல்வழிப் பாதை, ஏற்றுமதியில் முக்கிய பங்கை வகிக்கிறது. போர் காரணமாக கடல்வழிப் பாதையில் உள்ள துபாய், கத்தார் மற்றும் தோஹாவுக்கு கப்பல்கள் செல்வதில்லை. ஹார்முஸ் ஜலசந்தி மற்றும் பாப்-எல்-மண்டேப் ஆகிய பகுதிகளில் பதற்றம் அதிகரித்துள்ளதால், சூயஸ் கால்வாய் வழியாக அமெரிக்கா மற்றும் ஐரோப்பா செல்வதற்கு பதிலாக ஆப்பிரிக்காவைச் சுற்றிச் செல்லும் நீண்ட பாதையை கப்பல்கள் தேர்ந்தெடுக்கின்றன.

இதனால் பயண நேரம் 15 முதல் 20 நாட்கள் அதிகரிக்கிறது. மார்ச் 2-ம் தேதி நிலவரப்படி, சில முன்னணி கப்பல் நிறுவனங்கள், சேவைகளைத் தற்காலிகமாக நிறுத்தியுள்ளன. சில நிறுவனங்கள் போர்க்கால கூடுதல் கட்டணம் வசூலிக்கத் தொடங்கியுள்ளன.

ஒரு கண்டெய்னருக்கு 1500 டாலர் தொடங்கி 3500 டாலர் வரை, அதாவது இந்திய மதிப்பில் ரூ. 1 லட்சத்து 30 ஆயிரம் முதல் ரூ.3 லட்சம் வரை கூடுதல் செலவாகிறது. இது 20 முதல் 50 சதவீத போக்குவரத்து செலவை ஏற்படுத்தும்.

மேலும், துபாய் போன்ற முக்கிய விமான நிலையங்கள், துறைமுகத்தில் செயல்பாடுகள் குறைந்துவிட்டதால், ஏற்கெனவே அனுப்பப்பட்ட ஏராளமான சரக்குகளும் தேக்கமடைந்துள்ளன. இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

# க்ரைம் கார்னர்

## சீரியல் நடிகை உடை மாற்றுவதை வீடியோ எடுத்த ராணுவ வீரர் கைது

**சென்னை, மார்ச் 6:**

விருகம்பாக்கத்தில் 31 வயதுடைய டிவி சீரியல் நடிகை ஒருவர் வசித்து வருகிறார்.

இவரது வீட்டின் அருகே பஞ்சாப் மாநிலத்தை சேர்ந்த முன்னாள் ராணுவ வீரர் ஒருவர் வசிக்கிறார். மேலும், இவர் தனியார் வங்கி தலைவரின் பாதுகாவலராகவும் உள்ளார். இந்நிலையில் நடிகை வீட்டுக்கு வரும்போதும் போகும்போதும், முன்னாள் ராணுவ வீரர் தவறான கண்ணோட்டத்தில் பார்ப்பதாக குற்றச்சாட்டு எழுந்தது. இந்நிலையில், நேற்று முன்தினம் இரவு படப்பிடிப்பு முடிந்து, நடிகை வீட்டில் உடைமாற்றிக் கொண்டிருந்துள்ளார். அப்போது, அந்த முன்னாள் ராணுவ வீரர் ஜன்னல் கதவை திறந்து எட்டிப்பார்த்துள்ளார். மேலும், வீடியோ எடுக்க முயன்றதாகவும் கூறப்படுகிறது. இந்த விவகாரம் குறித்து விருகம்பாக்கம் காவல் நிலையத்தில் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி போலீஸார் சம்பந்தப்பட்ட முன்னாள் ராணுவ வீரரை கைது செய்து விசாரித்து வருகின்றனர்.

## காமேனி படுகொலை பற்றி அவதூறு பதிவு: வாலிபர் மீது கொடூர தாக்குதல்

**பெங்களூரு, மார்ச் 6:**

இஸ்ரேல், அமெரிக்கா ஆகிய நாடுகள் ஈரான் மீது போர் தொடுத்துள்ளன. இதில் ஈரான் நாட்டின் உச்ச தலைவரான அயதுல்லா அலி கமேனி படுகொலை செய்யப்பட்டார். இதற்கு பதிலடியாக அமெரிக்கா, இஸ்ரேல் மீது ஈரான் ஏவுகணை, டிரோன் தாக்குதலை நடத்தியது. இந்த நிலையில், காமேனி படுகொலை குறித்து கர்நாடக மாநிலம் கொப்பல் மாவட்டத்தில் கங்காவதி டவுனை சேர்ந்த பழ வியாபாரியான சந்திரசேகர் என்ற வாலிபர் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் அவதூறாக கருத்து பதிவிட்டதாக கூறப்படுகிறது. இதை அறிந்த அப்பகுதியை சேர்ந்த மற்றொரு தரப்பை சேர்ந்த 6 பேர் கொண்ட கும்பல் சந்திரசேகரிடம் தகராறு செய்து அவரை கொடூரமாக தாக்கினர். மேலும் கொலை மிரட்டலும் விடுத்துள்ளனர். இதையடுத்து பாதிக்கப்பட்ட சந்திரசேகர் அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். மேலும் இச்சம்பவம் குறித்து கங்காவதி டவுன் போலீசில் புகார் அளித்தார். அதன்பேரில் போலீசார் 6 பேர் மீது வழக்குப்பதிவு செய்து தீவிரமாக தேடி வருகிறார்கள்.

## கடன் தொல்லை: குளிர்பானத்தில் விஷம் கலந்து மகளை கொன்று வியாபாரி தற்கொலை

**திருவனந்தபுரம், மார்ச் 6:**

கேரள மாநிலம் ஆலப்புழா மாவட்டம் செங்கன்னூர் அருகே உள்ள மன்னார் பகுதியை சேர்ந்தவர் மனோஜ் (வயது 45), வியாபாரி. இவருடைய மனைவி ஜோதி. இந்த தம்பதிக்கு சிவநந்தனா (12), சிவ கங்கா (7), சிவகீர்த்தி (1½) ஆகிய 3 மகள்கள் இருந்தனர். இந்த நிலையில், சம்பவத்தன்று மாலையில் மனோஜ் தனது காரில் மகள்கள் 2 பேரையும் பள்ளியில் இருந்து வழக்கம் போல் வீட்டுக்கு அழைத்து வந்தார். அப்போது வழியில் ஒரு இடத்தில் காரை நிறுத்தி விட்டு 2 மகள்களுக்கும் விஷம் கலந்த குளிர்பானத்தை கொடுத்து குடிக்க கொடுத்தார். பின்னர் அவரும் குடித்துள்ளார். இதில் குளிர்பானம் கசப்பாக இருப்பதாக கூறி இளைய மகள் சிவகங்கா சிறிது குடித்துவிட்டு துப்பி விட்டார்.

இதற்கிடையே சிறிது நேரத்தில் மனோஜும், சிவனந்தனாவும் காரிலேயே மயங்கினர். இதை பார்த்து அதிர்ச்சி அடைந்த சிவகங்கா உடனே காரை விட்டு கீழே இறங்கி அந்த வழியாக வந்தவர்களிடம் நடந்த சம்பவத்தை கூறினாள். சில நிமிடங்களில் சிவகங்காவும் மயங்கி விழுந்தாள். உடனே அப்பகுதியை சேர்ந்தவர்கள் 3 பேரையும் மீட்டு சிகிச்சைக்காக தனியார் மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு சிகிச்சை பலன் இன்றி மனோஜ், மூத்த மகள் சிவநந்தனா ஆகிய 2 பேரும் அடுத்தடுத்து பரிதாபமாக இறந்தனர். மேலும் இதுகுறித்து மன்னார் போலீசார் வழக்குப்பதிவு செய்து தீவிர விசாரணை நடத்தி வருகிறார்கள்.

# விளையாட்டு செய்திகள்

## மூஞ்சூறுவின் காதில் வேண்டுதல் வைத்த அபிஷேக் சர்மா

**மும்பை, மார்ச் 6:**

10-வது டி20 உலகக் கோப்பை கிரிக்கெட் தொடரில் இறுதிகட்ட ஆட்டங்கள் இந்தியாவில் நடந்து வருகிறது. இதில் மும்பை வான்கடே ஸ்டேடியத்தில் இன்று (வியாழக்கிழமை) அரங்கேறும் 2-வது அரையிறுதியில் நடப்பு சாம்பியனான இந்திய அணி, முன்னாள் சாம்பியன் இங்கிலாந்தை எதிர்கொள்கிறது. ஏறக்குறைய சரிசம பலத்துடன் இரு அணிகளும் மல்லுகட்டுவதால் யாருடைய கை ஓங்கும் என்பதை கணிப்பது கடினம். யார் வெற்றி பெற்றாலும் 4-வது முறையாக இறுதிப்போட்டிக்குள் நுழைவார்கள். ஆனால் உள்ளூர் ரசிகர்களின் ஆதரவுடன் இந்திய அணி வீரர்கள் விளையாடுவதால் இந்திய அணிக்கு கூடுதல் பலம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

போட்டி ரசிகர்கள் மத்தியில் பெரும் எதிர்பர்ப்பை ஏற்படுத்திய நிலையில், இந்திய அணியினர் நேற்று மும்பையில் உள்ள பிரசித்தி பெற்ற சித்திவிநாயகர் கோவிலில் சாமி தரிசனம் செய்தனர். அப்போது இளம் வீரர் அபிஷேக் சர்மா, விநாயகரின் வாகனமான மூஞ்சுறுவின் காதில் வேண்டுதலை வைத்தார். இந்த புகைப்படம் சமூக வலைத்தளங்களில் வைரல் ஆகி வருகிறது. இந்திய அணி வெற்றி பெற வேண்டும் அபிஷேக் சர்மா வேண்டுதல் வைத்ததாக நெட்டிசன்கள் பதிவிட்டு வருகிறார்கள்.

## புதிய சாதனை படைத்த பின் ஆலன்

**கொல்கத்தா, மார்ச் 6:**

10-வது டி20 உலகக் கோப்பை கிரிக்கெட் தொடரில் இறுதிகட்ட ஆட்டங்கள் இந்தியாவில் நடந்து வருகிறது. இதில் கொல்கத்தாவில் நடைபெற்ற அரையிறுதியில் தென் ஆப்பிரிக்காவை வீழ்த்தி நியூசிலாந்து அணி இறுதிப்போட்டிக்கு முன்னேறியது. இந்த போட்டியில் நியூசிலந்து அணியில் பின் ஆலன் 33 பந்துகளில் சதம் அடித்து வெற்றிக்கு உதவினார். இந்த நிலையில், டி20 உலகக் கோப்பை கிரிக்கெட் வரலாற்றில் அதிவேக சதம் அடித்து வீரர் என்ற சாதனையை படைத்தார்பின் ஆலன் . இதற்கு முன்பு 2016-ம் ஆண்டு உலகக் கோப்பையில் வெஸ்ட்இண்டீசின் கிறிஸ் கெய்ல் இங்கிலாந்துக்கு எதிராக 47 பந்தில் சதம் அடித்ததே அதிவேக சதமாக இருந்தது. உலகக் கோப்பை நாக்-அவுட் சுற்று ஆட்டத்தில் சதம் அடித்த முதல் வீரர் என்ற பெருமைக்கும் பின் ஆலென் சொந்தக்காரர் ஆனார்.நடப்பு உலகக் கோப்பையில் பின் ஆலென் மொத்தம் 20 சிக்சர் நொறுக்கி யுள்ளார். உலகக் கோப்பை தொடர் ஒன்றில் அதிக சிக்சர் அடித்தவராகவும் திகழ்கிறார்.

## டி20 உலகக் கோப்பை: பார்வையாளர்களின் எண்ணிக்கையில் சாதனை

**மும்பை, மார்ச் 6:**

10-வது டி20 உலகக் கோப்பை கிரிக்கெட் தொடரில் இறுதிகட்ட ஆட்டங்கள் இந்தியாவில் நடந்து வருகிறது. இதில் கொல்கத்தாவில்நடைபெற்ற அரையிறுதியில் தென் ஆப்பிரிக்காவை வீழ்த்தி நியூசிலாந்து அணி இறுதிப்போட்டிக்கு முன்னேறியது . இந்த நிலையில் டி20 உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியை இந்தியாவில் டி.வி. சேனல் மற்றும் செயலியின் மூலம் பார்த்தவர்களின் எண்ணிக்கை 50 கோடியை தாண்டி விட்டதாக (நாக்-அவுட் சுற்றுக்கு முன்பாக) சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி.) தலைவர் ஜெய் ஷா கூறியுள்ளார்.

# கன்னியாகுமரியில் அடகுக்கடை நடத்தி 300 சவரன் நகை மோசடி: வாலிபர் கைது

**குமரி, மார்ச் 6:**

கன்னியாகுமரி மாவட்டம், முள்ளங்கினாவிளை பகுதியில் நகை அடகுக்கடை நடத்தி வந்த சைலஸ் (வயது 52), அவரது மனைவி நிர்மலா(45) மற்றும் மகன் அகில் எஸ்.விகானோ(27) ஆகியோர் மீது பாதிக்கப்பட்டவர்கள் மாவட்ட எஸ்.பி. அலுவலகத்தில் புகார் அளித்தனர்.

அடகு வைத்த நகைகளைத் திருப்பச் சென்றபோது கடை பூட்டப்பட்டு இருந்ததாகவும், கடை நடத்தியவர்கள் தலைமறைவானதாகவும் அந்த புகாரில் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து கன்னியாகுமரி மாவட்ட எஸ்.பி. ஸ்டாலின் உத்தரவின்பேரில் தனிப்படை அமைக்கப்பட்டுத் தீவிர தேடுதல் வேட்டை நடத்தப்பட்டது. கோவையில் உள்ள நண்பர் வீட்டில் பதுங்கியிருந்த அகில் எஸ்.விகானோவை தனிப்படை போலீஸார் கைது செய்தனர்.

முதற்கட்ட விசாரணையில் 75 பேரிடம் 300 சவரன் நகைகள் மோசடி செய்யப்பட்டது உறுதியானது. கைது செய்யப்பட்ட அகில் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டார். தலைமறைவாக உள்ள அவரது பெற்றோரைக் போலீசார் தேடி வருகின்றனர்.

# கோவில் நில விவரங்களை இணையதளத்தில் வெளியிட ஐகோர்ட்டு மதுரை கிளை உத்தரவு

**மதுரை, மார்ச் 6:**

கரூரில் கோவில் நில ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை எடுக்கவில்லை என்ற கோர்ட்டு அவமதிப்பு வழக்கு தொடர்பாக ஐகோர்ட்டு மதுரைக்கிளையில் விசாரணை நடைபெற்றது.

இந்நிலையில் கோவில் நிலங்களின் வாடகை விவரங்களை இணையதளத்தில் வெளியிட வேண்டும் என்று ஐகோர்ட்டு மதுரைக்கிளை உத்தரவு பிறப்பித்துள்ளது.

இதன்படி கோவில்களுக்கு சொந்தமான இடங்களில் எத்தனை குடியிருப்புகள், கடைகள், நிலங்கள் உள்ளன என்பதையும், வாடகைக்கு இருப்பவர்களின் விவரங்கள் மற்றும் குத்தகை காலம், எவ்வளவு தொகை



வசூலிக்கப்பட்டது போன்ற அனைத்து விவரங்களையும் இணையதளத்தில் வெளியிட வேண்டும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் கரூர் மாவட்டம் வெண்ணெய்மலையில் கோவில் நில ஆக்கிரமிப்புகளை அகற்றுவதில் முன்னேற்றம் இல்லை என்றும், கரூர் கலெக்டர், மாவட்ட எஸ்.பி., கோவில் இணை ஆணையரை நீதிமன்றத்திற்கு வரவழைத்து ஆணையிட்ட பிறகும் நடவடிக்கை இல்லை என்றும் நீதிபதி தெரிவித்தார்.

இதனைத்தொடர்ந்து இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் நடவடிக்கை எடுக்க ஐகோர்ட்டு மதுரைக்கிளை நீதிபதி புகழேந்தி உத்தரவிட்டார்.

# கன்னியாகுமரியில் 17 வயது சிறுமிக்கு பாலியல் வன்கொடுமை: லேப் டெக்னீசியனுக்கு 20 ஆண்டுகள் சிறை

**புதுடெல்லி, மார்ச் 6:**

கன்னியாகுமரி மாவட்டம் ஆற்றூர், புதுவீட்டுவிளை பகுதியைச் சேர்ந்தவர் ரதீசன்(எ) ஸ்டாலின் (வயது 36). ஆய்வகத் தொழில்நுட்பவியலாளராக (LAB TECHNICIAN) பணியாற்றி வந்த இவர், கடந்த 2018-ம் ஆண்டு 17 வயது சிறுமி ஒருவரை ஆசை வார்த்தை கூறி பாலியல் வன்கொடுமை செய்ததாகக் கூறப்படுகிறது.

இதுகுறித்து சிறுமியின் உறவினர்கள் மார்த்தாண்டம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்தனர். இந்தப் புகாரின் அடிப்படையில் காவல்துறையினர் ரதீசன் மீது வழக்குப்பதிவு செய்து அவரைக் கைது செய்தனர்.





பின்னர் அவர் நாகர்கோவிலில் உள்ள போக்சோ சிறப்பு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். இந்த வழக்கு நீதிபதி சுந்தரய்யா முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. இந்த வழக்கில் அரசு தரப்பில் வழக்கறிஞர் முத்துக்குமாரி ஆஜராகி வாதிட்டார்.

வழக்கின் அனைத்துத் தரப்பு விசாரணைகளும் முடிவடைந்த நிலையில், நீதிபதி நேற்று தீர்ப்பளித்தார். அதில் குற்றம் சாட்டப்பட்ட ரதீசனுக்கு 20 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டது. சிறை தண்டனையுடன் ரூ.5 ஆயிரம் அபராதமும் விதித்து நீதிபதி உத்தரவிட்டார்.

# நிதீஷ் குமார் இல்லம் முன்பு தொண்டர்கள் ஆர்ப்பாட்டம்! மாநிலங்களவை எம்.பி. ஆவதற்கு எதிர்ப்பு!!

**புதுடெல்லி, மார்ச் 6:**

பிகார் முதல்வர் நிதீஷ் குமார் மாநிலங்களவை உறுப்பினராவதற்கு எதிர்ப்பு தெரிவித்து அவரது வீட்டின் முன்பு கட்சித் தொண்டர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

பிகார் முதல்வர் நிதீஷ் குமார் நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினராவதற்கு வேட்புமனு தாக்கல் செய்ய உள்ளார் என தகவல்கள் தெரிவிக்கின்றன. அவருக்குப் பதிலாக பாஜக சார்பில் ஒருவர் முதல்வராக வாய்ப்புள்ளதாகவும் கூறப்படுகிறது.

பிகார் முதல்வர் நிதீஷ் குமாருடன் ஐக்கிய ஜனதா தளத்தின் தேசிய செயல் தலைவர் சஞ்சய் ஜா, அமைச்சர் விஜய்குமார் சௌதரி ஆகியோர் நேற்று (மார்ச் 4) மேற்கொண்ட ஆலோசனையில் இந்த முடிவு எடுக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. இந்நிலையில் இதற்கு எதிர்ப்பு தெரிவித்து நிதீஷ் குமாரின் ஐக்கிய ஜனதா தளக் கட்சியினர் பாட்னாவில் உள்ள அவரது இல்லத்தின்



முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். நிதீஷ் குமார் பிகார் முதல்வராகவே தொடர வேண்டும், வேறு யாரும் எங்களுக்கு முதல்வராக வேண்டாம் என்று கோஷங்களுடன் அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். ராஜீவ் ரஞ்சன் இதுபற்றி கூறுகையில், "நாங்கள் பிகாரின் முதல்வராக நிதிஷ் குமாரை மட்டுமே விரும்புகிறோம். நிதிஷ் குமார் மாநிலங்களவைக்குச் செல்வதை நாங்கள் எதிர்க்கிறோம். பதிலாக அவரது மகன் நிஷாந்த் குமார் மாநிலங்களவைக்குச் செல்ல வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம்" என்று தெரிவித்தார். எனினும் அது நிதீஷ் குமாரின் முடிவு என்றும் கட்சியினர் அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கக் கூடாது என்றும் அந்த கட்சியைச் சேர்ந்த சஞ்சய் சிங் கூறினார். ஐக்கிய ஜனதா தளம் மற்றும் பாஜகவைச் சேர்ந்த பலரும் இதுபற்றி கருத்து தெரிவித்து வருகின்றனர்.

# வணிகச் செய்திகள்

## மத்திய கிழக்கில் போர்ப் பதற்றம்: இந்திய முதலீட்டாளர்களுக்கு ரூ.10 லட்சம் கோடி இழப்பு

**மும்பை, மார்ச் 6:**

மும்பை மற்றும் தேசியப் பங்குச் சந்தைகளில் நேற்று நடைபெற்ற வர்த்தகம் கடும் சரிவைச் சந்தித்தது. மத்திய கிழக்கு நாடுகளில் போர்ப் பதற்றம், சர்வதேச சந்தைகளில் நிலவி வரும் நிச்சயமற்ற சூழல் காரணமாக, மும்பை பங்குச் சந்தை குறியீட்டு எண்ணான சென்செக்ஸ் நேற்றைய வர்த்தகத்தின் போது 1,700 புள்ளிகளுக்கு மேல் சரிந்தது. இதன் காரணமாக நேற்று ஒரே நாளில் முதலீட்டாளர்களுக்கு சுமார் ரூ.10 லட்சம் கோடி அளவுக்கு இழப்பு ஏற்பட்டது. ஈரான் - இஸ்ரேல் இடையே போர் தீவிரமடைந்து வருவதும், அதில் அமெரிக்காவின் தலையீடும் சர்வதேச முதலீட்டாளர்களைப் பெரும் கவலைக்கு உள்ளாக்கியுள்ளது. போர் சூழல் காரணமாக ஹார்முஸ் ஜலசந்தி வழியாக கப்பல் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதால், கச்சா எண்ணெய் விலை கணிசமாக உயர்ந்துள்ளது. இது இந்தியாவின் பணவீக்கத்தை அதிகரிக்கும் என்ற அச்சம் எழுந்துள்ளது.

மேலும், டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு இதுவரை இல்லாத அளவாக 92-க்கும் கீழ் சரிந்ததும் சந்தையில் பலவீனமான சூழலை உருவாக்கியுள்ளது.

சென்செக்ஸ் 1,122.66 புள்ளிகள் சரிந்து 79,116.19-ல் நிலைபெற்றது. நிப்டி 385.20 புள்ளிகள் குறைந்து 24,480.50 புள்ளிகளில் நிலை கொண்டது. ஏழு மாதங்களுக்குப் பிறகு வர்த்தகத்தின் போது நிப்டி 24,400 என்ற நிலைக்குக் கீழ் சென்றது இதுவே முதல்முறையாகும்.

# தமிழக பெருமாள் கோயிலில் இருந்து கடத்தல் - திருமங்கை ஆழ்வார் சிலை இந்தியாவிடம் ஒப்படைப்பு

புதுடெல்லி, மார்ச் 6:

லண்டனில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் திருமங்கை ஆழ்வார சிலை இந்தியத் தரப்பிடம் முறைப்படி ஒப்படைக்கப்பட்டதாக, இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது. இது, உண்மையிலேயே தங்களுக்கு குறிப்பிடத்தக்க தருணம் என்று ஆஷ்மோலியன் அருங்காட்சியகம் பெருமிதம் தெரிவித்துள்ளது. 17-ஆம் நூற்றாண்டைச் சோந்த இந்த அருங்காட்சியகம், பிரிட்டனின் முதல் பொது அருங்காட்சியகம் என்ற சிறப்புக்குரியதாகும்.



மேலும் 4 தொல் பொருள்கள்....: இதேபோல், இந்திய வருவாய் புலனாய்வு இயக்குநரகம் (டிஆா்ஐ) பகிா்ந்த தகவல்களின் அடிப்படையில், அமெரிக்காவின் உள்நாட்டு பாதுகாப்பு புலனாய்வு அமைப்பு, லண்டன் காவல் துறையின் கலை மற்றும் தொல்பொருள்கள் மீட்பு பிரிவின் உதவியுடன் லண்டனில் மீட்கப்பட்ட நடனமாடும் குழந்தை சம்பந்தா் சிலை, நடனமாடும் விநாயகா் சிலை, குடையுடன் அமா்ந்த விநாயகா் சிலை, சிலைப் பீடம் என மேலும் 4 தொல் பொருள்களும் இந்தியத் தரப்பிடம் ஒப்படைக்கப்பட்டன. இவை அனைத்தும் இந்தியாவுக்கு அனுப்பப்பட தயாா் நிலையில் உள்ளன. இது தொடா்பாக பிரிட்டனுக்கான இந்தியத் தூதா் விக்ரம் துரைசாமி கூறுகையில், 'நான் அறிந்தவரை, ஆஷ்மோலியன் அருங்காட்சியகம் தங்கள் வசமிருந்த ஒரு பழங்கால சிலையை இந்தியாவிடம் திருப்பி ஒப்படைப்பது இதுவே முதல்முறையாகும். இது உண்மையிலேயே பாராட்டுக்குரியது. வரலாற்று தொல்பொருள்கள் மற்றும் கலாசார முக்கியத்துவம் வாய்ந்த பொருள்களின் எல்லை தாண்டிய கடத்தலை எதிா்கொள்வதில் இருதரப்பு மற்றும் பன்முக அமைப்புகளின் ஒத்துழைப்பின் வலிமைக்கு இந்த நிகழ்வு ஓா் உதாரணம்' என்றாா்.

## மத்திய கிழக்கில் கடல்சார் பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடக்கம்: மத்திய அமைச்சர் தகவல்

புதுடெல்லி, மார்ச் 6:

ஈரான், அமெரிக்கா-இஸ்ரேல் போர் காரணமாக பாரசீக வளைகுடாவை அரபிக் கடலுடன் இணைக்கும் ஹோர்முஸ் நீரிணை வழி சமீபத்தில் மூடப்பட்டது. இதன் தாக்கம் குறித்து தில்லியில் அமைச்சர் சர்வானந்த சோனோவால் தலைமையில் ஆய்வுக் கூட்டம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இதைத் தொடர்ந்து அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியுள்ளதாவது: மத்திய கிழக்கில் நிலவி வரும் சூழலை உன்னிப்பாக கண்காணித்து வருகிறோம். இந்திய மாலுமிகளின் நலன் மற்றும் கடல்சார் உடமைகளின் பாதுகாப்பை உறுதி செய்ய முன்னெச்சரிக்கை, கண்காணிப்பு மற்றும் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை செயல்படுத்தியுள்ளோம். இந்தியக் கப்பல்கள் மற்றும் பணியாளர்களை பாதுகாக்க தேவையான உதவிகளை வழங்க அரசு தயாராக உ ள்ளது. இந்தியாவின் கடல்சார் நலன்களைப் பாதுகாக்க உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அமைப்பு களுடன் ஒருங்கிணைந்த நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறோம் என தெரிவித்தார்.

## கேரளத்தில் மலையாளம் மட்டுமே அலுவல்பூர்வ மொழி: மாநில அரசின் மசோதாவுக்கு ஆளுநர் ஒப்புதல்

திருவனந்தபுரம், மார்ச் 6:

'மலையாள மொழி மசோதா-2025' எனும் இந்த மசோதாவின்படி, கேரளத்தில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் அனைத்து பள்ளிகளிலும் 10-ஆம் வகுப்பு வரை முதல் மொழிப் பாடமாக மலையாளம் கற்பது கட்டாயமாகும். அதேநேரம், மலையாளம் தாய்மொழி அல்லாத மாணவர்களுக்கு விதிவிலக்குகள் அளிக்கப்பட்டுள்ளன. கடந்த ஆண்டு அக்டோபரில் சட்டப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட இந்த மசோதாவுக்கு கர்நாடக அரசுத் தரப்பில் கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

கேரளத்தில் கர்நாடக எல்லையையொட்டி வாழும் கன்னட மாணவர்கள் மீது மலையாளம் திணிக்கப்படு வதாக குற்றஞ்சாட்டப்பட்டது. அதேநேரம், 'கேரளத்தில் வாழும் தமிழ், கன்னடம் போன்ற மொழியியல் சிறுபான்மையினரின் மொழி சார் உரிமைகளைப் பாதுகாக்கும் தெளிவான-சந்தேகத்துக்கு இடமில்லாத பிரிவுகள் மசோதாவில் அடங்கியுள்ளன. மொழிச் சுதந்திரத்தை முழுமையாக பாதுகாக்கும் அம்சங்கள் உள்ளன. குறிப்பிட்ட பகுதிகளில் வசிக்கும் தமிழ், கன்னட மக்கள், கேரள அரசுடனான தங்களின் தொடர்புகளை அவர்களின் தாய்மொழியிலேயே தொடர்ந்து மேற்கொள்ள முடியும்.


மலையாளம் தாய்மொழி அல்லாத மாணவர்கள், தேசிய கல்வி பாடத்திட்டத்தின்கீழ் பள்ளிகளில் கிடைக்கப் பெறும் எந்தவொரு மொழியையும் தேர்வு செய்யும் சுதந்திரம் உள்ளது' என்று முதல்வர் பினராயி விஜயன் விளக்கமளித்திருந்தார்.

மேற்கண்ட மசோதாவின்படி, பிற மாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளில் இருந்து கேரளத்தில் கல்வி பயிலும் மலையாளம் தாய்மொழி அல்லாத மாணவர்கள், 9, 10-ஆம் வகுப்பு மற்றும் மேனிலைக் கல்வி அளவில் கட்டாய மலையாள மொழித் தேர்வை எழுதுவதில் இருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

## சனிப்பெயர்ச்சி: திருநள்ளாறு கோவிலில் பக்தர்களிடம் கெடுபிடி காட்டக்கூடாது - காவலர்களுக்கு டி.ஐ.ஜி. அறிவுரை

புதுடெல்லி, மார்ச் 6:

புதுச்சேரியில்உள்ளகாரைக்கால் பகுதியில் அமைந்திருக்கும் திருநள்ளாறில் உலகப் புகழ் பெற்ற ஸ்ரீதர்ப்பாரண்யேஸ்வரர் சுவாமி தேவஸ்தானத்தில் தனிசன்னதியில் ஸ்ரீசனீஸ்வர பகவான் அருள்பாலித்து வருகிறார். இங்கு இரண்டரை ஆண்டுகளுக்கு ஒருமுறை வாக்கிய பஞ்சாங்க முறைப்படி சனிப்பெயர்ச்சி விழா வெகுவிமரிசையாக நடைபெறும். இதில் பங்கேற்க நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் லட்சக்கணக்கான பக்தர்கள் கோவிலுக்கு வருகை தருவார்கள்.





அந்த வகையில் (வெள்ளிக்கிழமை) சனிப்பெயர்ச்சி விழா நடைபெறுகிறது. அன்றைய தினம், காலை 8.24 மணிக்கு சனி பகவான் கும்ப ராசியில் இருந்து மீன ராசிக்கு இடம் பெயர்கிறார். சனிப்பெயர்ச்சி நேரத்தை கணக்கிட்டு, சனீஸ்வர பகவானுக்கு சிறப்பு அபிஷேகம், அலங்காரம், அர்ச்சனை, தீபாராதனைகள் நடைபெற உள்ளன. இதில் லட்சக்கணக்கான பக்தர்கள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில், வரும் 6-ந்தேதி சனிப்பெயர்ச்சி விழாவை முன்னிட்டு திருநள்ளாறு கோவிலில் பாதுகாப்பு பணியில் சுமார் ஆயிரம் போலீசார் ஈடுபட உள்ளனர். தேர்தல் பாதுகாப்பு பணிக்கு வந்த 200 மத்திய பாதுகாப்பு படை வீரர்களும் பாதுகாப்பு பணியில் ஈடுபடுவார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அங்கு செய்யப்பட்டுள்ள பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து புதுச்சேரி டி.ஐ.ஜி. சத்திய சுந்தரம் இன்று ஆய்வு செய்தார்.

இதைத் தொடர்ந்து, பாதுகாப்பு பணியில் ஈடுபடும் போலீசார் பக்தர்களிடம் கெடுபிடி காட்டக் கூடாது என்று காவலர்களிடம் டி.ஐ.ஜி. சத்திய சுந்தரம் அறிவுறுத்தினார்.

## ஜம்மு: எல்லையில் பயங்கரவாதிகளின் ஊடுருவல் முயற்சி முறியடிப்பு

புதுடெல்லி, மார்ச் 6:

ஜம்மு-காஷ்மீரின் ரஜௌரி மாவட்டத்தில் உள்ள எல்லைக் கட்டுப்பாடு கோடு (எல்ஓசி) வழியாக இந்தியாவுக்குள் புதன்கிழமை ஊடுருவ முயன்ற பயங்கரவாதிகள் மேற்கொண்ட முயற்சியை ராணுவ வீரர்கள் முறியடித்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

அதிகாலை 4.15 மணியளவில் சந்தேகத்துக்குரிய நபர்கள் சிலர் தூர்கண்டி எல்லைப் பகுதியில் நுழைய முயன்றது கண்டறியப்பட்டது. இதையடுத்து, அவர்கள் மீது ராணுவ வீரர்கள் துப்பாக்கிச்சூடு நடத்தினர்.



இதுதொடர்பாக ஜம்முவைத் தலைமையிடமாக கொண்டு செயல்படும் ராணுவப் பிரிவான வெள்ளை வீரர்கள் படை 'எக்ஸ்' சமூகஊடகத்தில் வெளியிட்ட பதிவில், 'உளவு அமைப்புகளின் தகவல்கள் மற்றும் தொடர் கண்காணிப்பின் மூலம் எல்லைக் கட்டுப்பாடு பகுதியையொட்டிய பிம்பர் காலி பகுதியில் பயங்கரவாதிகளின் நடமாட்டம் கண்டறியப்பட்டது.

விழிப்புணர்வுடன் இருந்த வெள்ளை வீரர்கள் படையால் பயங்கரவாதிகளின் ஊடுறுவல் முயற்சியை தோல்வியில் முடிந்தது.

களத்தில் ஒருங்கிணைந்து செயல்பட்டதன் மூலம் எதிரிகளின் திட்டம் முறியடிக்கப்பட்டது' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ராணுவ வீரர்கள் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் பயங்கரவாதிகள் உயிரிழந்தனரா என்பது குறித்து ராணுவ அதிகாரிகள் தெரிவிக்கவில்லை.

ரஜௌரியின் சுந்தர்பானி செக்டாரில் கடந்த பிப்.19 மற்றும் 20 தேதிகளில் எல்லை தாண்ட முயன்ற பயங்கரவாதிகளின் முயற்சி தோல்வியில் முடிந்தது. அவர்கள் கொண்டு வந்த ஆயுதங்களை ராணுவத்தினர் கைப்பற்றினர்.

# ரஷியாவிடம் இருந்து இந்தியா மீண்டும் அதிக கச்சா எண்ணெய் வாங்க வாய்ப்பு

புதுடெல்லி, மார்ச் 6:

மேற்காசியா பதற்றம் காரணமாக, ரஷியாவிடம் இருந்து இந்தியா மீண்டும் அதிக கச்சா எண்ணெய் வாங்க வாய்ப்பு இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

கடந்த 2024-25-ஆம் ஆண்டு கால கட்டத்தில் ரஷியாவிடம் இருந்து இந்தியா நாளொன்றுக்கு 15 லட்சம் பேரல் முதல் 20 லட்சம் பேரல் வரை கச்சா எண்ணெய்யை இறக்குமதி செய்தது. ஆனால், உக்ரைன் போர் விவகாரத்தில் ரஷியாவை பணிய வைக்கும் முயற்சியில் அந்நாட்டின் கச்சா எண்ணெய் விற்பனைக்கு எதிராக அமெரிக்கா நடவடிக்கை மேற்கொண்டது.



இதன் ஒருபகுதியாக, ரஷியாவிடம் இருந்து அதிக கச்சா எண்ணெய் இறக்குமதி செய்த இந்தியாவுக்கு நெருக்கடி அளிக்கும் வகையில், இந்தியாவில் இருந்து தங்கள் நாட்டுக்கு இறக்குமதி ஆகும் பொருள்கள் மீது அமெரிக்கா கூடுதல் வரி விதித்தது.

இதையடுத்து ரஷியாவிடம் இருந்து கச்சா எண்ணெய் இறக்குமதியை இந்தியா குறைத்தது. இதனால் அமெரிக்கா தனது கூடுதல் வரி விதிப்பை திரும்ப பெற்றது.

இந்நிலையில், இஸ்ரேல், அமெரிக்காவுடனான போரால் மேற்காசியாவில் இருந்து கச்சா எண்ணெய் கொண்டு செல்ல பயன்படுத்தப்படும் ஹார்முஸ் ஜலசந்தி கடல் வழித்தடத்தை ஈரான் மூடிவிட்டது.

இதனால் சவூதி அரேபியா, ஈராக், கத்தார் உள்ளிட்ட நாடுகளில் இருந்து கச்சா எண்ணெய், கப்பல் மூலம் இந்தியாவுக்கு வருவது பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் உள்நாட்டில் பெட்ரோல், டீசல் தட்டுப்பாடு ஏற்படாமல் இருக்கும் வகையிலும், விலை ஏற்றம் ஏற்படாமல் தவிர்க்கும் நோக்கிலும் ரஷியாவிடம் இருந்து மீண்டும் 15 லட்சம் பேரல் முதல் 20 லட்சம் பேரல் வரை கச்சா எண்ணெய்யை இந்தியா வாங்க வாய்ப்பு இருப்பதாக சந்தை நிபுணர் மேக்ஸிம் மால்கம் தெரிவித்துள்ளார்.

ரஷிய துணைப் பிரதமர் அலெக்ஸாண்டர் நோவக்கும் இந்தியாவிடம் இருந்து அதிக கச்சா எண்ணெய் கேட்டு கோரிக்கை வந்திருப்பதாக தெரிவித்துள்ளார்.

## இயற்கை எரிவாயு உற்பத்தியை நிறுத்தியது கத்தார்: இந்திய விநியோகம் பாதிக்க வாய்ப்பு

புதுடெல்லி, மார்ச் 6:

திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயு (எல்என்ஜி) உற்பத்தியை கத்தார் நிறுத்தியுள்ளது. இதனால், இந்தியாவுக்கான எரிவாயு விநியோகம் பாதிக்கும் சூழல் உருவாகியுள்ளது.

கத்தாருடன் இந்தியா நீண்ட காலத்துக்கான இயற்கை எரிவாயு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது. இந்தியாவின் எரிவாயு தேவையை நிறைவு செய்வதில் கத்தார் முக்கியப் பங்கு வகிக்கிறது. இந்நிலையில், ஈரான் நடத்திய வான்வழித் தாக்குதலில் கத்தாரில் உள்ள எரிவாயு உற்பத்தி ஆலை பாதிக்கப்பட்டது. இதையடுத்து, அங்கு உற்பத்தி நிறுத்தப்பட்டுள்ளது. இதனால், இந்தியாவுக்கான எரிவாயு விநியோகம் பாதிக்கும் சூழல் எழுந்துள்ளது. இதனால் தொழிலக பயன்பாடு மற்றும் நகர்ப்புறங்களில் வீட்டு உபயோகத்துக்கு குழாய் மூலம் எரிவாயு விநியோக நிறுவனங்கள் பாதிக்கப்படும் என்று தெரிகிறது.

தொழில் நிறுவனங்களில் எல்என்ஜி-க்கு பதிலாக சற்று விலை அதிகமான சிஎன்ஜி எரிவாயுவைப் பயன்படுத்தி நிலைமையைச் சமாளிக்க வாய்ப்பு உள்ளது. இந்தியாவின் மிகப்பெரிய எல்என்ஜி இறக்குமதியாளரான பெட்ரோநெட் எல்என்ஜி நிறுவனம், கத்தாருக்கு சரக்கு கப்பல்களை அனுப்பிவைக்க முடியாத நிலையில் உள்ளது. ஹோர்முஸ் நீரிணை மூடப்பட்டுள்ளதே இதற்கு முக்கியக் காரணமாகும். இது தவிர கத்தாரும் இந்தியாவுக்கு விநியோகம் செய்ய பயன்படுத்திய எரிவாயு மையத்தில் ஈரான் தாக்குதல் காரணமாக உற்பத்தியை நிறுத்திவைத்துள்ளது. இது தொடர்பாக இரு தரப்புமே முறைப்படி தகவல்களைப் பரிமாறிக் கொண்டன. கத்தார் ஆண்டுதோறும் இந்தியாவுக்கு 27 மில்லியன் டன் எல்என்ஜி ஏற்றுமதி செய்து வருகிறது. இது இந்தியாவின் மொத்த எல்என்ஜி இறக்குமதியில் 40 சதவீதமாகும். வீட்டு உபயோகத்துக்காக குழாய் மூலம் என்எல்ஜி விநியோகிக்கும் தனியார் நிறுவனங்கள் தங்களுக்கு எழுந்துள்ள விநியோகப் பிரச்னை தொடர்பாக அரசின் எரிவாயு நிறுவனமான கெயில் நிறுவனத்துக்கு கடிதம் எழுதியுள்ளன.

## மாநிலங்களவைத் தேர்தலில் சரத் பவாருக்கு காங்கிரஸ் ஆதரவு!

புதுடெல்லி, மார்ச் 6:

மாநிலங்களவைத் தேர்தலில் தேசியவாத காங்கிரஸ் கட்சியின் தலைவர் சரத் பவாருக்கு காங்கிரஸ் கட்சி ஆதரவை தெரிவித்துள்ளது. மகாராஷ்டிர மாநிலத்தில் உள்ள 7 மாநிலங்களவை இடங்களில் ஒரு இடத்தை தக்கவைக்கும் நோக்கத்தில் எதிர்க்கட்சிகள் செயல்பட்டு வருகின்றன. இதனால் மகா விகாஷ் அகாடி கூட்டணியிலுள்ள சரத் பவாருக்கு காங்கிரஸ் ஆதரவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் பொதுச்செயலாளர் ரமேஷ் சென்னிதாலா, நடப்பு மாநிலங்களவை உறுப்பினராக உள்ள சரத் பவாருக்கு காங்கிரஸ் தலைமை தனது ஆதரவை தெரிவித்துள்ளதாகக் கூறினார். மாநிலங்களவை உறுப்பினர் தேர்தலுக்கு நாளையுடன் (மார்ச் 5) மனுத்தாக்கல் நிறைவுபெறவுள்ள நிலையில், இன்று சரத் பவாருக்கு காங்கிரஸ் கட்சி ஆதரவு தெரிவித்துள்ளது. மகாராஷ்டிர சட்டப்பேரவையில் 288 இடங்களில் 286 உறுப்பினர்கள் மட்டுமே உள்ளர். 2 இடங்கள் காலியாக உள்ளன. எனவே, மாநிலங்களவை உறுப்பினரை தேர்வு செய்ய 36 எம்.எல்.ஏ.க்களின் ஆதரவு தேவை. 7 மாநிலங்களவை உறுப்பினர் பதவி ஏப்ரல் மாதத்தில் காலியாகவுள்ளதால், அதில் ஒரு இடத்தை எதிர்க்கட்சிகள் இணைந்து தேர்வு செய்கின்றன.

எதிர்க்கட்சியில் சிவசேனைக்கு 20 உறுப்பினர்களும், காங்கிரஸுக்கு 16 உறுப்பினர்களும், தேசியவாத காங்கிரஸ் (சரத் பவார் அணி) 10 உறுப்பினர்களும் உள்ளனர்.

## ஸ்ரீநகர் மத்திய சிறை கண்காணிப்பாளராக முதன்முறையாக பெண் அதிகாரி நியமனம்



ஸ்ரீநகர், மார்ச் 6:

ஜம்மு காஷ்மீரில் உள்ள வெவ்வேறு சிறைகளுக்கு 4 அதிகாரிகள் கண்காணிப்பாளர்களாக நியமிக்கப்பட்டனர். இவர்களில் ஸ்ரீநகர் மத்திய சிறைக்கான பொறுப்பு 2012ம் ஆண்டு பேட்ச் அதிகாரி சபா ஷாலுக்கு வழங்கப்பட்டது. சபா ஷால் இந்த நியமனத்துக்கு முன், ஜம்மு காஷ்மீர் சிறைகள் துறை தலைமை இயக்குநர் அலுவலகத்தில் பணியாளர் அதிகாரியாக பணியாற்றினார். ஜம்மு காஷ்மீர் சிறைகள் துறையில் மக்கள் தொடர்பு அதிகாரியாகவும் அவர் பணியாற்றியுள்ளார். ஸ்ரீநகரில் வசதியான மக்கள் வசிக்கும் பிர் பாக் பகுதியில் வசிக்கும் சபா ஷால், சமூகப் பணியில் முதுகலைப் பட்டம் பெற்றுள்ளார். கடந்த 2012ல் காஷ்மீர் அரசுப் பணிகள் தேர்வாணைய தேர்வில் தேர்ச்சி பெற்றார்.

இவரை அறிந்த அதிகாரிகள் கூறுகையில், "சபா ஷால் தனது பணியில் நன்கு தேர்ச்சி பெற்றவர். நிறைந்த அனுபவம் கொண்டவர். இருப்பினும் இது அவருக்கு ஒரு சவாலான பணியாகவே இருக்கும். என்றாலும் சிறைத் துறையை அவர் நன்கு அறிந்தவர் என்பதால் திறம்பட பணியாற்றுவார் என நம்புகிறோம்" என்றனர்.

ஜம்மு காஷ்மீரின் பழமையான சிறைகளில் ஸ்ரீநகர் சிறையும் ஒன்றாகும். அரசியல் கைதிகள் உட்பட 900-க்கும் மேற்பட்டோர் இங்கு அடைக்கப்பட்டுள்ளனர். காவல் துறை மட்டுமின்றி மத்திய தொழிலக பாதுகாப்பு படையும் இதற்கு பாதுகாப்பு அளிக்கிறது. கடந்த காலங்களில் வெளி நாட்டு தீவிரவாதிகள், பிரிவினைவாத தலைவர்கள் பலர் இந்த சிறையில் இருந்தனர். பிறகு இவர்களில் பெரும் பாலானோர் கோட் பல்வால், ஜம்மு உள்ளிட்ட நகரங்களில் உள்ள சிறைகளுக்கு மாற்றப்பட்டனர்.

# ஈரான் மீதான தாக்குதல் தொடர்ந்தால் அமெரிக்காவுக்கு ரூ.19 லட்சம் கோடி செலவு

**தெஹ்ரான், மார்ச் 6:**

ஈரானுக்கு எதிரான போரில் யுஎஸ்எஸ் ஜெரால்ட் ஆர். போர்ட் உட்பட உலகின் மிகப்பெரிய 2 விமானம் தாங்கிக் கப்பல்களை அமெரிக்கா பயன்படுத்துகிறது. இந்தக் கப்பல்களை இயக்க ஒவ்வொரு கப்பலுக்கும் ஒரு நாளைக்கு தலா ரூ.58 கோடி செலவாகும்.

அது மட்டுமல்லாமல், ராணுவ வீரர்களைக் குவிப்பதற்கும் அவர்களின் தேவைகளுக்கும் இதுவரை சுமார் ரூ.5,500 கோடி செலவிடப்பட்டுள்ளது தெரியவந்துள்ளது. முதல் நாளில் மட்டும் சுமார் ரூ.6,900 கோடி செலவிட்டுள்ளது தெரியவந்துள்ளது. ஈரான் மீதான போர் 2 மாதங்கள் நீடித்தால் ரூ.3.67 லட்சம் கோடி முதல் ரூ.10.57 லட்சம் கோடி வரை செலவாகும் என்று நிபுணர்கள் கணக்கிட்டுள்ளனர். அதற்கு மேலும், போர் நீடித்தால், ரூ.18.87 லட்சம் கோடி செலவாகலாம் என கணிக்கப்பட்டுள்ளது.

இது தவிர, இஸ்ரேலுக்கு வழங்கப்படும் நிதி உதவியையும் கருத்தில் கொண்டால், இந்த செலவு அமெரிக்க நாட்டுக்கு மேலும் அதிகரிக்கும் என்று தெரிகிறது. அதுமட்டுமின்றி மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள அமெரிக்க படைத்தளங்கள் பல, ஈரானின் ஏவுகணை தாக்குதல்களால் பாதிக்கப்பட்டுள்ளன.

# ஈரான் போர் விமானத்தை வீழ்த்திய இஸ்ரேலின் எப்-35



**தெஹ்ரான், மார்ச் 6:**

இஸ்ரேலின் எப்-35 ரக போர் விமானம் முதல் முறையாக ஈரானின் யாக்-130 ரக போர் விமானத்தை நடுவானில் சுட்டு வீழ்த்தியுள்ளது. ஈரான் தலைநகர் டெஹ்ரானில் உள்ள ராணுவ முகாம்கள் மீது தாக்குதல் நடத்த இஸ்ரேல் விமானப்படையின் எப்-35 ரக போர் விமானங்கள் நேற்று சென்றன.

ஈரானின் பல இலக்குகள் மீது எப்-35 விமானங்கள் குண்டு வீசியபோது, ஈரான் விமானப் படையின் யாக்-130 ரக போர் விமானம் ஒன்று நடுவானில் இடைமறித்து தாக்க முயன்றது. அந்த விமானத்தை இஸ்ரேலின் எப்-35 போர் விமானம் சுட்டு வீழ்த்தியது.

கடந்த 40 ஆண்டுகளில் இஸ்ரேல் விமானப்படையின் எப்-35 போர் விமானம், எதிரி நாட்டு விமானத்தை நடுவானில் இடைமறித்து தாக்கியது இதுவே முதல் முறை ஆகும். சுட்டு வீழ்த்தப்பட்ட ஈரானின் யாக்-130 ரக விமானம் ரஷ்ய தயாரிப்பு விமானம் ஆகும்.

# பிரிட்டன் கல்வி விசா: ஆப்கானிஸ்தான் உள்பட 4 நாடுகளுக்குத் தடை

**லண்டன், மார்ச் 6:**

ஆப்கானிஸ்தான், மியான்மர், கேமரூன், சூடான் நாடுகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு கல்வி விசா தடைசெய்யப்படுவதாக பிரிட்டன் அரசு புதன்கிழமை அறிவித்தது.

பிரிட்டனில் நிரந்தர அகதிகளாக அடைக்கலம் பெற அந்த 4 நாடுகளின் மாணவர்கள் கல்வி விசாவைப் பயன்படுத்துவதாக அந்நாட்டு அரசு குற்றஞ்சாட்டியுள்ளது.

விசா தடைக்கு ஏதுவாக குடியேற்ற விதிகளில் திருத்தம் மேற்கொள்வதற்கான மசோதாவை உள்துறை அமைச்சர் ஷாபனா மஹ்மூத் நாடாளுமன்றத்தில் வியாழக்கிழமை (மார்ச் 5) தாக்கல் செய்கிறார்.

இதுகுறித்து அவர் கூறுகையில், ‘போர் மற்றும் கொடுமைகளை எதிர்கொண்டு நாட்டைவிட்டு வெளியேறும் மக்களுக்கு பிரிட்டன் எப்போதும் அடைக்கலம் அளிக்கும். இருப்பினும், எங்களுடைய விசா நடைமுறை தவறாகப் பயன்படுத்தக் கூடாது. இதைத் தடுக்கும் விதமாக முன்னெப்போதும் இல்லாத வகையில் ஆப்கானிஸ்தான், மியான்மர், கேமரூன், சூடான் நாட்டினருக்கு விசா மறுக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது’ என்றார்.

உள்துறைஅமைச்சகம்வெளியிட்டபுள்ளிவிவரங்களின்படி, கடந்த 2021 முதல் 2025 வரையில் இந்த நாடுகளிலிருந்து அடைக்கலம் கோரி விண்ணப்பித்த மாணவர்களின் எண்ணிக்கை 470 சதவீதத்துக்கும் மேலாக அதிகரித்துள்ளது. ஆப்கானிஸ்தான் மக்கள் திறன்மிக்க பணியாளர்களுக்கான விசா பெறவும் பிரிட்டன் தடைவிதித்துள்ளது.

# சீன நாடாளுமன்றக் கூட்டத்தொடர் தொடக்கம்




**பெய்ஜிங், மார்ச் 6:**

அமெரிக்கா-ஈரான் போர் உள்ளிட்ட சர்வதேச பதற்றங்கள் மற்றும் சீன ராணுவத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் அதிரடிப் பணிநீக்கங்களுக்கு மத்தியில், அந்நாட்டின் நாடாளுமன்றக் கூட்டத்தொடர் புதன்கிழமை தொடங்கியது.

சீன அதிபர் ஷி ஜின்பிங் தலைமையில் அடுத்த 2 வாரங்களுக்கு நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தொடரில், மந்தகதியில் உள்ள சீனப் பொருளாதாரத்தை மீண்டும் பலப்படுத்துசெயற்கை நுண்ணறிவு (ஏ.ஐ.) உள்ளிட்ட புதிய உற்பத்தி சக்திகளை மேம்படுத்துவது குறித்து முக்கிய முடிவுகள் எடுக்கப்பட உள்ளன.

கூட்டத்தொடரின் தொடக்கமாக, சீனாவின் உயரிய அரசியல் ஆலோசனை அமைப்பான மக்கள் அரசியல் ஆலோசனை மாநாட்டின் முதல் கூட்டத்தில் அதிபர் ஷி ஜின்பிங் கலந்துகொண்டார். இதில் ராணுவம் மற்றும் பல்வேறு துறைகளைச் சேர்ந்த 2,500-க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

ஊழல் புகார்கள் காரணமாகச் சீன ராணுவ உயர் அதிகாரிகள் பலர் அண்மையில் நீக்கப்பட்டனர். குறிப்பாக, ஜெனரல் ஜாங் யூஷியா உள்ளிட்ட மூத்த அதிகாரிகள் விசாரணையை எதிர்கொண்டு வரும் சூழலில், ராணுவ அதிகாரிகளுடன் ஷி ஜின்பிங் பொது மேடையில் தோன்றியது அரசியல் ரீதியாக முக்கியத்துவம் பெற்றுள்ளது.

இந்நிலையில், வியாழக்கிழமை தொடங்கவுள்ள தேசிய மக்கள் காங்கிரஸ் (நாடாளுமன்ற) கூட்டத்தில், பிரதமர் லீ கியாங் அரசின் வருடாந்திர அறிக்கையைத்தாக்கல்செய்கிறார். அதில் சீனாவின் பாதுகாப்பு பட்ஜெட் மற்றும் 15-ஆவது ஐந்தாண்டுத் திட்டத்துக்கான வரைவு அறிக்கைசமர்ப்பிக்கப்பட உள்ளது.

அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் விதித்துள்ள வர்த்தகக் கட்டுப்பாடுகள் மற்றும் வெனிசுலா, ஈரான் விவகாரங்களில் அமெரிக்காவின் ராணுவத் தலையீடுகள் சீனாவுக்குப் பெரும் சவாலாக உருவெடுத்துள்ள சூழலில், சீனாவின் இந்த வருடாந்திர முக்கிய அரசியல் அமர்வு தொடங்கியிருப்பது எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

# ஈரான் - இஸ்ரேல் போர்! வளைகுடா நாடுகளுக்கு வான் பாதுகாப்பு உதவிகள் வழங்கும் இத்தாலி!



**தெஹ்ரான், மார்ச் 5:**

வளைகுடா நாடுகளுக்கு வான் பாதுகாப்பு உதவிகளை வழங்கவுள்ளதாக, இத்தாலி பிரதமர் ஜார்ஜியா மெலோனி அறிவித்துள்ளார்.

அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் தாக்குதல்களால் ஈரானின் தலைமை மதகுரு ஆயதுல்லா அலி கமேனி, முக்கிய அதிகாரிகள் உள்பட 1,000-க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டுள்ளனர்.

கடந்த பிப். 28 முதல் நடைபெற்று வரும் இந்தப் போரில் மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள அமெரிக்க தளங்கள், கட்டமைப்புகள் மற்றும் இஸ்ரேல் ஆகிய பகுதிகளின் மீது ஈரான் படைகள் தொடர் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றன. இதனால், மத்திய கிழக்கில் உள்ள வளைகுடா நாடுகளிடையே பதற்றமான சூழல் நிலவி வருகின்றது.

இந்த நிலையில், வளைகுடா நாடுகளுக்கு வான் பாதுகாப்பு உதவிகளை வழங்குவதாக, வியாழக்கிழமை (மார்ச் 5) அன்று இத்தாலி நாட்டின் பிரதமர் மெலோனி அறிவித்துள்ளார்.

இதுபற்றி, அவர் கூறியதாவது: “பிரிட்டன், பிரான்ஸ் மற்றும் ஜெர்மனியைப் போன்று வளைகுடா நாடுகளுக்கு உதவிகளை வழங்க இத்தாலி முன்வருகின்றது. நாங்கள் வான் பாதுகாப்பு உதவிகளைப் பற்றி கூறுகிறோம். அவர்கள் நம் நட்பு நாடுகள் என்பதற்காக மட்டுமல்ல, அப்பகுதிகளில் ஆயிரக்கணக்கான இத்தாலியர்கள் வசிக்கின்றனர். அங்குள்ள சுமார் 2,000 வீரர்களை நாம் பாதுகாக்க வேண்டும்” எனக் கூறியுள்ளார்.

# ஈரான் போர்! பிரான்ஸின் மத்திய கிழக்கு ராணுவத் தளங்களில் அமெரிக்காவுக்கு அனுமதி!

**பாரீஸ், மார்ச் 6:**

மத்திய கிழக்கில் உள்ள தங்களது சில ராணுவத் தளங்களை அமெரிக்க போர் விமானங்கள் பயன்படுத்த பிரான்ஸ் அரசு அனுமதியளித்துள்ளது.

ஈரானின் அணுசக்தித் திட்டங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து கடந்த பிப். 28 முதல் அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் இணைந்து தெஹ்ரான் உள்ளிட்ட நகரங்களின் மீது தாக்குதல் நடத்தி வருகின்றன. இதனால், ஈரானில் இதுவரை 1,000-க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், ஈரான் மீதான தாக்குதலில் ஈடுபடுவதற்கு மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள தங்களது சில ராணுவத் தளங்களை அமெரிக்க போர் விமானங்கள் தற்காலிகமாகப் பயன்படுத்துவதற்கு அனுமதியளித்துள்ளதாக, வியாழக்கிழமை (மார்ச் 5) பிரான்ஸ் ராணுவம் அறிவித்துள்ளது.

அமெரிக்க போர் விமானங்கள் வளைகுடா பகுதியில் உள்ள தங்களது கூட்டாளிகளுக்குப் பாதுகாப்பு வழங்குவதால் இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, ஈரானின் தலைமை மதகுரு ஆயதுல்லா அலி கமேனி கொல்லப்பட்டதைத் தொடர்ந்து, பழிதீர்க்கும் நடவடிக்கையாக மத்திய கிழக்கில் உள்ள அமெரிக்காவின் தளங்கள் மற்றும் முக்கிய கட்டமைப்புகள் மீது ஈரான் படைகள் தாக்குதல் நடத்தி வருகின்றன.

மேலும், ஈரான் மீதான தாக்குதல்களுக்குத் தங்களது வான்வழியைப் பயன்படுத்தக் கூடாது என ஸ்பெயின் அரசு அறிவித்ததைத் தொடர்ந்து அந்நாட்டின் மீது அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் வர்த்தக தடை விதித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# ஈரான் எங்களிடம் ராணுவ உதவி கேட்கவில்லை! - ரஷிய அரசு அறிவிப்பு!

**மாஸ்கோ, மார்ச் 6:**

ஈரான் தங்களிடம் எந்தவொரு ராணுவ உதவியையும் கேட்கவில்லை என ரஷிய அரசு அறிவித்துள்ளது.

அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் படைகள் இணைந்து ஈரான் மீது கூட்டுத் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றன. தெஹ்ரான் உள்ளிட்ட பல்வேறு முக்கிய நகரங்கள் மீதான தாக்குதல்களில் இதுவரை 1,000-க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது. கடந்த பிப். 28 முதல் நடைபெற்று வரும் இந்தப் போரில், மத்திய கிழக்கில் உள்ள அமெரிக்க தளங்கள் மற்றும் இஸ்ரேலின் மீதும் ஈரான் தாக்குதல் நடத்தி வருகின்றது. ஈரான் மீதான அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் தாக்குதல்களுக்கு ரஷியா, சீனா உள்ளிட்ட நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ளன.

இந்த நிலையில், அமெரிக்கா மற்றும் இஸ்ரேலுக்கு எதிரான தாக்குதல்களுக்கு நீண்டகால கூட்டாளியான ஈரான் தங்களிடம் எந்தவொரு ராணுவ உதவிகளையும் கேட்கவில்லை என வியாழக்கிழமை (மார்ச் 5) ரஷிய அரசு அறிவித்துள்ளது.

முன்னதாக, தெஹ்ரானில் அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் இணைந்து நடத்திய தாக்குதலில் ஈரானின் தலைமை மதகுரு ஆயதுல்லா அலி கமேனி கொல்லப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# குவைத்தில் தவறுதலாக 3 அமெரிக்க விமானங்களை வீழ்த்தியது ‘டாப் கன் 2’ பட புகழ் போர் விமானம்

**குவைத், மார்ச் 6:**

வளைகுடா நாடுகளில் உள்ள அமெரிக்க படைத்தளங்களை குறிவைத்து கடந்த செவ்வாய்க் கிழமை ஈரான் தாக்குதல் நடத்தியது. அப்போது குவைத் வான்பரப்பில் 3 அமெரிக்க எப்-15 இ ஸ்டிரைக் ஈகிள்ஸ் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன.

இவை குவைத்தின் நிலத்தில் இருந்து ஏவப்படும் ஏவுகணைகளால் தவறுதலாக சுட்டு வீழ்த்தப்பட்டதாக ஆரம்பத்தில் கூறப்பட்டது. ‘நட்பு நாடுகளுக்கு இடையிலான சம்பவம்’ என கருதப்படும் இது குறித்து விசாரணை நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், அமெரிக்க தயாரிப்பான எப்/ஏ-18 ஹார்னெட் போர் விமானம் மூலமாகவே அந்த 3 விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன என்று இப்போது தெரியவந்துள்ளது.

எப் -18 ஹார்னெட் ஒரு பல்நோக்கு போர் விமானமாகும். பெரும்பாலும் அமெரிக்க விமானம் தாங்கி கப்பல்களின் தளங்களில் இருந்து இவை இயக்கப்படுகின்றன. முதல் தலைமுறை எப்-18 முதல் தற்போது வரை பல்வேறு மேம்பட்ட வடிவங்களில் இவை பல பணிகளுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன. இதில் உள்ள எப்/ஏ என்பது வான்வழித் தாக்குதல் (FIGHTER) மற்றும் தரைவழித் தாக்குதல் (ATTACK) ஆகிய இரண்டையும் ஒரே நேரத்தில் செய்யும் திறன் கொண்டது என்பதைக் குறிக்கிறது.

எப்-18 ஹார்னெட் விமானங்கள், 1986-ல் வெளியான ‘டாப் கன்’ திரைப்படத்தில் புகழ்பெற்ற அமெரிக்க கடற்படையின் எப்-14 டாம்கேட் விமானங்களைப் பின்தொடர்ந்து வந்தவை ஆகும். 2022ல் வெளியான ‘டாப் கன்-2’ திரைப்படத்தில் எப்-18 சூப்பர் ஹார்னெட்ஸ் இடம் பெற்றிருந்தன.

தற்செயலாக, முதல் பாகத்தில் முக்கிய பங்கு வகித்த விமானங்களுக்கு மாற்றாக வந்த அதே விமானங்கள் தான் இரண்டாம் பாகத்திலும் பயன்படுத்தப்பட்டன. போயிங் நிறுவனம், எப்/ஏ-18 சூப்பர் ஹார்னெட் விமானத்தை, விமானம் தாங்கி கப்பல் பிரிவுகளின் முதுகெலும்பாகக் கருதுகிறது.

# ஈரான் போர்க் கப்பலை மூழ்கடித்தது அமெரிக்க நீர்மூழ்கி: 87 வீரர்கள் உயிரிழப்பு - மீட்பு பணியில் இலங்கை



கொழும்பு: இலங்கை அருகே இந்தியப் பெருங்கடல் பகுதியில் ‘ஐஆர்ஐஎஸ் டேனா’ என்ற ஈரான் போர்க்கப்பல் மீது அமெரிக்க நீர்மூழ்கி கப்பல் தாக்குதல் நடத்தியது. அதில் இருந்த 87 வீரர்கள் உயிரிழந்தனர். அவசர அழைப்பு விடுக்கப்பட்டதால் மீட்பு பணியில் இலங்கை கடற்படை மற்றும் விமானப்படை ஈடுபட்டுள்ளது.

இந்தக் கப்பல் இந்தியாவின் விசாகப்பட்டினத்தில் கடந்த மாதம் நடந்த மிலன் 2026 கூட்டுப் பயிற்சியில் பங்கேற்றது குறிப்பிடத்தக்கது. அணு ஆயுத தடை ஒப்பந்தத்துக்கு மறுத்த ஈரான் மீது அமெரிக்கா, இஸ்ரேல் படைகள் கடந்த மாதம் 28ம் தேதி போர் தொடுத்தன. ஈரான் பதில் தாக்குதலில் இறங்கியதால், அதன் கடற்படையை தகர்க்கும் பணியில் அமெரிக்க கடற்படை இறங்கியது.

ஈரான் கடற்படையில் ஒரு நீர்மூழ்கி கப்பல் உட்பட 17 போர்க்கப்பல்கள் இருந்தன. இவற்றில் 16 போர்க் கப்பல்களை அமெரிக்க கடற்படை அழித்தது. ‘ஐஆர்ஐஎஸ் டேனா’ என்ற போர்க் கப்பல் மட்டும் இந்தியாவின் PO;L/ விசாகப்பட்டினத்தில் கடந்த மாதம் 18ம் தேதி முதல் 25ம் தேதி வரை நடந்த சர்வதேச கடற்படை கூட்டுப் பயிற்சியில் பங்கேற்றுவிட்டு, நேற்று ஈரான் திரும்பிச் சென்று கொண்டிருந்தது.

இந்நிலையில் இலங்கை அருகே இந்தியப் பெருங்கடல் பகுதியில் ‘டேனா’ போர்க்கப்பலை, அமெரிக்க நீர்மூழ்கி கப்பல் டார்ப்பிடோ குண்டு மூலம் தாக்கியது. இதையடுத்து ஈரான் போர் கப்பலில் இருந்து அவசர அழைப்பு விடுக்கப்பட்டது. சர்வதேச கடல் பகுதியில் எந்த கப்பலில் இருந்து அவசர அழைப்பு விடுத்தாலும், அருகில் உள்ள நாடு மீட்புப் பணியில் ஈடுபடுவது சர்வதேச கடமை. அதன்படி இலங்கை கடற்படை கப்பல்கள் மற்றும் விமானப்படை விமானங்கள் ஈரான் கப்பல் மூழ்கும் இடத்தில் மீட்புப் பணியை மேற்கொண்டன. இந்த கப்பலில் மொத்தம் 180 வீரர்கள் மற்றும் அதிகாரிகள் இருந்தனர். இதில் 87 வீரர்கள் உயிரிழந்தனர். 78 வீரர்கள் காயம் அடைந்தனர். இவர்களில் 32 கடற்படை வீரர்கள் மீட்கப்பட்டு இலங்கையின் கலே பகுதியில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். காணாமல் போன வீரர்களை தேடும் பணியில் இலங்கை கடற்படை கப்பல்கள் மற்றும் விமானப்படை விமானங்கள் ஈடுபட்டுள்ளன. இத்தகவலை இலங்கை நாடாளுமன்றத்தில் வெளியுறவுத் துறை அமைச்சர் விஜிதா ஹெராத் தெரிவித்தார்.

# ஈரான் தாக்குதலுக்கு அஜர்பைஜான் எச்சரிக்கை!




**டெல்அவிவ், மார்ச் 6:**

ஈரானின் ட்ரோன் தாக்குதலில் இருவர் காயமடைந்ததாக ஈரானுக்கு அஜர்பைஜான் எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஈரான் நாட்டின் ட்ரோன்கள், எல்லைதாண்டி அஜர்பைஜான் நாட்டுக்குள் நுழைந்து தாக்குதல் நடத்தியதில் இருவர் காயமடைந்ததாக ஈரானுக்கு அஜர்பைஜான் வெளியுறவு அமைச்சகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அஜர்பைஜானின் எக்ஸ்க்ளேவில் உள்ள ஒரு விமான நிலையத்தில் ஈரானின் ட்ரோன் தாக்குதலுக்கு எதிர்ப்பு தெரிவித்து, “அஜர்பைஜான் மீதான இந்தத் தாக்குதல் சர்வதேச விதிமுறைகள் மற்றும் கொள்கைகளுக்கு எதிரானது. மேலும், இது சர்வதேச அளவில் பதற்றங்களை அதிகரிக்கவும் செய்கிறது.

இந்தத் தாக்குதல் குறித்து ஈரான் இஸ்லாமிய குடியரசு தெளிவுபடுத்தி, விளக்கமளிக்க வேண்டும். எதிர்காலத்தில் மீண்டும் இதுபோன்ற சம்பவங்கள் நிகழாமல் தடுக்கத் தேவையான அவசர நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்” என்று அஜர்பைஜான் வெளியுறவு அமைச்சகம் குறிப்பிட்டுள்ளது.

மேலும், ஈரானுக்கு எதிராக பதிலடி நடவடிக்கை எடுக்கும் உரிமையைக்கொண்டுள்ளதாகவும் அஜர்பைஜான் கூறியுள்ளது.



# மாநிலங்களவை தேர்தல்: நிதிஷ்குமார் வேட்புமனு தாக்கல்

# பல்வேறு மாநில ஆளுநர்கள் மாற்றம்: ஜனாதிபதி அறிவிப்பு



# தமிழ்நாட்டின் 6 மாநிலங்களவை உறுப்பினர்கள் அறிவிப்பு



# இறுதிப்போட்டியில் இந்தியா! இங்கிலாந்தை வீழ்த்தி அபாரம்!

# கன்னியாகுமரியில் அடகுக்கடை நடத்தி 300 சவரன் நகை மோசடி: வாலிபர் கைது


தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com

Tamilnaduepaper

சென்னை 06.03.2026 வெள்ளிக்கிழமை இலவச இ-பேப்பர்